
Koviloor Acadamy

மாஸ்கோ வசந்தம்



கணேசன்

வால்கா விருந்து

சா. கணேசன்
(சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்)

அழகிரி பதிப்பகம்
11, வேளாளர் தெரு, கோடம்பாக்கம்
சென்னை-24

முதற் பதிப்பு: செப்டம்பர் 1968

விலை ரூ. 3-50

அச்சகம்: பி. என். கே. பிரஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை-26

காணிக்கை!

நம் குடும்பத் தலைவர் பேரறிஞர் அண்ணு அவர்களின் அறுபதாம் ஆண்டு பிறந்தநாளை யொட்டி அவர்தம் பொன்னடிகட்கு இந்நூலை அன்புக் காணிக்கையாக்கி மகிழ்கின்றேன்.

சா. க.

சுவைத்துச் சொல்லுங்கள்

பசுமை நிறைந்த சோவியத் ஒன்றிய மண்ணில், உடல் வளத்தோடும், வனப்போடும் காணப்படும் மக்கள் கண்களுக்கு விருந்தாகத் திகழ்கின்றனர். அவர்களுடைய பண்பாடு, பழக்க வழக்கங்கள் குறிப்பாக விருந்தோம்பல் ஆகியவை எங்களுக்கு இன்ப விருந்தாக இருந்தது.

தொழிலாளப் பெருமக்கள் கடமையுணர்ந்து அக்கறையுடன் பணியாற்றும் தன்மை எங்களுக்கு உணர்வு விருந்தாக இருந்தது.

வீரத்தின் விளைநிலமாக விளங்குகிறது அந்த நாடு.

வளங்கொழிக்கும் வால்கா நதிக்கரையில், வீரங் கமழ்கின்ற மண்ணை மிதித்த போது வீர விருந்தையுண்டு மகிழ்ந்தோம்.

வால்கா வழங்கும் அந்த விருந்தை நீங்களும் சுவைக்க வேண்டாமா? அந்த விருந்தைத்தான் உங்களிடையே படைத்திருக்கிறேன். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'

விருந்தை உண்டபின் சுவையை எனக்குச் சொல்லுங்கள்.

முன்னுரை

சென்ற ஆண்டில் சென்னைமாநகராட்சி மன்றத்தின் சார்பில் சோவியத் நாட்டுக்குச் சென்ற நட்புறவுத் தூதுக் குழுவில் யானும் ஒருவனாக இருந்ததே இந்நூல் உருவாகக் காரணமாக அமைந்தது.

வரலாற்றுப் புகழ் வாய்ந்த சோவியத் நகரங்களில் ஒன்றான வால்கா கிராடு மாநகராட்சி மன்றத்தின் அழைப்பை ஏற்றே, நாங்கள் சென்றோம். அப்போது சென்னை மாநகராட்சி மன்றத்தின் மத்தியக் குழுத் தலைவனாக யான் இருந்ததால் எனக்கும் அக் குழுவில் இடம் கிடைத்தது.

சோவியத் ஒன்றியத்திற்கு மட்டுமின்றி, போலந்து, ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளுக்கும் செல்லும் வாய்ப்பினைப் பெற்றோம்.

எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பினை, என் வாழ் நாளில் கிடைத்த பெரும்பேறாக எண்ணி மகிழ்கிறேன். இந்தப் பேற்றினை எனக்கு மனமுவந்து வழங்கிய அன்பின் திருவுருவாம் நம் அண்ணனின் பொன்னடிகளில் என் அன்புக் காணிக்கையாக இந்த நூலைப் படைத்திடுகிறேன்.

தாயகம் திரும்பியதும் நான் மேலை நாடுகளில் கண்டவற்றையும் கேட்டறிந்தனவற்றையும் ஒழுங்குபடுத்திப் பயணக் கட்டுரைகளாக 'முரசொலி' ஏட்டில் எழுத வைத்து என்னை ஊக்குவித்த, கழகப் பொருளாளரும், தமிழகப் பொதுப் பணி அமைச்சருமான மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்த நூலுக்கு அணிந்துரையும் வழங்கி என்னைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். அவர்க்கு நான் என்றும் கடமைப்பட்டவன் ஆவேன்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தலைவர் டாக்டர் மு. வ. அவர்கள் என்னுடைய கன்னி முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் இந்நூலுக்கு அணிந்துரை அளித்

திருக்கிறார்கள். அவர்கட்கும் என் பணிவார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்க் கட்டுரைகளை எழுதிய நேரத்தில் எனக்கு உதவிய 'முரசொலி' ஆசிரியக் குழாமைச் சேர்ந்த நண்பர்கள் அனைவரும் என் நன்றிக்குரியவர்கள் ஆவார்கள்.

கட்டுரைகளையெல்லாம் தொகுத்து நூல் வடிவில் அச்சிட எனக்குப் பெரிதும் உதவி புரிந்த 'நம்நாடு' துணையாசிரியரும் என் உற்ற நண்பருமான திரு. மா. செங்குட்டுவன் அவர்கட்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் வெளிவர எனக்குப் பலவகையிலும் துணையாக இருந்த நண்பர் க. துரை அவர்கட்கும் நன்றி!

என்னுடைய விருப்பமறிந்து மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவி புரிந்த பி. என். கே. அச்சகத்தாரை, குறிப்பாகத் திரு. நா. வேணுகோபால் அவர்களை நான் மறக்க முடியாது. அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

மற்றும் இந்நூல் உருவாக ஊக்கமளித்தும், உடனிருந்தும் உதவிய அத்துணை நண்பர்களையும் போற்றுகிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான் பயணம் செய்த போலந்து, ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளைப்பற்றி எழுதியுள்ள பயணக் கட்டுரைகளையும் நூலாக வெளியிடவிருக்கிறேன்.

என் முயற்சிகட்கு நாடு நல்லாதரவு தந்து ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கையோடு இந்நூலை வெளியிடுகிறேன்.

சென்னை அன்பன்

15-9-68 **சா. கணேசன்**

பொதுப்பணி அமைச்சர்

அணிந்துரை வரைவு

திராவிட முன்னேற்றக் கழகம் உரிமைக்குப் போராடுவதைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு பாடுபடத் தொடங்கிய நாளிலிருந்தே, நாட்டின் பிற பகுதிகளோடும், உலக சமுதாயத்தோடும் உறவுகளைப் பேணி வந்திருப்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் போற்றப்படுவதையும், அயல் நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் எண்ணற்றோர் நமது அன்னை மொழியைக் கற்றுப் புலமை பெறுவதையும் கண்டு பூரிப்புக் கொண்ட அதே நேரத்தில், மற்ற நாடுகளுக்குச் சென்று அங்கே மக்களுடன் கலந்துறவாடி அவர்களது வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து மகிழ்வதிலும் முன்னேற்றக் கழகத்தினர் ஆர்வம் காட்டி வந்திருக்கின்றனர். இந்த மரபையொட்டியே, நண்பர் சா. கணேசன் வால்காகிராடு மாநகராட்சி அளித்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதோடு, தாம் நேரில் கண்டவற்றையும் தம் நெஞ்சில் பதிந்தவற்றையும் பைந்தமிழில் அழகு நூலாகத் தமிழ் மக்களுக்குப் படைத்துள்ளார்.

இந்தப் பயண நூல் புறப்பட்ட தேதியையும் புள்ளி விவரங்களையும் கொண்ட சாதாரண நூலாக அமையாமல், அலுப்புத் தட்டாத ஆற்றொழுக்கான நடையில் செல்லும் சுவைமிக்க இலக்கியமாக அமைந்திருப்பது பாராட்டத்தக்கதாகும். நண்பர் சா. கணேசன் மாநகராட்சி உறுப்பினராகப் பெற்

றுள்ள நிர்வாக அனுபவமும், தமிழ் நடையைக் கையாள்வதில் அவருக்குள்ள திறமையும், தமிழ்ப் பண்பாட்டின் அரணாகத் திகழும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதி என்பதிலும், பேரறிஞர் அண்ணாவின் தம்பி என்பதிலும் அவர் கொள்கின்ற பெருமிதமுமே இந்த வெற்றிக்குக் காரணம். இல்லாவிட்டால், மமாய்க் குன்றின்மேல் வீரத்தாயின் சிலையைப் பார்க்கும்பொழுது, "செருப்பறை கேட்டு விருப்புற்று" மயங்கிய தமிழ்த் தாயின் நினைவு அவருக்கு வருமா?

இந்தப் பயணக் கட்டுரைகள் "முரசொலி"யில் தொடராக வந்தபோதே மக்களின் பாராட்டைச் சிறந்த முறையில் பெற்றன. தமிழகத்திற்கும் சோவியத் நாட்டுக்கும் இடையே நட்புறவையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதில் இந்நூல் வெற்றியடையும் என நம்புகிறேன். இத்துறையில் ஆசிரியர் தொடர்ந்து ஆர்வத்துடன் ஈடுபட்டு, மற்ற நாடுகளைப் பற்றிய பயண நூல்களை வெளியிடவும், இந்நூலுக்குத் தமிழ் மக்களின் பேராதரவு கிடைக்கவும் உளங் கனிந்து வாழ்த்துகிறேன்.

மு. கருணாநிதி

அணிந்துரை

'வால்கா விருந்து' என்னும் இந்நூல் பயண அனுபவம் நிறைந்த அறிவு விருந்தாக உள்ளது. பல ஆண்டுகளாகச் சென்னை மாநகரின் மூலை முடுக்கெல்லாம் அறிந்து, நகராட்சித் தொண்டில் சிறப்பான பங்கு ஏற்று, நகர மக்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ள திரு. சா. கணேசன் சென்னையின் நட்பு நகராகிய வால்காகிரேடின் வரவேற்பைப் பெற்று, மாஸ்கோ முதலான மற்ற நகரங்களையும் சுற்றிப் பார்த்து, முன்னேற்ற நாடுகள் சிலவற்றைக் கண்டறிந்து இந்நூலை எழுதியுள்ளார். தமிழ் நாட்டை விட்டு வெளி நாட்டைக் காணும் போதும், அவர் நினைவில் தமிழகத்தின் பல காட்சிகள் நினைவுக்கு வந்து ஒப்புமைக் கருத்துக்களையும் ஏக்க எண்ணங்களையும் விளைத்திருக்கின்றன. தமிழகம் நீர்வளம் போதிய அளவுக்குப் பெற்றிருந்தால் பெருநலமாக இருந்திருக்குமே, வால்கா கிரேடைப் போல் நகரத் தூய்மையைச் சென்னை பெறவேண்டுமே, கூவம் ஆறு வால்கா நதி போல் இன்பப் பொழுது போக்கிற்கு உரியதாக விளங்க வேண்டுமே என்றெல்லாம் அடிக்கடி உணரும் உள்ளம் படைத்தவர் அவர். சோவியத் ஒன்றியத்தின் எட்டடுக்கு மாளிகைகள் இந்நாட்டு எட்டடிக்குச்சுகளை அவருக்கு நினைவூட்டின. சோவியத் நாட்டுக் கலைக் கூடங்களில் அவருடைய நெஞ்சைப் பறி கொடுத்துப் போற்றியிருக்கிறார். அவர் பெற்ற விழுமிய அனுபவங்களுக்குப் பாரதி, பாரதி

தாசன் பாடல்களும் புறநானூற்றுப் பாடல்களும் இந்நூலில் ஆங்காங்கே விளக்கங்கள் தருகின்றன. இவ்வாறு, இப்பயண நூல் முழுதும், சோவியத் நாட்டின் சிறப்புக்கள் புலனுவதோடு, நூலாசிரியரின் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் கலையார்வமும் தொண்டுள்ளமும் அறியக் கிடக்கின்றன. சிறு நிகழ்ச்சிகளையும் சுவைபெற விளங்கும் திறன் இயல்பாக அமைந்திருப்பதால், உணவுக் கூடங்களில் அவர் உற்ற திகைப்பும், ஆற்றின் கீழ் ஓடும் ரயிலில் முன்னதாக ஏருமையால் தாமாக இரு கதவுகளும் மூடிக்கொள்ளும் தறுவாயில் அவற்றிடையே அகப்பட்ட சிக்கலும், விருந்துப் பேச்சுக்கிடையே மூக்குப் பொடி விளைத்த அமர்க்களமும், இவை போன்ற பிறவும் கற்பவரின் நெஞ்சில் நிலைத்து மகிழ்ச்சி விளைக்கின்றன.

ஏழு ஆண்டுகளுக்கு முன் சோவியத் நாட்டுக்குச் சென்று வந்த போது எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், இந்நூலைப் படிக்கும் போது மீண்டும் மனக்கண்முன் வந்து நிற்பதால், இதைப் படிப்பதே பயணம் செய்தல் போல் இன்பமாக உள்ளது.

இந்நூலின் வாயிலாகத் திரு. கணேசன் தமிழகத்துக்கும் சோவியத் நாட்டுக்கும் உள்ள நல்லுறவை வலிவுறச் செய்துள்ளார். அவருடைய நன்முயற்சியை உளமுவந்து பாராட்டுகிறேன்.


மு. வரதராசன்.

திரு. சா. கணேசன் அவர்களின் 'சோவியத் சுற்றுலா' என்ற பயணக் கட்டுரை 'முரசொலி' நாளிதழில் தொடர்ந்து வந்தது. தொடர்கட்டுரை விறுவிறுப்பாக இருந்ததோடு நம் நாட்டவர் சோவியத் நாட்டைப் பற்றி அறிந்து பயன் பெறும் வகையில் சிறப்புற அமைந்திருந்தது. அதனை நூல் வடிவில் வெளியிட எண்ணங்கொண்டோம். நகரசபை உறுப்பினரான திரு. சா. கணேசன் அவர்களை அணுகி, 'சோவியத் சுற்றுலா' தொடர் கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிட விருப்புற்றுள்ளோம் என்று கூறியபோது மகிழ்ச்சியோடு அதற்கு ஒப்புதல் அளித்தார். அவருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர் கட்டுரைகளை வெளியிட அனுமதி தந்த 'முரசொலி' ஆசிரியர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கருத்துச் செறிவுள்ள இப்பயண நூலைத் தமிழ் கூறும் நல்லுலகத்தின்முன் வைக்கிறோம். இந்நூலை ஏற்றுப் பேராதரவு தருமாறு தமிழன்பர்களைக் கோருகிறோம்.

வணக்கம்

பதிப்பகத்தார்



அறிஞர் அண்ணா அவர்களுடன் சா. கணேசன்

அண்ணா வாழ்த்தினைப் பெற்றேன்

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரின் பெயரும் பெருமையும் உலகறிந்தவை. இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக மாநகராட்சி மன்றம் அமைத்த சிறப்பும் சென்னைக்கே உரித்தானது.

உலகிலேயே மிகச் சிறந்த அழகிய கடற்கரை இந் நகருக்கு மேலும் எழிலூட்டுவதாகும்.

சமாதானத்தின் தூதுவர் என்று உலகோர் போற்றும் மாமேதை பண்டித நேரு அவர்கள் ''அறிவுக்கூடம்'' என்று சிறப்பித்த நகரமும் இதுவே. இந்திய நாட்டில் அழகு நகரம் என்ற மகுடத்தைச் சூட்டிக் கொண்ட மாநகரம் சென்னைதானே! இத்துணைச் சிறப்பும் பெற்ற இப்பட்டினத் தைப் பாரோர் பாராட்டுவது இயற்கைதானே? இதற்கு சோவியத் நாடு என்ன விதி விலக்கா? அந்த நாட்டிலுள்ள வால்கா கிராடு நகரமும் சென்னையும் நட்புறவு நகரங் களாக விளங்க வேண்டும் என்ற வால்காகிராடு நகர மக் களின் விழைவு வேண்டுகோளாகச் சென்ற ஆண்டு உருக் கொண்டது.

அவ்வெண்ணத்தை எதிரொலிக்கின்ற வகையில் வால்காகிராடு மாநகராட்சி மன்றம் வணக்கத்திற்குரிய சென்னை நகரத்து மேயர் அவர்கட்கு அழைப்பு ஒன்று விடுத்தது. மேயர் அவர்களும் அவரோடு மாநகராட்சி உறுப்பினர்கள் அறுவரும் வருகை தரவேண்டுமென அழைக்கப்பட்டோம்.

இந்த நட்புறவுப் பயணத்திற்குச் சென்னை நகரத்தி லுள்ள சோவியத் நாட்டுக் கான்சல் ஜெனரல் தோழர் கவெரின் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். மேயர் திரு. இரா. சம்பந்தம் அவர்களும், தி.மு. கழக மாநகராட்சிக் கட்சியின் தலைவர் திரு. வி. முனுசாமி அவர்

களும், முன்னுள் மேயர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மற்றும் மாநகராட்சிக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜி. விநாயகமூர்த்தி, துணைத்தலைவர் திரு. குப்புசாமி, பொருளாளர் திரு. கோதண்டபாணி, ஆகியோருடன் மாநகராட்சி மத்தியக்குழுத் தலைவனுகிய யானும் சோவியத் நாட்டிற்குச் செல்வதென முடிவாயிற்று.

இக்குழுவிற்கு மேயர் தலைமை வகித்தார். இப்பயணம் **1967**ஆம் ஆண்டு ஜூன் திங்கள் **19**ஆம் நாள் தொடங்குவதென உறுதி செய்யப்பட்டது.

வெளிநாடு செல்வதென்றால் முறைப்படிப் பெறவேண்டிய பாஸ்போர்ட், விசா ஆகியவை பெறுதலே செய்ய வேண்டிய முதற்கடமையாகும். இவைகளைப் பெறுதல் வேண்டி முறையாக விண்ணப்பங்கள் அனுப்பி அனுமதிகளைப் பெற்றோம். இப்பயணத்தை யொட்டி, நாங்கள் செல்லும் நாடுகளின் தட்பவெப்ப நிலைக்கேற்றபடி உடைகள் தேவை என்று ஏற்கனவே பயணம் சென்று வந்த நண்பர்கள் சிலர் கூறினர்.

என்னைப் பொறுத்தவரை இவ்வெளி நாட்டுப் பயணம் முதலாவதாகும். நாங்கள் சோவியத் நாட்டுப் பயணத்தை மேற்கொள்ளப் போகிறோம் என்பதை அறிந்ததும், சென்னையிலுள்ள ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசின் (கிழக்கு ஜெர்மனி) தொழிற் பிரதிநிதி, தோழர் பூம்பெல் அவர்கள் தம் நாட்டிற்கும் வருமாறு எங்களை அன்போடு அழைத்தார்கள்.

எங்கள் பயணத்தையொட்டி, நகரில் பல வழியனுப்பு விழாக் கூட்டங்கள் கழகத்தின் சார்பில் நடந்தன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்களும், மாண்புமிகு அமைச்சர்கள் நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, மதியழகன், முத்துசாமி, நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் அன்பழகன் ஆகியோரும் வெவ்வேறு இடங்களில் கலந்து கொண்டு அறிவுரையும், அன்புரையும் வழங்கி வாழ்த்தினர்.

புறப்படுவதற்கு முதல்நாள் பயண ஏற்பாட்டினை முன்னிட்டு அலைந்து கொண்டிருந்த நான், அன்று

நள்ளிரவில், அண்ணா அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். மணி பதினொன்று அடித்து முப்பது நிமிடம் ஆகியிருந்தது. தாயகத்திற்குத் தம்மை ஒப்படைத்து விட்ட அண்ணனைப் பார்த்து விடைபெறுவதன் மூலம் அவர் பொன்னான நேரத்தை வீணாக்குகின்ற நிலைக்கு ஆட்பட்டு விடுகின்றேனே என்று ஒரு பக்கத்தில் எண்ணி வேதனைப்பட்டேன். ஆனாலும் அதே நேரத்தில் ஒரு குடும்பத்தின் மூத்த அண்ணனுடைய அன்புத் தம்பிமார்களில் ஒருவனாகிய நானும் அவர் வாழ்த்தைப் பெற்று மேலை நாடு செல்வதில் பெருமகிழ்ச்சி இருக்குமல்லவா? அதை எண்ணியெண்ணி இதயம் மலர உள்ளே நுழைந்தேன்.

அப்பொழுது மணி பன்னிரண்டு அடித்துப் பத்து நிமிடம் ஆகியதைக் கையில் கட்டியிருந்த கடிகாரம் ஊமை ஜாடையாகக் காட்டிக் கொண்டிருந்தது. அன்பிற்கினிய அண்ணன் அப்போது பேராசிரியர் அன்பழகன் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்கள். நான் கொண்டு போயிருந்த மணங் கமழும் மல்லிகை மலர் மாலையை அண்ணாவுக்கு அணிவித்து வணங்கி நின்றேன்.

அறிவுக் கடல் அண்ணன், நாங்கள் புறப்படுகின்ற நேரம் பற்றியும், எந்தெந்த நாடுகளுக்குப் பயணம் செய்ய இருக்கிறோம் என்பதைப் பற்றியும், என்னிடம் வினவினார். காலை (19-6-67) விமானம் மூலம் சோவியத், போலந்து, ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளுக்குப் புறப்பட விருப்பதைப் பற்றிப் பணிவன்போடு எடுத்துரைத்தேன். ''என் அன்புத் தம்பிகள் மேலை நாட்டுப்பயணம் செல்வது பெருமை தருகிறது'' என்று கூறிப் பயணம் வெற்றியடைய வாழ்த்தினார். பின்னர் நான் மேலை நாட்டு அன்பர் சிலருக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கெனக் கொண்டு செல்லவிருந்த நூற்களில் அவரது பொன்னான கையெழுத்தை இடுமாறு வேண்டி நின்றேன். உடனே அன்புடன் கையெழுத்துமிட்டார்கள். ''திருக்குறள்'' அதைத் தொடர்ந்து அண்ணாவின் ''தம்பிக்குக் கடிதங்கள்'' ''ரங்கோன் ராதா'' நாடாளுமன்றத்தில் அண்ணா ஆற்றிய ஆங்கில உரை, ''அண்ணாவின் சிறு கதைகள்'' கலைஞர்

கருணாநிதியின் ''குறளோவியம்'', ''தேனலைகள்'' ''மணி மகுடம்'' புரட்சிக் கவிஞரின் ''அழகின் சிரிப்பு '' ''பாரதி தாசன் கவிதைகள்'' நீதி நூற்கள் பத்து, பெரும் மாறுதல் (பிக் சேஞ்ச்), சிலம்புச் செல்வரின் 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' 'முரசொலி' மாறனின் 'நாளை நமதே' ஆகிய எல்லா நூற்களிலும் கையெழுத்துப் பெற்றேன். உடன் அண்ணு அவர்களிடமும் பேராசிரியரிடமும் விடை பெற்றுத் திரும்பினேன்.

அன்றிரவு தூக்கம் சரியாக வரவில்லை. நான்கைந்து மணி நேரம் கடந்தால் விமான நிலையத்திற்குச் செல்ல வேண்டிய நேரமல்லவா? ஆகவே பயணத்திற்கு வேண்டியன எல்லாவற்றையும் சரியாகப் பெட்டியில் எடுத்துவைத்து இருக்கிறேனு என்பதைச் சரிபார்த்துக் கொண்டிருந்தேன். பயணம் செய்யப்போகும் நாடுகளைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன்; பொழுது விடிந்தது; காலை ஆறு மணி; ஜூன் திங்கள் பத்தொன்பதாம் நாள். என் வட்டத்துப் பெருமக்களும், ஆசிரிய நண்பர்களும், கழகத் தோழர்களும், உற்ருர் உறவினரும் வந்தனர்; மாலையிட்டு வாழ்த்தி, வழி அனுப்ப; அன்றைய தினம் அவர்கள் காட்டிய அன்பை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

வாழ்த்த வந்தவர்களின் மத்தியில் அகப்பட்டு எனக்கு நேரம்போனதே தெரியவில்லை. என்வீட்டுக் கூடத்தின் சுவரி லிருந்த கடிகாரம் மணி எட்டு என்பதை ஓசைமூலம் தெரி விக்கவே, குடும்பத்தோடு மீனம்பாக்கம் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டேன்.

மக்கள் திலகம் வாழ்த்து

விமான நிலையத்தில், மக்கள் திலகம் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் எங்களை வழியனுப்ப எங்களுக்கு முன்னரே வந்திருந் தார். என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சி பொங்க வரவேற்ருர்! என் அரசியல் தொண்டிலும், வளர்ச்சியிலும், அவருக்கு இருந்துவரும் அக்கறையை எப்படி என்னல் மறக்க இயலும்? மேற்கொண்டிருக்கும் பயணத்தைப்பற்றி என்னிடமும்,

மேயர் திரு. சம்பந்தம் அவர்களிடமும் அளவாளவிக் கொண்டிருந்தார்.

இதற்குள் கழக நண்பர்களும் பொது மக்களும் ஆயிரக் கணக்கில் விமான நிலையத்தை முற்றுகையிட்டு, மேயர் திரு. சம்பந்தம், கட்சித்தலைவர் திரு. முனுசாமி ஆகியோருக்கும் எனக்கும், மற்றும் குழுவைச் சார்ந்த நண்பர்களுக்கும் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவித்தனர். விமான நிலையத்தில் சிறு, சிறு மலர்க்குன்றுகளையே உண்டாக்கிவிட்டனர்!

கலைஞர் வாழ்த்தினர்

எங்கள் வழியனுப்பு விழா சிறப்புற்றோங்கும் வகையில் கழகப் பொருளாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் விமான நிலையத்திற்கு வருகை தந்து அன்போடு வாழ்த்தி மாலை அணிவித்தார்கள்.

எங்களை வழியனுப்பும் நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கோவிந்தசாமி, திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார், மாவட்டச் செயலாளர் திரு. நீல நாராயணன் ஆகியோரும் கலந்துகொண்டு மலர்மாலை அணிவித்து வாழ்த்தினர்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மா. முத்துசாமி அவர்கள் எங்கள் குழுவின் பயணத்திற்கு மேற்கொண்ட முயற்சிகளை எண்ணும் போதெல்லாம் சென்னை மாநகரத்தின் முன்னேற்றத்தில் அவர்கள் எவ்வளவு அக்கறை செலுத்துகிறார்கள் என்பதை அறிந்து வியந்தேன்.

மாலையிட்டு மகிழ்வித்து எங்களை வழியனுப்பவந்த எல்லாருக்கும் நன்றி கூறிக் கொண்டிருந்தபோது, விமான நிலைய அதிகாரி 'விமானம் புறப்பட நேரமாகிவிட்டது' என்று அறிவித்தார், நாங்கள் விமானத்தை நோக்கிப் புறப்பட்டோம். வழியனுப்ப வந்த பெரியவர்கட்கு நன்றி கூறும் வகையில் இருகைகூப்பி வணக்கம் செலுத்தி விமானத்தின் உள்ளேநுழைந்தோம். டில்லி மாநகர் வரை பேராசிரியர் அன்பழகன் அவர்களும் உடன்வர, சரியாக காலை 9-20

மணிக்கு விமானமும் சென்னையை விட்டுப் புறப்பட்டது; எங்கள் சோவியத் நாட்டுப் பயணமும் தொடங்கியது.

வானிலே மிதந்தோம்!

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து இந்திய 'காரவல்' விமானத்தில் புறப்பட்டோம். சோவியத் நாட்டின் தலைநகரான மாஸ்கோ செல்வதற்கு முன் டில்லி நகரில் இரண்டு நாள் தங்குவதென ஏற்கெனவே முடிவு செய்திருந்தோம். டில்லி நோக்கிப் பறந்து கொண்டிருந்த விமானத்தின் உள்ளிருந்து சன்னல் வழியே நிலத்தையும், நீரையும் நாட்டையும், நகரத்தையும் குறிப்பாகக் கிராமங்களையும் கண்டு களித்தோம்!

விமானப்பயணம் முதன் முறையல்லவா? ஆகவே, பேராசிரியர் அவர்கள் என்னைக் கூப்பிட்டுத் தம் அருகில் உட்காரச் சொல்லி, நிலநூல் ஆசிரியர்போல் நீண்ட விளக்கங்கள் அளித்துக் கொண்டு வந்தார். தமிழகத்தைக் கடந்து ஆந்திர நாட்டை அடைந்ததும் வற்றுத கிருஷ்ணு, கோதாவரி ஆறுகளைக் காண்பித்தார். அப்போது ' என் சிந்தனைப்பறவை சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது.

பல ஆண்டுகளாகச் சென்னை நகரின் குடித்தண்ணீர்ப் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்குக் கோதாவரி, கிருஷ்ணு குடிநீர்த் திட்டங்கள் பற்றிப் பேசுவதும் அதைத் தொடர்ந்து ஆந்திர முதலமைச்சராயிருந்த திரு. சஞ்சீவி ரெட்டியார் அவர்களை ஒருமுறை நகருக்கு வரவழைத்து வரவேற்பு அளித்ததும் என் நினைவுக்கு வந்தன். அப்போது மேயராக இருந்த திரு. அ. பொ. அரசு அவர்களின் சீரிய முயற்சியையும் நினைவுபடுத்திக் கொண்டேன்.

விந்தியத்தைக் கடந்தோம்!

இதற்குள் எங்கள் விமானம் விந்தியமலையைக் கடந்து மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகியவைகளை அடைந்தது.

நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த விமானத்திலிருந்து கங்கைப் பெருநதியினைப் பார்த்தேன். வற்றுத இந்நதி, தான் பாய்கின்ற மாநிலங்களில் வளத்தைக் கொழித்து வாழ்வைப் பெருக்கும் சிறப்பை எண்ணி வியந்தேன். இப்படிப்பட்ட பெருநதி தமிழகத்திலும் இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சுதான் வந்தது. இந்தியா பெருநாடாகத் திகழ்வதில் பெருமையுண்டு; பாரோர் புகழ்கிறுர்கள் என்றெல்லாம் சொல்லக் கேட்கிறேம் அல்லவா? அதனுல்தான் போலும், சிறந்த நிர்வாகி எனப் பெயர் பெற்ற டாக்டர் சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் இந்திய அரசுக்கு அரிய யோசனை ஒன்றைத் தெரிவித்தார்கள்.


ஏட்டிலே இருக்கின்ற ஒருமைப்பாட்டை, நாட்டிலே நடைமுறைக்குக் கொண்டுவரவும், சீரான வளத்தை உண்டாக்கவும், கங்கை நதியைத் தென்னகத்திற்குக் கொண்டுவந்து கிருஷ்ணு, கோதாவரி, காவிரி ஆகிய நதிகளோடு கலக்கச் செய்ய வேண்டும் என்ற சிறந்த திட்டத்தை அவர் அளித்தது என் நினைவுக்கு வந்தது. காவிரி பாய்கின்ற நாட்டாராகிய நாம், வெற்றிலையைக் கொடுத்துக் கங்கை பாய்கின்ற பகுதியிலே விளையும் கோதுமைப் பண்டத்தைக் கொள்ளுவோம் என்ற பாரதியின் வாணிகத் திட்டமும் நினைவுக்கு வந்தது.

''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்''

என்ற பாரதியின் கவிதை வரிகளை என் வாய் முணுமுணுத்தது. பேராசிரியரின் சுவையான பேச்சும், கருத்தும் நேரம் போவதே தெரியாமல் செய்துவிட்டன. இதற்குள் விமானம் 'டில்லி பாலம் விமான நிலையத்தை' அடைந்தது.

இந்தியத் தலைநகரில்!

எங்கள் மேலைநாட்டுப் பயணத்தைச் சிறப்பாக ஆக்கப் பாடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. இராசாராம் அவர்களும் எங்களுடன் சென்னையிலிருந்து வந்திருந்தார். விமான நிலையத்திலிருந்து நேராக திரு. இராசாராம்



புது டில்லியில் தலைமையமைச்சர் திருமதி. இந்திரா காந்தியுடன் தூதுக் குழுவினர். திரு. க. இராசாராம் M.P., அவர்களும் படத்தில் உள்ளார்

அவர்கள் எங்களை சாணக்கியபுரிக்கு அழைத்துச் சென்றார். அங்கேதான் தமிழக அரசின் மாளிகையான 'தமிழகம்' இருக்கிறது. அங்கே எங்களைத் தங்கச் செய்துவிட்டு அவர், உடனே அங்கிருந்து நாடாளுமன்ற அலுவலகத்திற்குச் சென்றார்; இந்தியத் தலைமையமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்தார்.

பகலுணவை முடித்துக் கொண்ட நாங்கள் மூன்று மணிக்கு நாடாளுமன்றத்திற்குச் சென்றோம்.

குறித்த நேரப்படி அங்கு எங்கள் சந்திப்புக்குத் தலைமை அமைச்சர் ஆயத்தமாயிருந்தார்கள். நாங்கள் அவர்கள் இருந்த அறைக்குச் சென்றோம். இரு கைகூப்பி வணங்கினோம். அவரும் புன்னகை பூத்தபடி வணக்கம் கூறி உட்காரச் சொன்னார். எங்கள் இரஷ்ய நாட்டுப் பயணம் குறித்துப் பேசினார்; பயணம் வெற்றியடைய வாழ்த்தினார்.

வாழ்த்தியதுமட்டுமன்றி எங்கள் பயணம் சிறக்க நாங்கள் சென்ற நாடுகளிலுள்ள தூதுவர்களுக்கு அறிவித்து ஒத்துழைக்க ஏற்பாடும் செய்தார். தலைமை அமைச்சர் சந்திப்பு பதினைந்து நிமிடத்தில் முடிந்தது. பின்னர் நாங்கள் விடை பெற்றுத் 'தமிழக மாளிகை'' நோக்கிப் புறப்பட்டோம். டில்லியில் தங்கியிருந்த போது நாங்கள் பயணம் மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்த நாடுகளின் தூதுவரலுவலகங்களுக்குச் சென்று தூதுவர்களைக் கண்டோம். அவர்கள் இன்முகத்தோடு வரவேற்று விருந்தளித்தனர். இப்படி மூன்று நாள்கள் உருண்டோடிவிட்டன!

ஜூன் திங்கள் 22ஆம் நாள் காலை 8-30 மணிக்கு பாலம் விமான நிலையத்திற்குச் சென்றோம். டில்லி நகரில் தங்கியிருந்தபோது எங்கள் பயணத்திற்கு வேண்டிய அனைத்து வேலைகளையும் திரு. இராசாராம் அவர்களே சிறப்பாகச் செய்து முடித்தார்கள். பணியாற்றுவதிலும், காரியத்தை முடிப்பதிலும் அவர் காட்டும் சுறுசுறுப்பும் செயற்றிறனும் அனைவரும் அறிந்தனவே. எங்கள் பயணத்தையொட்டி அவர் ஆற்றிய உதவிக்கு நாங்கள் மிகவும் கடமைப் பட்டவர்கள் ஆவோம்.

மாஸ்கோ செல்லும் விமானம் காத்துக் கொண்டிருந்தது; வழியனுப்ப நாடாளுமன்ற தி.மு. கழகக் குழுத் தலைவர் பேராசிரியர் அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. இரா. செழியன், திரு எஸ். கே. சம்பந்தம் ஆகியோர் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். எங்களோடு திரு. இராசாராம் அவர்களும் உடனிருந்தார். விமானம் புறப்படும் நேரம் வந்தது. குழுவின் தலைவர் மேயர் திரு. சம்பந்தம் அவர்களுக்குப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் மாலை அணிவித்தார்கள். எல்லோரும் வழியனுப்ப வந்தவர்களிடம் விடை பெற்றோம். மேயர் குழுவினர் எல்லோருக்கும் டில்லி நண்பர் கர்தார்சிங் மாலை அணிவித்தார். இந்திய 'போயிங்' விமானத்தில், நாங்கள் எல்லோரும் ஏறிக் கொண்டோம்; விமானம் புறப்பட்டது, மாஸ்கோ என்னும் திருநகர் நோக்கி!

வெள்ளிப்பனிமலை மீது ...!

இந்திய எல்லையைக் கடக்கின்றபோது எங்கள் கண்களுக்குப் பட்டதெல்லாம் பெருமலையாம் இமயமலை ஆகும். பலமலைகள் விட்டு விட்டும், ஒன்றை அடுத்து ஒன்றும் கணக்கில்லாமல் நூற்றுக்கணக்கான மைல் நீளத்தில் உயர்ந்தும், பரந்தும், விரிந்தும் வானை முட்டுமளவிற்குக் காட்சியளித்தன. கவிஞர் பாரதியார் கூறினரே ''வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்'' என்று, அந்தப் பாடல் என் நினைவுக்கு வந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இமயம் வரை சென்று வடவரைவென்ற சேரன், தமிழ்ப் பெருவீரன் செங்குட்டுவனின் மரபு வந்தவர்களல்லவா நாம் என்ற பெருமையை ஒரு கணம் எண்ணினேன்; இறும்பூதெய்தினேன்!

இன்றையத் தமிழர் தம் நிலையையும் எண்ணிப் பார்த்தேன். என் கண்களில் நீர் கசிந்ததுதான் மிச்சம். இதற்குள் ஒரு விமானப் பணிப்பெண் அருகில் வந்து தாம் கொண்டு வந்த உணவுத் தட்டை எதிரில் வைத்தார்; தட்டிலிருப்பதைப் பார்த்தேன். நான் உண்ணப் பழமும்,

ரொட்டித் துண்டுகளும், வெண்ணெயும், காபியும் இருந்தன. பகலுணவை விமானத்திலேயே முடித்துக் கொண்டோம். பறந்து கொண்டிருந்த விமானம் தரையிலிருந்து 35,000 அடி உயரத்தில் மணிக்கு எண்ணூறு கிலோ மீட்டர் வேகத்தில் செல்வதாகவும் அந்தப் பணிப்பெண் அறிவித்தார். முற்றிலும் கடக்க முக்கால் மணிநேரம் பிடித்தது.

மாஸ்கோ மண்ணில்!

விமானம் இந்திய எல்லையைக் கடந்து சோவியத் நாட்டின் எல்லையைத் தொட்டு விட்டது! இந்திய நாட்டின் விமானம் சந்திக்கும் விமானநிலையமே 'டாஷ்கண்ட்' ஆகும். 'டாஷ்கண்ட்' என்ற அந்தச் சொல்லே 'சமாதானம்' என்ற பொருளுக்கு உரித்தானதாகி விட்டதல்லவா? ஆனால் எங்கள் விமானம் டாஷ்கண்டில் இறங்கவில்லை.

முந்திய ஆண்டுதான் இந்தியத் தலைமையமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி, பாகிஸ்தான் ஆட்சித்தலைவர் அயூப்கானுடன் சமாதான உடன்படிக்கை கண்டார். அதற்குப் பெரும்பங்கைச் செலுத்தியவர் சோவியத் தலைமை அமைச்சர் கோசிஜின் அவர்கள் ஆவார்கள். சமாதானத்தைக் கண்ட இடமே டாஷ்கண்ட் என்பது அந்த நேரம் நினைவுக்கு வந்தது.

விமானம் மாஸ்கோ விமான நிலையத்திற்கு வந்திறங்கியது. அப்போது சுமார் மாலை நான்கு மணியிருக்கும். வால்கா கிராடு நகர சர்வதேச உறவு அதிகாரி தோழர் பொலியகோவ், மொழி பெயர்ப்பாளர் திருமதி லூசி. பர்சோவா, இந்தியத் தூதுவரக முதல் அதிகாரி திரு. வெங்கடேசுவரன் ஆகியோர் எங்களை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். நிலையத்திலிருந்து வெளியேற அரை மணிநேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஏனெனில் பாஸ்போர்ட், விசா, உடல்நலச் சான்றிதழ் ஆகியவை சரி பார்க்கப்படும் 'சடங்கு' நடக்கவேண்டுமல்லவா? திரு. வெங்கடேசுவரன் எங்களை அன்புடன் வரவேற்றார்.

அதுபோலவே ருஷியர்களின் வரவேற்பிலும் அன்பு கலந்திருந்தது. திரு. வெங்கடேசுவரன் அவர்கள் மட்டும் தம் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டார். தோழர் பொலியகோவ் தாம் கொண்டு வந்திருந்த காரில் எங்களை ஏற்றிக் கொண்டு நேராக உக்ரெயின் என்ற சர்வ தேச ஓட்டலுக்கு அழைத்துச் சென்ருர். அந்த ஓட்டல் ஒரே நேரத்தில் ஆயிரம்பேர் உட்கார்ந்து உணவு கொள்ளும் அளவிற்குப் பெரிய உணவுக்கூடத்தை உடையது. முப்பத்தொரு மாடிகள் கொண்ட அந்த ஓட்டல் விண்ணை முட்டி நின்றது! ருஷிய மண்ணில் உண்ட முதல் சிற்றுண் டியின் சுவையே தனித்தன்மையுடையதாக இருந்தது! ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் ஆகிவிட்டது, சிற்றுண்டி முடிப்பதற்கு! அங்கிருந்து நேராக இந்தியத் தூதுவ ரகத்திற்குச் சென்ஞேம்.

இந்தியத் தூதுவருடன்

இந்தியத்தூதுவர் திரு. கேவல்சிங் அவர்கள் தம் அலுவலகத்தில் ஒரு தேநீர் விருந்து ஏற்பாடு செய்திருந்தார். ''டில்லியிலிருந்து எப்போது புறப்பட்டீர்கள்?'' என்ற கேள்வியிலிருந்து தொடங்கி, இந்திய நாட்டைப் பற்றிப் பொதுவாக மனம்விட்டுப் பேசலானுர். ஆனுலும் இராஜ தந்திர முறையோடு அவர் பேச்சு அமைந்திருந்தது.

பாண்டிச்சேரிப் பகுதிக்குச் சிலஆண்டுகள் கவர்னராகப் பணியாற்றியபோது ஏற்பட்ட அரசியல் அனுபவங்களைத் தம் பேச்சில் அவர் குறிப்பிட்டார். இன்றைய அரசியல் சூழ்நிலை பாண்டிச்சேரியில் எவ்வாறு உள்ளது என்பது பற்றியும், கவர்னராக அவர் பதவி வகித்த காலத்தில் நடந்த சில நிகழ்ச்சிகள் பற்றியும் எங்கள் நினைவுக்கு வந்தவைகளை எடுத்துரைத்தோம்.

தமிழக அரசு பற்றிய பேச்சும், இடை இடையே வந்தது! தமிழகத்திலேயிருந்து வந்திருந்த எங்களுக்குத் தமிழகம் பற்றிப் பேசத் தொடங்கியதும் ஆர்வம் ஏற்பட்டது. அந்த ஆர்வத்தோடு மேயர் திரு. சம்பந்தம்

அவர்களும், நானும் பேச்சில்கலந்து கொண்டோம். வழக்கம் போலக் கட்சித் தலைவர் திரு. முனுசாமி அவர்களும் கலந்து கொண்டார், என்பதைச் சொல்லத் தேவையில்லை.

உணவுப் பிரச்சினை பற்றிய கேள்வி எழுந்தபோது, அறிஞர் அண்ணா அவர்களும் உணவமைச்சர் மாண்புமிகு மதியழகன் அவர்களும் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியின் பயனாக இப்போது தமிழகத்தில் முதற் கட்டமாக ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசி என்ற திட்டத்தை 'ரேஷன்' நடை முறையிலுள்ள பகுதிகளில் குறிப்பாகச் சென்னை நகரிலும், கோயம்பத்தூர் நகரிலும்—கொண்டு வந்திருப்பதை எடுத்துக் கூறினோம்.

தூதுவர் திரு. கேவல்சிங் அவர்கள் உள்ளந்திறந்து பேரறிஞர் அண்ணா அவர்களையும் தமிழகத்தில் அமைந்துள்ள புதிய அரசையும் பாராட்டினார்கள். மற்றும் சோவியத் நாட்டு நிலைகளைப்பற்றியும் தம் அனுபவங்களை எடுத்துச் சொன்னார்கள்.

நாங்கள் தூதுவர் திரு. கேவல்சிங், முதல் செயலாளர் திரு. வெங்கடேசுவரன் இரண்டாம் செயலாளர் திரு. வேங்கடத்தான் (அங்குத் தம் பெயரை 'தான்' என்றே சுருக்கி வைத்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்கள் அழைப்பதும் அப்படியே ஆகும்) ஆகியோரிடமிருந்து விடை பெற்று அலுவலகத்திலிருந்து வெளியே வந்தோம்.

தாயகத்தை நினைத்து...

இரவு 7-15 மணிக்கு (சோவியத்நேரம்) விமானம் புறப்படவிருக்கிறது என்று நிலைய அறிவிப்புக் கேட்டோம். தாயகத்தின் நினைவு காரணமாக அஞ்சல் எழுதும் வேட்கை எழுந்தது. உடனே ஒவ்வொருவரும் அஞ்சல் எழுத ஆரம் பித்தோம். நான் எழுதியவை இரண்டு கடிதங்களே; ஒன்று அறிஞர் அண்ணா அவர்கட்கும், மற்றொன்று கலைஞர் கருணாநிதி அவர்கட்கும் ஆகும். 'இன்னும் பத்து நிமிடங் களே இருக்கின்றன; புறப்படுவோம்' என்று எங்களுக்குத் துணையாக இருந்த மொழிபெயர்ப்பாளப் பெண்மணி

திருமதி லூசி பர்சோவா கூறினர். நம் நாட்டில் இரயிலில் கூட்டங் கூட்டமாக மக்கள் பயணம் செய்வதுபோல், அங்கு சோவியத் மக்கள் விமான நிலையத்தில் கூட்டங்கூட்டமாக, குடும்பம் குடும்பமாக விமானத்திற்குக் காத்திருந்தார்கள். ''எப்போதும் இப்படித்தான் விமானத்திற்கு மக்கள் கூட்ட மாகக் காத்திருப்பார்களா?'' என்று திருமதி லூசி அவர் களைக் கேட்டேன்.

'இங்கு விமானத்தில் மக்கள் பயணம் செய்வது அதிகந் தான். அதிலும் குறிப்பாக விடுமுறை நாள்களில், அதாவது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இன்னும் அதிகமாகவே இருக்கும்' என்ருர்.

'ஏரோபிளாட்' என்று கூறப்படும் விமானத்தில் ஏறினேம்; குறித்த நேரத்திற்கு விமானமும் புறப்பட்டது. இந்த விமானத்தில் பொலிவைக் காணேம். விமானத்தில் உள்ள சோவியத் பெண்மணியும் எளிய உடையில் தோற்ற மளித்தார்; இயற்கையழகைத் தவிர செயற்கை அழகில் மூழ்கவில்லை! சோவியத் மக்கள் பயனைக் கருதிக் கருவிகள் செய்கிருர்களே தவிர, ஆடம்பரத்திற்கு அல்ல என்பதை அறிந்து வியப்புற்றேன். பயணம் செய்து கொண்டிருந்த போதே பக்கத்திலிருந்தவர்களோடு பேசமுயன்றேன்.

விளையாட்டு வீரர்களோடு

ஆங்கிலம் சிறிது அறிந்தவர்களாக இருந்தார்கள். முன்னல் உட்கார்ந்திருந்த இரண்டு இளைஞர்களைக் கண்டேன். உடலமைப்பும், தோற்றமும் அவர்கள் விளையாட்டு வீரர்கள் என்பதைச் சொல்லாமற் சொல்லின. உடனே என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மேயர் அவர் களுக்கு அவர்களிருவரையும் சுட்டிக் காட்டினேன். அவர் களுடன் பேச மேயருக்கும் கொள்ளை ஆசை; ஏனெனில் அவரும் விளையாட்டு வீரரல்லவா?

விளையாட்டு வீரர்களோடு பேசத் தொடங்கினேம். புன்னகை தவழ எங்களைப் பார்த்துப் பந்தைக்காட்டி

அதற்குப் பின்னர் தாங்கள் கால் பந்தாட்டத்தில் வெற்றி அடைந்து அதற்குப் பரிசாகப் பெற்ற வெண்கலத்தாலான பெரிய கோப்பை ஒன்றையும் காண்பித்தார்கள். உடனே மாணவனுயிருந்தபோது பச்சையப்பன் விளையாட்டுத் திடலில் 'நேதாஜி ஸ்போர்ட்ஸ் கிளப்' (நேதாஜி விளையாட்டுக் கழகத்தின்) உறுப்பினராக இருந்து கால்பந்து ஆடியது என் நினைவுக்கு வந்தது. அப்போதெல்லாம் அந்தக் கால்பந்தாட்டக் குழு வெளி மாவட்டங்களுக்குச் சென்று போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று வெள்ளிக் கோப்பைகளைப் பரிசாகப் பெற்று வந்ததும் என் நினைவுக்கு வந்தது. அந்தக் குழுவின் தலைவர் திரு. வடிவேல் அவர்கள் பரிசைப் பெற்று வருவது எனக்குப் பெருமகிழ்ச்சி யளிக்கும். அதற்குக் காரணம் அவர் அப்போதும் நமது கழகத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததேயாகும்.

அந்த விளையாட்டு வீரர்கள் தம் இரஷ்ய மொழியில் சில சொற்களைக் கூறிக்கொண்டே ஆங்கிலத்தோடு சேர்த்துச் சைகை காட்டினர், நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக. சோவியத் கால்பந்தாட்டக் குழுவினர் பல முறை நம் தாயகத்திற்கு வந்து விளையாடி வெற்றி கண்டு எங்கள் இதயங்களையும் குறிப்பாக விளையாட்டு ரசிகர்களின் உள்ளங்களையும், கொள்ளை கொண்டு சென்றிருக்கிறுர்கள் என்பதையும் எடுத்துக் கூறினேம்.

பேசிக் கொண்டேயிருந்ததில் நேரம் போனதே தெரிய வில்லை. விமானத்தில் இருந்த பணிப்பெண் ஒருவர் "வால்காகிராடு வந்துவிட்டது; பெல்ட்டைக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்ற அறிவிப்பை ஒலி பெருக்கி மூலம் தெரியப்படுத்தினுர். விமானம் வால்காகிராடு விமான நிலையத்தில் வந்திறங்கியது. அப்போது சோவியத் நேரம் இரவு 10-15 மணி ஆகும்.

பயணிகள் ஒவ்வொருவராக இறங்கினுர்கள். எங்கள் குழுவின் தலைவர் மேயர் அவர்கள் முன் சென்று இறங்க, நாங்கள் அவரைப் பின் தொடர்ந்தோம்.



வால்கா கிராடு நகரிலுள்ள போர்க்கருவி காட்சிக் கூடத்தில். போரில் கைப்பற்றிய இட்லரின் சுவஸ்திக் கொடிகள் கீழே இருப்பதைக் காண்க.

வால்காகிராடின் வரவேற்பு

எங்களை வரவேற்க வால்காகிராடு நகரத் துணை மேயரும் ஏழெட்டு உறுப்பினர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் மாலை அணிவிப்பதற்குப் பதிலாக காரனேஷன் பூவினைக் (ரோசாவைப் போன்ற அளவில் சிவப்பாக இருக்கும்) கொத்துக் கொத்தாக முதலில் மேயர் அவர்களுக்கும் பின் ஒவ்வொருவருக்கும் கையில் கொடுத்துக் கைகுலுக்கி வரவேற்றார்கள்.

விமான நிலைய வரவேற்பு முடிந்ததும் நேராக எங்களை அந்நகரிலுள்ள பெரிய ஓட்டல்களில் ஒன்றான 'இன்டூரிஸ்ட்' விடுதிக்கு அழைத்துச் சென்றார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அறை ஒதுக்கினார்கள். நான் கொண்டு சென்றிருந்த பெட்டியையும் சிறு கைப்பையையும், அறையிலே வைத்துவிட்டு கால்சட்டையையும், கோட்டையும் கழற்றி விட்டுச் சட்டையும் வேட்டியும் அணிந்து மேலே வழக்கமாகப் போட்டுக் கொள்ளும் துண்டுடன் வெளியேவந்தேன். மற்ற நண்பர்களும் குறிப்பாக மேயரும் வேட்டியுடனும் சட்டையுடனும் காட்சி அளித்தார்கள். எல்லோருமாகக் கீழே இறங்கினோம், இரவு உணவுக்கு.

மணி அப்போது சரியாகப் பதினொன்று. எங்களோடு இருந்த தோழர் பொலியகோவ், திருமதி லூசி ஆகியவர்கள் எங்களை மாளிகையின் முன்புறத்தில் இருக்கும் உணவுக் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். நல்ல சத்துள்ள உணவு உண்டோம்.

மறுநாள் காலை பத்து மணி அளவில் நேராக மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்றோம். துணைத்தலைவர் தோழர் ஜொலொடரேவ் அவர்களும் மற்றும் மன்ற உறுப்பினர் சிலரும் வரவேற்பில் கலந்து கொண்டனர்.

தேநீர் விருந்துடன் ஆரம்பித்தது வரவேற்பு. மிகவும் பழகியவர்கள்போல் கலந்துரையாடினர். அந்நகரத்துணைத் தலைவர் எங்கள் குழுவை வரவேற்றுப் பேசினார். பின்னர் நமது மேயர் திரு. சம்பந்தம் அவர்கள் நன்றியுரை



வால்காகிராடு நகரில் போர்க்கருவிகள் காட்சிக் கூடத்தில்

யாற்றுகையில், சென்னை மாநகரின் சிறப்பையும், மாநகராட்சி நிர்வாக முறையையும் விளக்கினர். 'சோவியத் மக்கள் இந்திய மக்கள்பால் வைத்திருக்கும் அன்பையும், பரிவையும் என்தாய்நாட்டு மக்களிடம் உறுதி யாய்க் கூறுவேன்' எனக்கூறி முடித்தார்.

வீரகாதை கூறும் காட்சிகள்!

வரவேற்பு முடிந்ததும் போர்க் கருவிகள் அடங்கிய காட்சிக் கூடத்திற்குச் சென்றோம். அதன் நிர்வாகி ஒரு பெண்மணி. அவர் எங்களை வரவேற்றார். உள்ளே நுழைந்ததும் இரண்டாம் உலகப் போரில் சோவியத்தின் பங்கையும் அதன் வெற்றியையும், அவ்வெற்றியில் பங்கு கொண்ட வால்காகிராடு மக்களின் வீரத்தையும், சிறப்பாக விளக்கினர். புகைப்படங்கள் மூலம் அவர்கள் பயன் படுத்திய போர்க் கருவிகளைக் கண்டோம். போர்முனையில் சோவியத் பட்டாளம் வீரப்போர் புரிந்த காட்சியையும் படங்களில் காணுகின்ற போதுகூட உணர்ச்சி பெருக்கெடுக் கிறது.

ஓரிடத்தில் பனிக்கட்டிகள் உருகும், அந்நிலையிலும் போர்வீரர்கள் துப்பாக்கியுடன் மறைந்தும், நெளிந்தும், தரையோடு படுத்தும் இருக்கும் காட்சியைச் சித்தரித்துக் காட்டியிருக்கிறார்கள்.

அத்துடன் போரில் ஜெர்மானியர்களை வீழ்த்தி அவர் களிடமிருந்து கைப்பற்றிய போர்க் கருவிகளையும், கொடி யையும் கண்டோம். அங்கு வைக்கப்பட்டிருக்கும் பார்வை யாளர்கள் குறிப்பேட்டில், மேயர் அவர்கள், தம் குழுவின் சார்பில் எழுதினர். போரில் சோவியத் நாடு வெற்றி கண்டதைப் பற்றியும், போர் வீரர்கள் காட்டிய வீரத்தைப் பற்றியும், குறிப்பிட்டுப் பாராட்டி எழுதினர்.

இது முடிந்ததும், பகல் உணவுக்காக நேரே நாங்கள் தங்கியிருந்த மாளிகைக்குச் சென்றோம். உணவு முடிந்ததும் அரைமணி நேரம் ஓய்வு பெற்றோம்.

பகலுணவுக்குப்பின் நிகழ்ச்சிகள் மீண்டும் துவங்கின.

தியாகச் செம்மல்கட்கு வீர வணக்கம்

மறைந்த மாவீரர்கள் நினைவுச் சதுக்கத்திற்குச் சென்றோம். நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலேயே அந்தச் சதுக்கமிருந்ததால் நடந்தே சென்றோம். இரண்டாம் உலகப் போரில் (விடுதலைப் போர்) மறைந்த மாவீரர்களுக்கு நாங்கள் வீரவணக்கம் செலுத்துவதற்காக மலர் வளையம் கொண்டு வந்தார் தோழர் பொலியகோவ்.

அவ்விடத்தில் நினைவுச் சின்னமாகப் பெரிய மேடையொன்று கட்டியிருக்கிறார்கள். அம்மேடைமேல் ஒரு தூண் காட்சியளிக்கிறது. மேடையிலே பகலெல்லாம் மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகின்ற வகையில் ஒரு தட்டில் தீப்பொறி பறக்க ஜுவாலை வீசிக்கொண்டே இருக்கிறது. காலை முதல் மாலை 6 மணி வரை அந்தத் தீச்சுடர் எரிந்து கொண்டேயிருக்கிறது.

இந்நகருக்கு வருகின்ற மக்கள் உள்நாட்டினராயினும், வெளிநாட்டினராயினும், மாவீரர்களுக்கு வீரவணக்கம் தெரிவிக்கும் வகையில் மலர் வளையம் வைத்து ஓரிரு நிமிடங்கள் மௌனமாக நிற்கிறார்கள். பள்ளிச் சிறுவர்கள் ஆயிரக்கணக்கில் வந்து பார்த்துப் போகிறார்கள்.

அந்த மேடையின் இருமருங்கிலும், இளம் மாணவர் இருவர் இராணுவ உடை அணிந்த நிலையில் கையில் துப்பாக்கியுடன் காட்சியளிக்கிறார்கள். பதினைந்து நிமிடத்திற்கு ஒருமுறை இந்த இளம் போர் வீரர்கள் மாறிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் வீரநடைபோட்டு வருவது பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கிறது; வருகின்ற மக்களுக்கு வீரத்தை ஊட்டுவதாகவும் இருக்கிறது.

எங்கள் வருகையையொட்டி அங்கு மக்கள் ஆயிரக் கணக்கில் கூடியிருந்தார்கள். நாங்கள் எடுத்துச் சென்ற மலர் வளையத்தைக் கல்லறையின் மீது வைத்து இரண்டு நிமிடம் அமைதியாக நின்று வீரவணக்கம் செலுத்தினோம்.

போர்க் கருவிகள் காட்சிக் கூடத்தைப் பார்த்த பின்னர், பகலுணவுக்காக நேராக நாங்கள் தங்கியிருந்த 'இன்டூரிஸ்ட்' ஓட்டலுக்கு வந்தோம்.

உணவு முடிந்ததும் ஓய்வு எடுத்துக் கொண்டோம். பகல் மணி மூன்றானதும் தோழர் பொலியகோவும், திருமதி லூசி அவர்களும் எங்கள் இடத்திற்கு வந்தனர்.

மணம் பரப்பும் மலர்ப் பூங்காக்களிடையே!

வால்கா நகரின் மத்தியில் ஓடும் நதியின் கரையைப் பார்க்கச் சென்றோம். கரையைப் பார்க்கவே கவர்ச்சியாக இருக்கிறது. கரையோரம் முழுதும் 'பூங்கா'; அடர்த்தியான செடி, கொடிகள்; அன்று மலர்ந்த ரோசா இன்ன பிற மலர்களெல்லாம் மணம் வீசிக் கொண்டிருந்தன. அக்காட்சி எங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அந்தப் பூங்காவின் இடையே சிமெண்டுப் பாதை போடப் பட்டிருக்கிறது.

நாங்கள் அங்குச் சென்றிருந்தவேளை மாலை நேரமாகையால், குடும்பம், குடும்பமாக ஆடவரும் பெண்டிரும் பொழுது போக்கக் குழந்தைகளுடன் அங்கு வந்து தங்குவதும், குழந்தைகள் ஓடுவதும், ஆடுவதும், மழலை மொழி பேசுவதும் எங்களை இனந்தெரியா மகிழ்ச்சியில் திளைக்கச்செய்தன.

அந்த நேரத்தில் சென்னை மாநகரின் அழகான கடற்கரையில் உள்ள ''காதலர் பாதை'' எங்கள் நினைவிற்கு வந்தது. இந்நகருக்குக் கடற்கரை இல்லாத குறையை இந் நதியின் கரை நிறைவு செய்கிறது. இளங்காதலர்கள் கைகோத்து, மன மகிழ்வோடு உலாவ வருவதையும், கலகலவென்று சிரித்து அளவளாவுவதையும் பார்த்து, 'அங்கு மக்களுக்குச் சுதந்திரம் இல்லை, அவர்கள் இயந்திரம் போல் வேலை செய்வது போக வேறொரு சுகமும் அறியார்' என்ற கருத்துத் தவறானது என்பதை உணர்ந்தேன்.

அங்கிருந்து புறப்பட்டு வால்காகிராடின் மத்திய நெடுஞ்சாலைக்கு வந்து சேர்ந்தோம். நீண்ட அகன்ற அந்த அழகான பாதைக்கு மறைந்த மாவீரர் லெனின் பெயரை வைத்திருக்கிறார்கள்.

அந்த நாட்டிற்கே பெருந்தலைவராக லெனின்



மாவீரர் லெனின் சிலையருகில் தூதுக் குழுவினர்

வீற்றிருந்ததைப் போல அம்மாநகரத்திற்கும் 'லெனின் அவென்யூ'தான் சிறந்த பாதையாக அமைந்திருக்கிறது. பாதையின் நடுவில் சுமார் முப்பது அடிக்கு ஒரு பூஞ்சோலை! பச்சைப் பசேலென்று இருக்கும் செடிகளும்; கொடிகளும் கண்ணுக்குக் குளிர்ச்சி தருகின்றன.

அப்பாதை வழியேதான் எங்கள் கார்கள் லெனின் சதுக்கத்தை நோக்கிப் புறப்பட்டன. அங்கு வண்டிகளெல்லாம் வலப்புறம் போக வேண்டும் என்று போக்குவரத்து விதி இருக்கிறது.

லெனின் சதுக்கத்தை நோக்கிக் காரோட்டும் தோழர்களை எவ்வளவு போற்றினாலும் தகும். ஏனெனில், நாங்கள் தங்கியிருந்த நாட்களில் எந்த விதமான விபத்தும் நேராமல் முறையாகக் கார்களை ஓட்டினார்கள்.

அதுமட்டுமன்றி காலையிலிருந்து இரவுவரை எங்கள் நிகழ்ச்சிகள் தங்கு தடையில்லாமல் நடைபெற்றுக் கொண்டு வந்தன என்றால், அந்தக் கார் ஓட்டிய தோழர்களுக்கும் அதில் பங்குண்டு!

வீரர் சிலையருகில்!

சில நிமிடங்களுக்குள்ளாகவே நாங்கள் லெனின் சதுக்கத்தை அடைந்து விட்டோம். அந்தப் பரந்த அழகான இடத்தில் லெனின் சிலையைக் கண்டோம். பத்தடி உயரமுள்ள மேடையில் கம்பீரமான உருவத்தில் லெனின் சிலை இருந்தது. அருகே சென்று உருவத்தைப் பார்த்தோம். லெனின் கண்களில்தான் எவ்வளவு கருணை ஒளி!

அவருடைய உருவம் குட்டையாகத் தோன்றினாலும், அதில் கம்பீரம் மிளிர்கிறது. அவர் கையைத் தூக்கி மக்களைப் பார்த்துப் பேசும் பாவனை இருக்கிறதே, அது, 'வறுமையில் வாடும் ஏழை மக்களுக்கும், விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், வறுமையிலிருந்து விடுவித்து வாழ்வளிக்க, அடிமைத்தளையிலிருந்து நீக்கி விடுதலையளிக்க இதோ உங்களுக்காக ஒருவன் இருக்கிறேன்!'' என்று கூறுவதுபோல் உள்ளது.

லெனின் சிலையை நேரில் பார்க்கின்ற வாய்ப்பைப் பெற்ற எங்களுக்கு அந்தச் சிலையில் எவ்வளவு 'உயிர்ப்பு' இருக்கிறது என்பதை உணரமுடிந்தது.

தோழர் பொலியகோவ், ''நேரமாகி விட்டது, அடுத்த நிகழ்ச்சிக்குப் புறப்படுவோம்'' என்று எங்களைப் பார்த்துக் கூறியபோதுதான் நான் மெய்மறந்து போயிருந்ததை உணர்ந்தேன்.

'தோழர் லெனின் சிலை எப்படியிருக்கிறது?' என்று என்னைப் பார்த்துக் கேட்டார் தோழர் 'பொலியகோவ்', ''உங்கள் நாட்டு மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தவரும் மறுவாழ்வு அளித்தவருமான புரட்சியின் சின்னமாம் லெனினைச் சிலை வடிவத்தில் காண்பதில் எத்தனை இன்பம் தெரியுமா?'' என்று ஆங்கிலத்தில் கூறினேன்: திருமதி லூசி, அவர்கள், அதை இரஷ்ய மொழியில் பெயர்த்துச் சொன்னார்கள். அதைக் கேட்டதும் தோழர் பொலியகோவ் ''உங்கள் நாட்டிலே இதுபோல் தலைவர்களின் சிலைகள் இருக்கின்றனவா?'' என்று கேட்டார்.

''தமிழகத்தின் லெனின் 'அண்ணா' அவர்கட்கு இன்றுவரை சிலை எழுப்பி நாங்கள் பார்க்கவில்லை. லெனினுக்கு அண்ணாவைத்தான் ஒப்பிடலாம். லெனினைப் போல் அறிஞர் அண்ணா அவர்கட்கு உருவ ஒற்றுமை இருக்கிறது என்பதால் மட்டும் அல்ல; லெனினைப் போல் உள்ளப்பான்மையும் மக்களை வாழ்விக்கும் மனப்பாங்கும், புரட்சி எண்ணமும் யாராலும் மறுக்க முடியாத அறிவுச் செறிவும், ஆற்றல் திறமும் நிரம்பப் பெற்றிருக்கிறார் அண்ணா.''

''ஊரெல்லாம் நாடெல்லாம் நல்லோர் உள்ளங்களில் எல்லாம் அவரது திரு உருவப்படம் நிழலாடிக் கொண்டிருக்கிறது. அவரை அரசியல் ஆசானாக மட்டும் நாங்கள் கருதவில்லை. குடும்பத்தில் ஒருவராகவே—உடன் பிறப்புக்களில் மூத்தவராகக் கருதும் தமிழக லெனின் எங்கள் உள்ளம் கவர்ந்த உத்தமர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தாம்'' என்றேன்.

மொழி புரியாவிட்டாலும் என் முகத்தில் தோன்றும் உணர்ச்சியைப் புரிந்து கொண்ட தோழர் பொலியகோவ், மேலும் கேட்க ஆவல் கொண்டார். இடை இடையே திருமதி லூசி மொழி பெயர்த்துச் சொல்வதில் சளைக்கவில்லை.

இந்த ஆண்டு மாநகராட்சி தயாரித்த வரவு—செலவுத் திட்டத்திலே தமிழகத்து லெனின் அண்ணா அவர்களின் உருவச் சிலையைச் சென்னை நகரின் நடுவிலே அமைக்க நிதி ஒதுக்கி அதற்காவன செய்து வருகிறோம் என்று எடுத்துக் கூறினேன். (மாநகராட்சியின் செலவில் சிலை நிறுவ வேண்டாம் என்று அண்ணா அவர்கள் கண்டிப்புடன் கூறிவிட்டதால் மாநகராட்சியின் முடிவு கைவிடப்பட்டு, மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களின் சொந்தச் செலவில், உலகத்தமிழ் மாநாட்டினையொட்டி மவுண்ட் ரோடில் அண்ணா சிலை நிறுவப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது)

லெனின் சிலையையே நோக்கிய வண்ணம் இருந்த மேயர். திரு. சம்பந்தம் அவர்கள் "அண்ணா", "அண்ணா" என்றாயே! என்ன விஷயம்?" என்று கேட்க, தோழர் 'பொலியகோவ்' அவர்கள் கேட்ட கேள்வியையும் நான் சொன்ன பதிலையும் அவருக்குச் சொன்னேன்.

நனவான கனவு!

"இப்படிப்பட்ட அழகான இடம் நம் நகரில் இருப்பதாக எண்ணினால் அது மவுண்ட்ரோடு தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. அறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலையை நகரின் மையமான அவ்விடத்தில் வைப்பதுதான் நன்றாக இருக்கும் இல்லையா?" என்று கேள்விமூலம் தம் கருத்தைச் சொன்னார். அன்று நாங்கள் இரஷ்ய மண்ணி லிருந்துகொண்டு கண்ட கனவு இப்போது நனவாகி இருப்பது கண்டு பெருமை கொள்வதில் தவறில்லையல்லவா?

தமிழகத்து லெனின் அண்ணா அவர்களைப்பற்றி எங்கள் குழுவினரிடையே உரையாடல் வளர்ந்தது. அப்போது

எங்களுடன் வந்த புகைப்படக்காரர் ''மாவீரர் லெனின் சிலையின் அருகில் உங்களை நிற்க வைத்துப் புகைப்படம் எடுக்கப் போகிறேன் முறையாக நில்லுங்கள்'' என்றார்.

முதலில் நாங்கள் சிலையைப் பார்த்தபொழுதே புகைப் படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணந்தான் எங்களுக்குத் தோன்றியது. அதைக் குறிப்பறிந்து செய்வது போல் புகைப்படக்காரர் நடந்து கொண்டார்.

குறித்த நேரத்திற்குமேல் இங்கே செலவழித்து விட் டோமென்பதைத் தோழர் பொலியகோவ் தம் கைக் கடிகாரத்தைக் காட்டி எங்களுக்கு உணர்த்தினார். ஆனாலும் லெனினைப்பற்றி நீண்டநேரம் பேசிக்கொண்டு இருந்ததில் நேரம் போனதே தோழர் பொலியகோவ்க்கும் தெரியவில்லை.

லெனின் சதுக்கத்திலிருந்து மமாய்க் குன்றுக்குச் சென்றோம். நாங்கள் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாக இதையும் சேர்த்திருந்தார்கள்.

அக்குன்றின்மேல் செல்வதற்கு முன்னால் லெனின் பெருஞ்சாலைக்கும் மலைக்கும் இடையே சிமெண்டு கான் கிரீட்டால் ஆன பெரும்பாறையொன்று நிறுத்தப்பட்டி ருப்பதைக் கண்டோம். அப்பாறையில் ஒரு சிற்பியின் கைவண்ணம் மிளிர்ந்தது. கடந்த இரண்டாம் உலகப் போரில் சோவியத் நாட்டு வீரர்கள் வீரப்போர் புரிந்த காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது.

போரில் குண்டடிபட்டு வீழ்கின்ற வீரனை ஒரு கையால் அணைத்துக் கொண்டு மறுகையில் துப்பாக்கியுடன் முன்னேறு கின்ற போர்வீரனும் மகனை இழந்த தாயும்; கணவனை இழந்த காரிகையும்; அண்ணனை இழந்த தம்பியும், தங்கை யும், சோகத்தில் இருக்கின்றவர்களுக்கு போர்வீரன் ஆறுதல் கூறிப் போர்க்களம் நோக்கிப் புறப்படுகின்ற காட்சியும் மெய்சிலிர்க்கச்செய்தன. இவ்விடத்திற்கு 'வீரர்கள் புகழாரம்' என்று பெயரிட்டுள்ளனர்.

அதைக் கடந்து மேல் நோக்கி நடந்தோம். படிக்கட்டு அமைந்த பாதைக்கு இருமருங்கும் பெரும்பாறைகள் நிறுத்தப் பட்டிருந்தன.

முன்பு கூறியபடி அந்தப் பாறைகளெல்லாம் வெறும் பாறைகளாகத் தோன்றவில்லை. போர்க்களத்தை அங்கேயும் கண்டோம்.

டாங்குகள் முன் செல்ல, அவை பின்னே போர்வீரர்கள் வீரநடை போட்டு முன்னேறும் காட்சி ஒருபுறம்; குண்டடிபட்டு நாசிகள் படை சிதைந்து ஓடுகின்ற காட்சி மற்றொருபுறம்; பனிக்கட்டி உறைந்திருக்கும் பாதையைப் பிளந்து கொண்டு சிங்க நடை போடும் இளமறவர்கள் இன்னொருபுறம்; நகரின் கூட கோபுரங்கள், மாட மாளிகைகள், எதிரியால் தாக்கித் தகர்க்கப்பட்ட நிலையிலிருந்த பகுதியிலே மாண்ட மக்களை அப்புறப்படுத்தியபடி நாசிப்படைகளை நோக்கிச் சுட்டு வீழ்த்துகின்ற காட்சி வேறொருபுறம்!

வெற்றிகொண்ட வீரத்திருநகர்

இரண்டாம் உலகப் போரின் திருப்பத்திற்கு முடிவு கட்டி வெற்றிக் கொடியை நாட்டியது சோவியத் நாடுதான் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். சோவியத் வெற்றிக்கு அடிப்படையாக மட்டுமல்லாமல், முதலும், முடிவுமாக நின்று போர் புரிந்தவர்கள் வால்கா கிராடு நகர மக்களும், வீரர்களுமே ஆவார்கள், என்பதை 'லெனின் கட்டளை' 'விண்மீன்' என்னும் தங்கப் பதக்கங்களையும் சோவியத் நாட்டில் 'வீர நகரம்' என்ற பட்டத்தையும் பெற்றிருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சோவியத் நாட்டில், குறிப்பாக இரஷ்யக் குடியரசு நகரங்களில் ஒன்றான வால்காகிராடு நகரம் தொழிற்கூடமாக விளங்குகின்றது. 1589ம் ஆண்டின் உருவாக்கப்பட்ட இந்நகரம் இரஷ்யக் குடியரசின் தென்கிழக்கு எல்லையின் கோட்டையாக விளங்குகிறது.

இந்நகரம் பல நூற்றாண்டு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு இருக்கிறது என்பதை அந்நகர மக்கள் எங்களிடம் பெருமிதமாகக் கூறினார்கள்.

அது மட்டுமின்றிப் புரட்சியை ஒட்டிய உள்நாட்டுப் போரும், சர்வ தேச ஆதிக்கப்போரும் இந்த நகரிலும் நடந்ததை வரலாறு படித்த அனைவரும் அறிவர். அந்தப் போர்களிலெல்லாம் சாரிட்ஸ்சின் நகரம் (இன்றைய வால்கா கிராடு நகரத்திற்கு முதன் முதலாக இருந்த பெயர்தான் சாரிட்ஸ்சின் என்பது) சோவியத் நாட்டின் வியத்தகு முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்த ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில் இந்த வால்கா கிராடு நகரத்திற்கு 'ஸ்டாலின் கிராடு' நகரம் என்ற பெயர் வழங்கி வந்தது. வீரத்தின் விளைநிலமாக விளங்கி வெற்றி கண்டதன் அறிகுறியாக புரட்சியின் சின்னமாக, ''செம்பதாகை ஆணை'' என்ற புகழையும் இது பெற்றது.

விரிவான விளக்கங்களைத் தந்து கொண்டிருந்த திருமதி லூசி விடுதலைப் போரினைப் பற்றி மேலும் விளக்கினார்.

நாசிப்படைகளைப் புறங்கண்ட காதை!

திருமதி லூசியின் நுண்ணிய அறிவும் ஆற்றலும் விளக்கம் கொடுப்பதில் பளிச்சிட்டதால் ஆர்வத்தோடு வரலாற்றைக் கேட்கலானோம். விடுதலைப் போரின் விளக்கமும் தொடர்ந்தது:

''செர்மானிய நாசிப்படை சோவியத் செர்மனி எல்லையில், முன்னேற முடியாமல் பின் வாங்கிய பின்னர் 1942ஆம் ஆண்டு கோடைக் காலத்தில் செர்மானியப்படை அனைத்தும் ஒரு முகமாக குவியத் தொடங்கின. அவ்விதம் குவிந்த பின்னால் காக்கஸஸ் என்னும் இடத்தைப் கைப்பற்றிக் கொண்டு வால்கா மூலம் புகுவது என்பதுதான் இட்லரின் நினைப்பும் திட்டமுமாக இருந்தன. இம்முறையிலே தான் இரண்டாம் உலகப் போர் தொடங்கிற்று'' என்று திருமதி. லூசி நம் நாட்டு இராமாயண மகாபாரத விளக்கம் கூறுபவர்போல் தொடர்ந்தார்.

போர் தீவிரமாக நடக்கத் தொடங்கியது. இப் பெரும்போரில் இருபது இலட்சம் வீரர்கள் பங்கு கொண்டார்கள். ஐயாயிரம் டாங்கிகளும், போர் விமானங்களும் பயன்படுத்தப்பட்டன.

ஸ்டாலின் கிராடு பெரும்போர் (இந்நகரில்) 200 நாள்கள் நீடித்தது. இப்போர் நகரின் எல்லேயில் 163 நாட்கள் நடந்தது. 1942ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22ஆம் நாள் தொடங்கிய போர் 1943ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2ஆம்நாள் வரை நீடித்தது.

சோவியத் படைகள் ஸ்டாலின்கிராடு போர் வீரர்கள் தலைமையில் போரை தொடர்ந்தது. முன் னேறிய பதினைந்து டாங்கிகளின் துணையோடும் பலவித ஆயுதத் துணையோடும் கூடிய ஒரு படை 3,30,000 நாசிப் படையைச் சுற்றி வளைத்து நொறுக்கித் தள்ளியது.

முழுவதுமாக நாசமாக்கப்பட்ட செர்மன் நாசிப் படையில் இருந்த சுமார் 91,000 வீரர்களும் அதிகாரி களும் சரணடைந்தார்களாம்.


உலகப் பெரும் போரின் ஒரு பகுதியை எங்கள் கண் முன்னல் திருமதி லூசி கொண்டுவந்து நிறுத் தினர்.

தோழர் பொலியகோவ் நேரமாகி விட்டதைக் குறிப் பிட்டு 'குன்றின் உச்சிக்குப் போவோம்' என்றுகூறி முன் சென்முர். எல்லோரும் பின் தொடர்ந்தோம். குன்றின் உச்சிக்கு ஏறிவிட்ட நாங்கள் வியக்கத்தக்க மாபெரும் பெண் சிலேயொன்றைப் பார்த்தோம்; நாங்கள் எங்கேயும் அதைப் போன்ற பெருஞ்சிலேயைக் கண்டதில்லே. அக்கற்சிலே 159 அடி உயரத்தைக் கொண்டு வானளாவி நின்றது.

அந்தப் பெண்சிலேயை அந்நகரத்தார் 'தாயகத்தின் நினைவுச் சின்னம்' என்று பெயரிட்டு அழைக்கிமுர்கள்.

வீரத்தாய் சிலேவடிவில்!

கற்சிலேயிலே உயிரை யூட்டி நாட்டின் வீர உணர்ச் சியை அச்சிலேயின் மூலம் வழங்கும் பான்மை பாராட்டிற்



மமாய்க் குன்றின்மேல் உள்ள வீரத்தாயின் சிலையும், போர்வீரன் சிலையும்

குரியதாகும். ஒரு வீரத்தாய் ஒரு கையில் வாளுடன் மற்ருெரு கையை வீசி வீர நடை போடுகிருள். வீர நடையின் வேகத்திலும் காற்றின் வீச்சிலும் தலைமயிர் பின்னுேக்கிப் பறக்க, கையில் இருக்கும் வாள் எதிரியைத் தாக்க முற்படும் நிலையிலே அந்தச் சிலை அமைந்துள்ளது.

இவ்வீரத்தாயின் சிலையைப் பார்த்த நேரத்தில் பழம் பெரும் வீர காவியமாம் 'புறநானூற்றின்' ஒரு பாடல் நினைவுக்கு வந்தது. ''செருப்பறை கேட்டு . . . .'' என்று தொடங்கும் சங்ககாலத்துப் பாடல்தான் அது; ஒக்கூர் மாசாத்தியார் பாடியது.

நம் புறநானூற்றுத் தாயின்போர்க்குணத்தை எண்ணினேன். ஆ! என்னே அவள் உள்ளத்துணிவு! முன்னர் நடந்த போரிலே அவள் தந்தை யானையைப் பொருதி அதன் காரணமாகக் களத்திலேயே இறந்துபட்டான்; முந்தியநாள் போரிலே அவள் கணவன் திரளான ஆநிரைகளைக் காத்தும் அப்போரிலே இறந்தனன்; அன்றும் போர்ப்பறை கேட்டுக் களத்திலே தன் குடிப்பிறந்தோரும் போரிட வேண்டும் என்று எண்ணித் தன் ஒரே மகனை அழைத்துத் தலைசீவி; வெள்ளாடை உடுத்தி வேல் கை கொடுத்துப் ''போர்முனை நோக்கிச் செல்க'' என அனுப்பிய அந்த வீரத்தாயினை எண்ணி யெண்ணிப் பூரித்தேன்..

''செருப்பறை கேட்டு விருப்புற்று; மயங்கி வேல்கைக்
கொடுத்து;
வெளிது விரித்து, உடீஇப்பாறு மயிர்க் குடுமி
எண்ணெய் நீவி;
ஒரு மகன் அல்லது இல்லோள், செருமுக நோக்கிச்
செல்கென விடுமே!''

—என்னும் அந்தப் புறநானூற்றுப் பாடலை மேலும் ஒருமுறை நினைத்துச் சிலையை நோக்கி விட்டுத் திரும்பினேன்.

சிதைந்த நகரம் சீர்பெற்றது

வால்கா கிராடு நகரத்தின் சிறப்புப் பற்றி மட்டுமே எங்களோடு துணைக்கு வந்த திருமதி லூசி அம்மையார்

அந்நகரத்தில் நாங்கள் தங்கியிருந்த ஆறு நாளும் பன்னிப் பன்னி எடுத்துச் சொன்னார்.

அந்த அம்மையாரின் விளக்கவுரையில் தம் நாட்டைப் பற்றி ஏதும் அதிகமாகச் சொல்ல வில்லை என்றே சொல்லலாம்.

ஆனாலும் மொழி பெயர்ப்பாளரான திருமதி லூசி அவர் களைக் குறுகிய மனப்பான்மை உடையவர் என்றோ மாநில வெறி கொண்டவர் என்றோ அங்குள்ள மக்கள் எவரும் கூறுவதில்லை.

''உலகப் போரில் இந்நகரம் வீரப்பதக்கங்கள் பல பெற்றாலும், பெரும் இழப்புக்கும் ஆளாகியிருக்கிறது'' என்று சோகம் தோய்ந்த குரலில் திருமதி. லூசி கூறத் தொடங்கினார்.

வலிமை மிக்க வால்கா கிராடு படை வீரர்களோடு மோதியதில் நாசிப்படையினர் பெரும் தோல்வியை அணைத் துக் கொண்டார்கள் என்றாலும் எந்த அளவுக்குச் சேதத்தை உண்டாக்கினார்கள் என்பதை நினைக்கும்போது அதிர்ச்சியே யேற்படும்.

> பல குடியிருப்பு வீடுகளைத் தரை மட்டமாக்கிய தோடு விடவில்லை; ஒன்றரை லட்சம் சதுர மீட்டர் பரப்பளவுள்ள நாட்டையே புகை மண்டலமாக்கினார் கள் அது மட்டுமா? நூறு தொழிற் கூடங்கள் நாச மாக்கப் பட்டன.
>
> இந்நகருக்கு ஏற்பட்ட இழப்பைக் கணக்கெடுத்துப் பார்த்தால், ஏறக்குறைய ஏழாயிரத்து இருநூறு கோடி ரூபாய் மதிப்புக்கு இருக்கும் (இந்திய நாணயம் சுமார் எட்டு ரூபாய் ஒரு ரூபிளுக்கு ஈடாகும்) என்று கூறியபோது மலைத்துப் போனோம், அத்துடன் ''40,000 குடிமக்கள் இப் போரிலே புதைந்து போனார் கள்'' என்று கண்களில் நீர்மல்க மெல்லிய குரலில் அந்த அம்மையார் கூறியபோது எங்களால் அந்தத் வேதனையைத் தாங்கிக்கொள்ளமுடியவில்லை.
>
> சிதைந்த இந்த வீர நகரத்தைப் புதுப்பிக்க நாடே ஒருங்கு திரண்டது. இப்பெரும் பணியில் ஈடுபடச்

சுமார் 15,000 பொதுவுடைமைக் கூட்டுக் கழகத்தின் இளந் தொண்டர்கள் பங்கு கொண்டார்கள்.


வியத்தகு முன்னேற்றம்

வால்கா நதியின் கரையிலே உள்ள இந்த நகரம் வியப்புறும் வேகத்தில் முன்னேறியது; அழகு நகரமாக உருவெடுத்தது.

பண்பாட்டிலும், நாகரிகத்திலும் மட்டுமின்றிப் பொருளாதாரத்திலும், கூட நகரம் வளர்ந்தது. 1948ம் ஆண்டிலேயே போருக்கு முன்பிருந்த தொழில் வளத்தை எட்டிப் பிடித்து விட்டது. 1940ம் ஆண்டில் இருந்த பொருள் உற்பத்தியைவிட ஐந்து மடங்கு உயர்வும் 1919ம் ஆண்டில் இருந்த பொருள் உற்பத்தியைவிட எண்பது மடங்கும் 1962ம் ஆண்டிலே இந்நகரம் அடைந்து விட்டது. இத்தகு விரைவான முன்னேற்றத்தைக் கேட்டு வியந்தோம். இப்பெரும் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த தொழிலாள உடன் பிறப்புக்களை எவ்வளவு புகழ்ந்தாலும், வாழ்த்தினாலும், வணங்கினாலும் தகும் என்றே எண்ணிப் பெருமைப் பட்டோம்.

இன்றைய தினம் இந்நகரத்தில் சிறியனவும் பெரியனவுமான நூற்று ஐம்பத்தாறு தொழிற் கூடங்களும் கனரகத் தொழிற்சாலைகளும் உள்ளன. அவற்றில் ஏறக்குறைய இலட்சத்து எழுபதாயிரம் தொழிலாளர்கள், பொறியியல் வல்லுநர்கள், பணியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நகரத்தின் வரலாற்றைக் கூறிக் கொண்டே வந்த திருமதி லூசி காரோட்டும் தோழரை நோக்கி வண்டியை ஓரமாக நிறுத்தச் சொன்னார். எங்களைப் பார்த்து எதிரே கம்பீரமாக விளங்கிய தொழிலாளியின் உருவச் சிலையைக் காட்டினார். விரிந்த மார்பும், உயர்ந்த தோளும் கொண்ட அந்தத் தொழிலாளியின் சிலை ஒரு கையை நம் பக்கம்



வால்கா கிராடு நகரிலுள்ள நீர் மின்விசை நிலையத்தில்

நீட்டிய படியும் மறுகையை நீர்மின்விசை நிலையத்தை நோக்கி நீட்டிய படியும் இருந்தன.

தூக்கியபடி இருந்த கை கூறிய செய்தி இதுதான்: ''உங்கள் முன்னால் தோன்றும் நீர்மின்விசை நிலையம் எங்கள் உழைப்பின் உருவம், அதைக்காண வாரீர்! வாரீர்!!''

இவ்வாறு அன்பழைப்பு விடுத்த வண்ணமிருந்தது அந்தச் சிலை. அதைக் கண்ட பின்னர் நீர்மின் விசை நிலையத்திற்குச் சென்றோம்.

நீர்மின்விசை நிலையத்தில்

எங்கள் வருகைக்காகக் காத்திருந்த நிலையத்தின் முதல்வர் அன்போடு வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். ''இந்நிலையத்தில் எவ்வளவு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்?'' என்ற கேள்வியைத் தொடுத்தார் தொழிலாளர் இயக்கத்தில் தூய தொண்டாற்றி வரும் தோழர் கிருஷ்ணமூர்த்தி.

அங்கும் இங்குமாக விரல்விட்டு எண்ணத்தக்கவர்களே பணிபுரிகிறார்கள் என்பதைக் கண்டோம்.

''இன்று விடுமுறை நாளா?'' என்று கேள்விக் கணையை மீண்டும் தொடுத்தார் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். ''தானே இயங்கும் இயந்திரங்கள் தாம் இங்கு இருக்கின்றன; ஆகவே, மனித உழைப்புக்கு அதிக வாய்ப்பில்லை'' என்று கூறினார் நிலைய முதல்வர்.

இந்நீர்மின்விசை நிலையம் உலகத்திலேயுள்ள பெரிய நிலையங்களில் ஒன்றாகும். ஐரோப்பாவிலேயே மிகப் பெரும் நிலையமாகும். இது 1961-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பத்தாம் நாள் துவக்கப்பட்டது.

நிலையத்தின் முதல்வர் நிலையச் சிறப்பைக் கூறிக் கொண்டே இயந்திரங்கள் உள்ள மேல் தளத்திற்கு அழைத்துச் சென்றார்.

மின்விசையை உருவாக்கும் பணி நடக்கின்ற இடத்திலேயே மின்பிடிப்பும் நடந்து கொண்டிருக்கிறது. மின்

களைப் பிடிக்கும் முறையையும் காட்டினார்கள். கொழுத்த மீன்களைக் கண்டதும் எங்கள் நண்பர் திரு. கோதண்ட பாணி, ''இன்று இரவு இம்மீன் உணவாக இருந்தால் எப்படி இருக்கும் தெரியுமா?'' என்று சைவ உணவுக்கார னாகிய என்னைப் பார்த்துக் கிண்டல் செய்ய ஆரம்பித் தார்!

சோவியத் நாட்டில் மின்சாரத்திற்குப் பஞ்சமென் பதே இல்லை. வீதிகளில் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் விளக்குகளே இதற்குச் சான்றாகும்.

இப்பெரிய நிலையத்தைப் பார்த்ததும் நம் தமிழகத்தில் உள்ள குந்தா நீர்மின் விசை நிலையம் என்னுடைய நினை வுக்கு வந்தது.

வால்கா நீர்மின் விசைப் பெரு நிலையத்தைக் கண்ட நான் இதை உருவாக்கிய தொழிலாளர் தம் உழைப்பின் பெருமையை எண்ணியபோது, புரட்சிக் கவிஞர் என் மனக்கண் முன் தோன்றினார்.

அவர் தீட்டிய கவிதை என் உள்ளத்தில் ஒலித்தது.

''ஆர்த்தெழும் எந்திரக் கூட்டங்களே
உங்கள் ஆதி அந்தம் சொல்லவா—எங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய்யல்லவா!''

இளையோர் முகாமில்

அடுத்து ஆக்டொபா ஆற்றின் கரையில் சுமார் நாற்பது ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள கட்டடங்களில் உள்ள பயனீர் முகாமைக் காணப் புறப்பட்டோம். வால்கா கிராடு நகருக்கு இருபது மைல் தூரத்திலுள்ள அந்த முகாமை அடைந்தோம். நம் நாட்டில் உள்ள சாரணர் இயக்கம் போல் (பயனீர் கேம்ப்) இளையோர் முகாமும் மேற்போக்காகப் பார்க்கும்போது தோன்றுகின்றது. முகாமில் உள்ள சிறுவர், சிறுமிகள் மலர் கொடுத்து எங்களை உள்ளே வரவேற்றனர்.

அந்தக் குறிப்பிட்ட பயனீர் முகாமைச் சார்ந்தவர்கள் இங்கு இருபத்தாறு நாள் தங்குவதாகத் திட்டமிட்டிருந் தார்கள். பயனீரில் சேர்ந்திருப்போர் ஏழு வயதிலிருந்து பதினைந்து வயதுவரை இருபாலருமாக உள்ளனர். இந்த முகாமில் இவர்களுக்குத் தலைவியாக உள்ள மாணவி கால்யா என்பவர் ஆவார்.

இந்தப் பிள்ளைகள் அதாவது பயனீர்கள் காலையிலிருந்து மாலைவரை ஆற்றுகின்ற கடமைகளையும் நடந்து கொள்ளு கின்ற முறைகளையும் தலைவி எடுத்துச் சொல்லிக் கொண்டே வந்தார். இரஷிய மொழியில் தெளிவோடும் திறமை யோடும் விளக்குகின்ற பான்மை சுவையாக இருந்தது. இடையிடையே திருமதி லூசி ஆங்கிலத்தில் மொழிபெயர்த் துக் கொண்டே வந்தார். இதற்கிடையில் அங்கிருந்த மாவீரன் லெனின் சிலைக்கு அருகில் சென்று மாலையிட்டு எங்கள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டோம். ஒழுக் கமும், ஒழுங்கும் அங்கு முறையாகக் கற்பிக்கப்படுகின்றன.

முகாமைச் சுற்றிப் பச்சைப் பசேலென்று செடிகளும், கொடிகளும், மரங்களும் இன்னபிறவும் செழித்து வளர்ந் திருக்கின்றன. மொத்தத்தில் இவ்விடம் காடும், பூங்காவும் கலந்த ஒன்றாகத் தோன்றுகிறது. மலர்ந்த மலர்களும், கனிந்த கனிகளும், செடிகளில் கண்டோம். எங்களில் சிலர் மலர்களைப் பறித்தோம்; நுகர்ந்தோம். பழங்களைக் கொய்து தின்றோம். பிள்ளைகளெல்லாம் உடல் வன்மை பெற்றிருந்தார்கள். அவர்கள் முகங்களில் அழகு கொஞ்சி விளையாடியது.

சிறுவனிடம் தோற்றார் மேயர்

விளையாடத் திடலும், அதற்குரிய விளையாட்டுக் கருவிகளும் இருந்தன. கைத்தொழிற் பயிற்சியும் நடை பெறுகிறது. அழகான பொம்மைகளைக் கண்டோம்; வண்ணத்தால் உருவான அரங்குகளைக் கண்டோம்; விதவித மான உடலோம்பும் விளையாட்டுகள் நடந்தன. ஒரு பக்கத் திலே டேபிள் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்ததைப்



இளைஞர் முகாமில்

பார்த்தோம். மேயர் சம்பந்தம் அவர்கட்கும் விளையாட வேண்டும் என்ற அவா மேலிட்டு, ஒரு சிறுவனிடமிருந்து பந்தடி மட்டையை வாங்கி ஆடினார். ஆட்டத்தில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி இருவருக்கும் வந்ததை நான் நடுவராக இருந்து கணக்கெடுத்து வந்தேன். கடைசியாக அந்தச் சிறுவனே ஆட்டத்தில் வெற்றியும் அடைந்தான். அங்கிருந்து புறப்பட எண்ணியபோது ''வாலிபால்'' ஆடுவதைக் கண்ட நாங்கள், அவர்களுடனும் சேர்ந்து சிறிது நேரம் விளையாடினோம். நேரம் போனதே தெரியவில்லை.

பகலுணவு கொள்ளும் நேரம் வந்துவிட்டதால் தோழர் பொலியகோவ் அவர்கள், எங்களைப் பார்த்து ''இன்று இங்குள்ள சிறுவர்களின் விருந்தினராக இருக்கக் கேட்டுக் கொண்டார்கள்'' என்றார். இதற்குள் தலைவி செல்வி கால்யா அருகில் வந்து எல்லோரையும் அன்பாக உணவு, கொள்ள அழைத்ததால் நாங்களும் தடை சொல்லாமல் அவர்களோடு சேர்ந்து உண்ண ஆரம்பித்தோம். வழக்கம்போல் ரொட்டித் துண்டு, காய்கறி ''சூப்'' காய்கறி வகைகளுடன் இன்னபிறவும் இருந்தன. அவரவர் விரும்பியவாறு உண்டபின்னர் சற்று இளைப்பாறினோம்.

செல்வி காலியா தம் துணைத் தலைவிகளோடு சேர்ந்து இரஷிய மொழியில் பாடினார். பாட்டில் இனிமையை விட வீரம் அதிகமாக இருந்தது. அவர்கள் பாடி முடிந்ததும் எங்களையும் பாடச் சொன்னார்கள். எங்கள் குழுவிலே இருந்தவர்கள் பாடத் தயங்கினர். ''உங்கள் மொழியில் பாட்டின் ஓசை கேட்டாலே போதும், ஆகவே குரல் இனிமையைப் பற்றிக் கவலை கொள்ளற்க'' என்று அபயம் அளிப்பவர் போல் திருமதி கால்யா கூறினார். ஒருவாறாக நான் முயன்று பாட ஆரம்பித்தேன். மாணவர்கள் பற்றிய பாடல்களாகத் தேர்ந்தெடுத்துப் பாடினேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் ''தலைவாரி பூச்சூடி'' என்ற பாடலைப்பாடி முடித்தேன்.

சிறுமி சிரித்தாள்!

பாட்டின் பொருளையும் அவர்கட்கு விளக்கிக் கூறினேன். அதைக்கேட்டு ஒரு பெண் 'கொல்' லென்று சிரித்து, ''நாங்கள் சிந்தாத கண்ணீரைச் சிந்திப் பள்ளிக்குப் போகாமல் சிலைபோல நிற்பதில்லையே'' என்று வேடிக்கை யாகச் சொன்னாள். அங்கிருந்த நாங்கள் எல்லோருமே சிரித்து விட்டோம்.

இப்பயனீர் முகாம் பிள்ளைகளுக்கு உணவு சமைக்கின்ற இடத்திற்கும் சென்று பார்த்தோம். இடத்தைத் தூய்மை யாக வைத்திருக்கிறார்கள். அத்துடன் அங்குப் பயன் படுத்தும் பாத்திரங்களை வெந்நீரில் தோய்த்துத் தூய்மைப் படுத்தி வைக்கிறார்கள். சமைக்கின்ற உணவு சத்து நிரம்பிய தாக இருக்கிறது.

பிள்ளைகள் திரைப்படம் பார்ப்பதற்கெனத் திரைப்பட அரங்கும் இருக்கிறது. உட்கார்ந்து பார்ப்பதற்கு நீண்ட பெஞ்சுகள் போட்டிருக்கிறார்கள்.

எங்கள் மொழிபெயர்ப்பாளர் திருமதி லூசி மேலும் பயனீர் முகாம் பற்றி விளக்கம் கூறத் தொடங்கினார். இதில் இருப்பவர்கள் அனைவரும் டிராக்டர் தொழிற்சாலை யில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் பிள்ளைகள் ஆவார் கள் என்றும், இந்த முகாமில் ஆயிரத்து இருநூறு பிள்ளைகள் இருப்பதாகவும் சொன்னார். (மாதத்திற்கு) ஒரு பிள்ளைக்கு எல்லாச் செலவிற்குமாகச் சேர்த்து சுமார் முப்பத்தொன் பது ரூபிள் ஆவதாகவும், இதில் பெற்றோர் பதினொரு ரூபிளும், தொண்ணூறு கோபக் நாணயமும், கட்டினால் போதும் என்ற நிலை இருக்கிறது என்றும் மீதிச் செலவை அரசே ஏற்றுக் கொள்ளுகிறது என்றும் அவ்விளக்கத்தைத் தொடர்ந்தார் திருமதி லூசி. குறிப்பாகப் பெற்றோர்கள் இல் லாத குழந்தைகளின் செலவை அரசே ஏற்றுக் கொள்ளு கிறது என்பதையும் பெருமையுடன் கூறினார்.

இந்த முகாமில் நூறு ஆசிரியைகளும், நூற்றெழுபது பணியாளர்களும் இருப்பதாக செல்வி. கால்யா கூறினார்.

இந்த முகாமிற்கு நூல் நிலையமும் இருக்கிறது. மேயர் சம்பந்தம் அவர்கள் அங்குள்ள பிள்ளைகளைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

''நாட்டின்மீது அதிகமாக அன்பு வைத்திருக்கிறாயா?'' அல்லது தாய்மீது அதிகமாக அன்பு வைத்திருக்கிறாயா? என்பதுதான் அக்கேள்வி. கேட்டு முடிப்பதற்குள், ஒரு மாணவி ''நான் இரண்டின்மீதும் சரி சமமாகவே அன்பு காட்டுகிறேன்'' என்றாள். அப்பெண்ணின் கூரிய அறிவைக் கண்டு வியந்து பாராட்டினோம்.

படகிலே பவனி

ஜூன் திங்கள் இருபத்தைந்தாம் நாள் காலை சிற்றுண்டிக்குப்பிறகு எங்கள் குழு மூன்றாவது நாளாக நகரில் பார்க்க வேண்டிய பகுதிக்குப் புறப்பட்டது. சரியாகப் பத்து அடித்து முப்பது நிமிடமாயிருந்தபோது முதல் நிகழ்ச்சி துவங்கியது. வால்காவை நோக்கி நடந்தோம். வால்காகிராடு நகர மேயர் தோழர் கொரலோவ் எங்களோடு இருந்து மகிழ்ந்து கலந்துரையாட ஆற்றங்கரைக்கு எங்களுக்கு முன்பே வந்து காத்திருந்தார்.

எங்களுக்காக விசைப்படகு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் எல்லோரும் ஏறிக் கொண்டோம். விசைப்படகு லெனின் கால்வாயை நோக்கிப் புறப்பட்டது. அந்த் விசைப்படகு மணிக்கு முப்பது மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்தது. எங்கள் எதிரில் வேகமாக வந்து கொண்டிருந்த ''ராக்கட்'' என்ற பெயர் கொண்ட விசைப் படகை மேயர் சுட்டிக் காட்டி , ''இது மணிக்கு அறுபது மைல் வேகத்தில் செல்கின்ற படகு என்றார். ஹைட்ரோஃபாயில் என்று ஆங்கிலத்தில் கூறும் இந்த விசைப்படகு நார்வே ஸ்வீடன், நாடுகளில் சாதாரணமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று மேயர் கூறினார். நீரைக் கிழித்து வேகத்தோடு செல்லும்போது சிதறி மேலே விழும் நீர்த் துளிகள் படகு ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எங்கள் மேல் விழுந்து இன்பத்தை அளித்தன.



வால்கா நதிக்கரையில் அந்நகரத் துணைமேயருடன் தூதுக்குழு

மாபெரும் ஆறுகளில் ஒன்ருன இந்த வால்கா சுமார் இரண்டாயிரத்து முந்நூறு மைல் நீளம் உள்ளது. இவ்வளவு பெரிய நீளமுள்ள ஆற்றில் நாம் பயணம் செய்கிருேமே என்று எண்ணிப் பெருமூச்சு விட்ட நேரத்தில், 'இதைவிட நீளமான நைல், அமேசான், மிஸௌரி, மிஸிஸிபி, யாங்சி போன்ற ஆறுகள் உலகில் உள்ளனவே, நினைவு இல்லையா?' என்று நிலநூல் ஆசிரியர் என் தலையில் குட்டிப் பள்ளியில் கேட்பது போன்ற உணர்வு வந்தது. இப்பெரிய ஆற்றில்தான் முன்பு குறிப்பிட்ட உலகிலே பெரியதான நீர்மின்விசை நிலையமும் அமைந்திருக்கிறது. இந்நதியினைக் கொண்டு இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பயிர் செய்து கொண்டிருக்கின்ற செய்தியும் அறிந்தோம்.

வால்கா / கிராடு மேயர், நாட்டின் வளர்ச்சியைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தார். எந்தத் துறையைப் பற்றியதாலுலும் அதன் வளர்ச்சியைத் தெளிவாகக் கூறுகிருர். சோவியத் ஒன்றிய உயர் ஆட்சிக் குழுவிலும் அவர் உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால் முழு விவரங்களையும் அறிந்து கொண்டிருக்கிருர்.

எங்கள் கட்சித் தலைவர் திரு முனுசாமி அவர்களைப் பார்த்து, "நீங்கள் இரண்டாவது முறையாக வந்திருக்கின்றீர்களே, நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், மாறுதல்களையும் அறிகிறீர்களா?" என்று கேட்டார். "கடந்த ஆருண்டுக் காலத்தில் உங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள மகத்தான முன்னேற்றத்தைக் காணுகிறேன். குறிப்பாக விரைந்து வீடுகள் கட்டிக் கொண்டிருப்பதால் நகரின் தோற்றமே புதியதாக இருக்கிறது" என்று கூறினர்.

படகுப் பயணத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதிலே சிறிது நேரத்தைச் செலவிட்டோம்.

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் எல்லோருக்கும் விடுமுறை. பொழுது போக்கப் பலர் நதியை நோக்கிப் படையெடுத்திருந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் ஆற்றங்கரையில் நெடுகிலும்

குளித்துக் கொண்டிருந்தார்கள். தமிழகத்தின் காவிரி ஆற்றில் நம் மக்கள் குளிப்பது நினைவுக்கு வந்தது.

பலர் குடும்பம் குடும்பமாக மோட்டார்ப் படகுகளில் வருவதும் போவதுமாக இருந்தார்கள். சில படகுகளில் மீன் பிடிப்பும் நடந்து கொண்டிருந்தது. கப்பல்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி ஆகின்ற பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்கின்றன.

ஓரிடத்தில் ஆற்றின் ஒருபுறம் செப்பனிட்டு வேலை நடப்பதைக் கண்டோம். ''ஆழப்படுத்தும் வேலை'' என்றார் நகர மேயர். டிரட்ஜர் இயந்திரத்தைக் கொண்டு அவ்வேலை விரைவாக நடந்து கொண்டிருந்ததைச் சுட்டிக் காட்டி, அப்பகுதியில் கரையோரம் மேடாகி விட்டது என்றும் ஆழப் படுத்துவதன் மூலம் போக்குவரவு சரி செய்யப்பட விருப்ப தாகவும் மேயர் மேலும் தொடர்ந்து கூறினார். அப்போது சென்னை நகரத்தின் நடுவில் ஓடிக் கொண்டிருக்கும் கூவம் நதி என் முன்னால் ஓடுவது போன்ற எண்ணம் வந்தது. நகர மேயரோடு விவாதத்தில் ஈடுபட்டிருந்த திரு. முனுசாமியிடம் குறுக்கிட்டுக் கூவம் நதித் திட்டத்தைப் பற்றி நினைவுப்படுத்தினேன்.

உடனே வால்கா கிராடு மேயரைப் பார்த்து, முனு சாமி அவர்கள் ,'' இந்த டிரட்ஜர் எங்கே தயாரிக்கப்படு கிறது?'' என்று கேட்க, ''கோர்க்கி நகரத்தில்'' என்று பதில் வந்தது.

சென்னை நகர மேயர் அந்நகர மேயரைப் பார்த்து, ''இது போன்ற டிரட்ஜர் எங்களுக்கும் தேவை; விலைக்கு வாங்கத் தமிழக அரசு முயலுகிறது: நீங்கள் இதற்கு வேண் டிய குறிப்புகளைத் தர முடியுமா?'' என்று கேட்டார். அப்போது தோழர் விநயகமூர்த்தி அவர்களும் டிரட்ஜரின் அவசியத்தைக் கூறினார்.

கூவத்துக்கு வாழ்த்து!

நீண்ட காலமாகச் சென்னை மக்களின் சுகாதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கும் கூவம் ஆற்றைச் சீர்படுத்த

வேண்டும் என்பதில் மாநகராட்சிக்கும், தமிழக அரசிற்கும் கருத்து வேற்றுமை எப்போதும் இருந்ததில்லை. ஆனால் அண்மைக் காலம் வரை தமிழக அரசு அதற்காவன செய்ய வில்லை.

அரசியல் மேடைகளில் சில பேச்சாளர்கள் தரம் கெட் டுப் பேசுகின்றபோது அப்பேச்சைக் கூவம் ஆற்றிற்கு ஒப் பிடுவது உண்டு. அந்த அளவிற்கு கூவம் ஆறு துர்நாற்றத் திற்கு எடுத்துக் காட்டாக இருந்து வருகிறது.

அண்மையில் ஆட்சிக்கு வந்த மக்கள் அரசு, கூவம் ஆற்றைச் சீர்படுத்துவதற்கான திட்டம் தீட்டியுள்ளதையும் குறிப்பாகப் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அத்திட்டத்தை விரைவில் செயற் படுத்த ஏற்பாடு செய்திருப்பதையும் எடுத்துக் கூறினோம்.

> ''கூவம் ஆற்றுத் திட்டப்படி ஆற்றை ஆழப்படுத்தி ''படகு'', மோட்டார்ப் படகு ஆகியவை பொருள்களை ஏற்றிச் செல்லத்தக்க அளவிற்குக் கடல் நீரை ஆற்றில் விடச் செய்வதென்றும், நதியின் இருமருங்கும் அங் காடிகள் அமைப்பதென்றும், அத்துடன் பூங்காக்களை உருவாக்குவது என்றும், பொழுது போக்க உல்லாசப் படகு விடுவது என்றும் தீட்டிய திட்டத்தை அந்நகர மேயருக்கு எடுத்துச் சொன்னோம். நான்கு ஆண்டுகள் கழித்து எங்கள் நகரத்திற்குத் தாங்கள் வருகை தரு வீர்களானால் உல்லாசப் படகில் ஏற்றிச் செல் வோம்'' என்றும் பெருமையாகக் கூறினோம்.

இதைக் கேட்ட அந்நகர மேயர், ''உங்கள் திட்டம் நிறைவேற வாழ்த்துகிறேன்'' என்றார். இந்த ஆண்டே இத்திட்டத்தைத் துவக்கத் தமிழக வரவு செலவுத் திட்டத் தில் நிதி அமைச்சரும், முதலமைச்சருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதி ஒதுக்கியிருப்பதையும் எடுத்துச் சொன்னோம்.

எங்கள் நீண்ட விவாதத்தில் நேரம் சென்றதே தெரிய வில்லை. இதற்குள், நாங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைந்து விட்டோம்.

அதுதான் வால்கா ஆற்றையும், டான் ஆற்றையும் இணைக்கின்ற லெனின் கால்வாய் ஆகும். வால்கா நதியின் நீர்மட்டத்தைவிட டான் நதியின் நீர்மட்டம் இருபத்தைந்து அடி உயரத்தில் இருக்கிறது. இந்த இரு நதிகளையும் இணைத்துக் கப்பல் போக்குவரவைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். இந்தச் சிறப்பான பொறியியல் திறத்தைக் கண்டு வியக்காதார் இருக்கமுடியாது.

நாங்கள் அங்குச் சென்ற நேரத்தில் ஒரு கப்பல் டான் நதியிலிருந்து வால்கா நோக்கி வந்து கொண்டிருந்தது. இது எப்படிச் செல்கிறது என்பதைப் பார்ப்பதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

> லெனின் கால்வாயில் இரு பக்கத்திலும் கதவுகள் இருக்கின்றன. டான் நதியின் நீர்மட்டத்தையும் லெனின் கால்வாயின் நீர்மட்டத்தையும் சரி நிலையில் வைத்திருக்கிறார்கள். டான் நதியிலிருந்து கப்பல் லெனின் கால்வாயில் வந்ததும் லெனின் கால்வாய்க்கும் டான் நதிக்கும் இடையில் இருக்கும் கதவை அடைத்துப் பின்னர் வால்கா நதிக்கும் லெனின் கால்வாய்க்கும் இடையில் இருக்கும் கதவைச் சிறிது சிறிதாக மேலே தூக்கி லெனின் கால்வாயிலுள்ள தண்ணீரை வால்காவில் விடச் செய்து கடைசியாக லெனின் கால்வாய் நீர்மட்டமும் வால்காவின் நீர்மட்டமும் சரி நிலையாக ஆகியபின் கதவை முழுவதுமாக மேலே தூக்கிக் கப்பலை வால்கா நதியில் விடச் செய்கிறார்கள். பின்னர் மேலே தூக்கிய கதவைக் கீழே இறக்கி அடைத்து விடுகிறார்கள். இதை உலகிலுள்ள பொறியியல் வல்லுநர்கள் வியந்து பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். சோவியத் பொறியியல் வல்லுநர்களும் தொழிலாளத் தோழர்களும் இணைந்து ஆற்றிய இச் சீரியச் செயலை நினைக்கும் தோறும்,

''தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்'' என்னும் குறள்தான் நினைவிற்கு வருகிறது.

பகல் பன்னிரண்டு மணி ஆனதால் படகின் மேல் தட்டிலிருந்து கீழே உள்ள உணவு அறைக்குச் சென்றோம். உணவுண்டு ஓய்வெடுத்தோம்.

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே—உமைச்
சாரும் புவிப் பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!'' என்ற பாட்டாளிகள்

'பண்' என் காதில் ஒலித்தது.

ஆக்கும் தெய்வங்கள்!

''நாங்கள் தொழிற் கூடங்களையும் பார்க்க விழை கிறோம்.' என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அதை யொட்டி டிராக்டர் தொழிற்சாலையைப் பார்க்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மறுநாள் காலை சிற்றுண்டிக்குப்பின் டிராக்டர் தொழிற் கூடத்தைக் காணப் புறப்பட்டோம்.

ராக்டொராஜா வொட்ஸ்கி மாவட்டத்திலுள்ள மத்திய சதுக்கத்தில் அந்த டிராக்டர் தொழிற்கூடம் அமைந் திருக்கிறது. வாயில் முகப்பில் புரட்சித் தலைவரும் நாட்டு நிர்வாகத்தில் சிறந்தவருமான தோழர் அயர்ன் பிலிக்ஸ் என்பாரின் சிலையைக் கண்டோம்.

இந்தத் தொழிற்கூடம் 1930ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. அந்த ஆண்டிலேயே ஜூன் திங்களில் உற் பத்தியும் துவங்கி விட்டது. தொழிற் கூடத்திற்குத் தேவையான பொருள்கள் எல்லாம் வெளி நாட்டி லிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. நாடு முழு வதிலுமிருந்து திரட்டப்பட்ட சிறந்த தொழிலாளர் கள் இளம் பொதுவுடமைக் கழகத்தின் மூலம் சுமார் ஏழாயிரம் பேர் இந்தத் தொழிற்சாலையை உருவாக்கு வதற்காக அனுப்பப் பட்டனர். 1935ஆம் ஆண்டில் தான் முதல் கேட்டர்பில்லர் டிராக்டர் தயாரிக்கப் பட்டது. பின்னர் டீசல் இயந்திர டிராக்டரும் செய்யப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் துவங்கியதும் டிராக்டர் செய்வதை நிறுத்திப் போருக்குத் தேவையான போர்த் தளவாட டாங்கிகள் உற்பத்தி துவங்கப்பட்டன. 1942ல் பகைப்புலத்தின் படைகள் வால்காவின் கரையில் வந்து புகுந்தன. தொழிற்கூடத்தின் வடபுறத்திற்கு வந்துவிட்ட பகைவர்களை எதிர்த்து இதே தொழிற்சாலையில் உற்பத்தியாகும் டாங்கிகளைக் கொண்டு போரிட்டனர். நாசிப் படை அக்டோபர் திங்களில் தொழிற்கூடத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது.

1943ஆம் ஆண்டு ஜனவரி கடைசி வாரத்திலும் பிப்ரவரி முதல் வாரத்திலும் சோவியத் படை வீரர்கள் நாசிப் படையைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். ஆனாலும் இந்தப் போரால் தொழிற்கூடம் முழுதும் எதிரிகளால் நாசமாக்கப்பட்டன. சிதைந்துபோன இந்தத் தொழிற் கூடத்தை மீண்டும் சீர்செய்து புதுப்பிக்கலாயினர்.

வசதிகளற்ற நிலையிலும் உணவுப்பற்றுக்குறையிருந்தும் தாய் நாட்டுப்பற்று மிகுந்த தொழிலாளத் தோழர்கள் போர் முடிந்த ஐந்து திங்களுக்குள் மீண்டும் உற்பத்தியைத் தொடங்கி விட்டனர்.

1945ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்கூடத்திற்குத் தேசியப் போர் வெற்றி குறித்த பட்டயம் வழங்கினார்கள். போருக்குப் பின்னர் அமைதிக் கால உற்பத்தியினை மீண்டும் தொடங்கினர். புதிய புதிய டிராக்டர்களைச் செய்ய முற்பட்டனர். அதில் டி.டி. 54 வகையும் ஒன்றாகும்.

இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதத் தளவாடங்களைப் பயன்படுத்திப் போரில் வெற்றி கண்டதை எண்ணி யெண்ணித் தொழிலாளர்கள் பெருமைப்படுகிறார்கள்.

மேயர் சம்பந்தம் தோழர் முனுசாமி ஆகியோரும் மற்ற நண்பர்களும் நானும் தொழிற்கூடத்தில் சுற்றிக் கொண்டே வந்த நேரத்தில், திருமதி லூசி, தொழிற்கூடத்தின் முழு வரலாற்றையும் கூறி முடித்துத் தொழி

லாளர்களை ஒருமுறை பார்த்து எங்களையும் ஏறிட்டுப் பார்த்தார். எங்களையும் தொழிலாளத் தோழர்களையும் சேர்த்துப் பார்த்த பார்வையில் பொருளில்லாமல் இல்லை. ''வியக்கத் தக்க இப்பெரும் தொழிற்கூடத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் அல்லவா? ஆக்கும் கடவுள்கள்?'' என்று கூறுவது போலப் பொருள் செறிந்த அந்தக் கண்கள் சொல்லிக் கொண்டிருந்தன.

தொழிற்கூடத்தின் தலைவர் வேறொரு வாயிலை அடைந்தார். அங்கே பன்னிரண்டு புகைப்படங்கள் மாட்டப் பட்டிருந்தன. ஒவ்வொரு படத்தின் கீழும் அவரவர் பெயர் பொறிக்கப்பட்டு அவர்கள் பெற்ற வெற்றிப் பரிசுகள், வீரப் பதக்கங்கள் விவரமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொழிற்கூடத்தின் தலைவர் ஒவ்வொருவரின் பெயரையும் காட்டி, அதே நேரத்தில் அந்தத் தொழிலாளத் தோழரையும் எங்கள் முன்பு அழைத்து வந்து காண்பித்தார். பதக்கம் பெற்ற ஆண், பெண், தொழிலாளர்கள் புன்னகை தவழ, வணக்கம் கூறினார்கள். நாங்கள் கை குலுக்கிப் பாராட்டி வாழ்த்தினோம். குறித்த நேரத்திற்கு முன்பே தம்மிடம் ஒப்படைத்த வேலையைச் செய்து முடித்ததற்கு ஒருவரும் தமக்குரிய தொழில் துறையில் புதுமை செய்திருந்ததற்காக ஒருவரும் புதிய இயந்திரத்தைக் கண்டுப் பிடித்ததற்கு ஒருவரும் பரிசும் பாராட்டுமாகப் பெற்றிருக்கிறார்கள்.

கடவுள், கடவுள் என்று நம் நாட்டில் வீதிக்கு வீதி கோயில் கட்டிக் கும்பிடுகிறோமே, அங்கே வீதிக்கு வீதி தொழிலாளர் உருவச் சிலைகளை மட்டுமே நாங்கள் கண்டோம்!

''தொழிற்சாலைகளைத்தான் நாட்டின் கோவில்களாக நான் கருதுகிறேன். அதில் பணியாற்றும் தோழன்தான் கடவுள்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை மே நாள் விழாவில் கூறியது என் நினைவிற்கு வந்தது.

அங்கே பணியாற்றிக் கொண்டு வந்த பெண் தொழி

லாளர்கள் பலரும் எங்கள் அருகே வந்து விருப்போடு பார்த்த வண்ணமிருந்தனர். பூப்போன்ற மென்மையான அவர்தம் கைகள் கடினமான இயந்திரங்களை இயக்குவதைப் பார்த்து வியந்தோம்.

திருமதி லூசி மூலம் கேள்விகள் கேட்கத் தொடங்கினோம். ஊதியத்தைப் பற்றி ஒரு பெண்ணிடம் கேட்டேன். இதைத் தொடர்ந்து முன்னாள் மேயர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு பெண் தொழிலாளியைப் பார்த்து ''ஊதியத்தில் மாதம் எவ்வளவு மிச்சம் பிடிக்கிறீர்கள்?'' என்று கேட்க, அதற்கு அவர் நூற்றைம்பது ரூபிள் வாங்குவதாக் கூறினார். பதிலைச் சொல்லி முடிப்பதற்குள் தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம் கேள்வியை மீண்டும் நினைவுபடுத்தினார். அந்தப் பெண் தொழிலாளி தொடர்ந்து பதிலைக் கூறத் தொடங்கினார். நான் மட்டும் உழைக்கவில்லை. என் கணவரும் வேறொரு தொழிற்சாலையில் பணியாற்றுகிறார். இருவரும் பெறுகின்ற ஊதியத்தில் வளமான வாழ்க்கைக்கான செலவு போக மீதப்படும் தொகையை டெலிவிஷன், புத்தகங்கள், மற்றும் ஓய்வு காலங்களின் இன்பப் பயணம் ஆகியவற்றிற்குச் செலவழிக்கிறோம்'' என்றார்.

பாரதி கண்ட பெண்!

எங்களில் ஒரு நண்பர் மற்றொரு பெண்மணியைப் பார்த்து ''உங்கள் எதிர்காலத்திற்காக ஊதியத்தில் சேமிப்பதில்லையா?'' என்று கேட்க, அதற்கு அந்த தொழிலாளி ''நாங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதென்பதே கிடையாது. எங்கள் உழைப்பு எவ்வளவிற்கு இருக்கிறதோ அந்த அளவிற்கு நாடு வளர்வதையும் நாட்டுப் பொருளாதாரம் செழிப்பதையும் காண்கிறோம். நாட்டிலுள்ள அரசு எங்கள் எதிர்காலத்தைக் கவனித்துக் கொள்ளுகிறது'' என்றார்.

''உதாரணத்திற்குக் கூற வேண்டுமானால், எங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதும், அவர்கட்குக் கல்வி புகட்டுவதும், பின்னர் வேலை கொடுப்பதும் ஆட்சியாளர் கடமை

களாக இருக்கிற காரணத்தால் எங்கள் வாழ்க்கையும் வருங் காலச் சந்ததியினர் வாழ்க்கையும் ஆட்சியினரால் உறுதிப் படுத்தப்படுகிறது. ஆகவே, குடும்பத்தின் எதிர் காலத்தைப் பற்றிக் கவலை கொள்ளுவதில்லை.'' என்று மேலும் அந்தப் பெண் தொழிலாளி கூறினர்.

டிராக்டர் தொழிற்சாலையை ஓரளவுக்குச் சுற்றிப் பார்த்து விட்டு, வெளியேறும்போது ஆண், பெண் தொழி லாளர்கள், இருபாலாரும் அருகில் வந்து வணக்கம் கூறி வழியனுப்பி வைத்தனர். தொழிற்கூடத்தின் வாயிலுக்கு வந்தபோது பாரதி எங்கள் முன்னே தோன்றி,

''வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வோம் இந்த நாட்டிலே!''

என்னும் விடுதலைக் கீதத்தை ஓங்கி இசைப்பது போல் தோன்றியது.

டிராக்டர் தொழிற்சாலையைப் பார்த்துவிட்டுப் பக லுணவுக்குத் தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்தோம். திருமதி லூசி எல்லாரும் உண்ணும்போதே தொழிற்சாலையை நாங் கள் பார்த்தது பற்றி எங்களுடைய கருத்தைக் கேட்டார். நாங்கள் பார்வையிட்ட தொழிற்சாலையில் பெண் தொழி லாளிகளைக் கண்டபோது பல கேள்விகளைத் தொடுத்ததை எண்ணித்தான் இந்தக் கேள்வியை அந்த அம்மையார் கேட் டார்களோ என்று எண்ணிக் கொண்டோம். தொழிற்சாலை யைப் பார்த்துச் சிலமணி நேரமே ஆனதால் நினைவு ஒன்றும் மங்கிப் போய்விடவில்லை. நான் பார்த்தபோது எடுத் திருந்த குறிப்புகளை ஒரு முறை பார்த்துக் கொண்டு, கண்ட தையும் கேட்டதையும் பற்றி ஒருமுறை நினைவுக்குக் கொண்டு வந்தேன்.

அந்தத் தொழிற்சாலையில் ஒரு நாளைக்கு இருநூறு டிராக்டர்கள் செய்யப்படுவதும், திட்ட இலக்கு ஒரு

நாளேக்கு முன்னூறு என்றும் கூறினேன். இப்பெரிய தொழிற்சாலேயில் இருபதாயிரம் தொழிலாளர்கள் வேலே செய்து வருவது பற்றியும் அதில் முப்பத்தைந்து சதவிகிதம் பெண்களென்றும் குறிப்பு அறிந்து கூறினேன். திருமதி லூசி பெண் இனம் பணியாற்றுவது பற்றிக் குறிப்பிட்டதும் தலேநிமிர்ந்து எங்களே ஏறிட்டுப் பார்த்தார். நமது முன்னுள் மேயர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னேப் பார்த்து ''அங்கு பணியாற்றுகின்ற பொறியியல் வல்லுநர் போர்மென், மாஸ்டர், தலேமைப் பொறியியல் வல்லுநர் ஆகியோரின் ஊதியங்கள் பற்றிக் குறிப்பெடுத்திர்களா?'' என்று கேட்டார்.

பொறியியல் வல்லுநர் மாதம் நூற்று முப்பத்தொன்பது ரூபிளும் போர்மென் நூற்று ஐம்பத்தொன்பது ரூபிளும், மாஸ்டர் நூற்று ஐம்பதிலிருந்து நூற்று எழுபது ரூபிள்வரையும் பெறுகிருர்கள் என்று குறிப்பைப் பார்த்துச் சொன்னேன்.

காலேயிலே தொழிற்சாலேயில் தந்த இந்தக் தகவல்களே இரண்டாம் முறையாகக் கேட்பதிலே கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அடைந்த இன்பம் தனியானது. தொழிலாளர் தலேவரல்லவா அவர்! ஆகவேதான் என்னேப் போன்ற தொழிலாளியினிடத்திலே தொழிலாளர் பிரச்சினேப்பற்றி மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருந்தார். தோழர் பொலியகோவ் அவர்களிடத்தில் தொழிலாளர் பிரச்சினே பற்றித் தொடர்ந்து கேள்வி கேட்க ஆரம்பித்தார், கிருஷ்ணமூர்த்தி. ஆங்கிலம் அறியாததால் திருமதி லூசி ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்துச் சொல்ல, தோழர் பொலியகோவ் சிரித்தமுகத்தோடு எங்களேப் பார்த்தார். அந்தப் பார்வையில் 'நாங்கள் தந்த தகவல்களே அப்படியே சேகரித்து வைத்து இருக்கிறீர்களே' என்று கூறுவதுபோல் தோன்றியது.

ஏழரை மணி நேர வேலே

நானும் ஓர் ஆலேயிலே பணியாற்றுகின்றவஞக அப்போது இருந்த காரணத்தால் மட்டுமின்றி, தொழிற்

சங்கச் செயற்குழுவிலும் உறுப்பினராக இருந்ததால் தொழிலாளிகள் பற்றிய செய்திகளைச் சீராகக் குறிப்பெடுத்துக் கொண்டேன். அதை மீண்டும் படிக்கச் சொன்னார், தோழர் கிருஷ்ணமூர்த்தி. நான் படிக்கத் தொடங்கினேன். அந்தத் தொழிற்சாலை இரவும், பகலும், தொடர்ந்து இயங்குகிறது. தொழிலாளர்கள் ஷிப்டு முறையில் பணியாற்றுகிறார்கள். ஒரு நாளைக்கு தொழிலாளி ஏழரைமணி நேரம் பணியாற்றுகிறார். வாரத்திற்கு ஐந்து நாட்களே வேலை செய்கிறார்கள். கொடுக்கப்படுகின்ற வேலை அளவு முடிந்து மேலும் பணி செய்வார்களானால் முப்பது சதவிகித ஊதியம் மேலும் கிடைக்கப் பெறுகிறார்கள். பெண் தொழிலாளர்கள் ஐம்பத்தைந்தாவது வயதிலும், ஆண் தொழிலாளர்கள் அறுபதாவது வயதிலும் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார்கள். தொழிலாளர் பிரச்சினைகளைக் கேட்டறிந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நம் நாட்டிலும் வேலை நேரம் குறைக்கப்பட வேண்டும் என்றுகூறி, தொழிலாளர்க்கு ஊதியம் உயர்த்தப்பட வேண்டிய அவசியம் பற்றியும், தொழிலாளர்களுக்குள்ள குறைபாடுகள் நீக்கப்பட வேண்டியது பற்றியும் பேச ஆரம்பித்தார்.

என்னுடைய சிந்தனைப் பறவை தாயகத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கியது. தமிழக அரசு நடத்துகின்ற பஸ் போக்குவரவுத் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் குறைபாடுகள் பல நீக்கப்பட்டு வருகின்ற நிலைமைகளை நினைவு படுத்திக் கொண்டேன். இதைக் கேட்ட கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தாம் தொழிற் சங்க இயக்கத்தில் தொடர்ந்து முப்பது ஆண்டுக்காலம் உழன்று வருவதாகவும், ஆகவே இப்பிரச்சினை பற்றித் தெளிவாக அறிந்து அரசு எடுக்கின்ற நடவடிக்கை மகிழ்வு தருவதாகவும் கூறினார். அப்படிப்பட்ட இந்த அரசு நடத்துகின்ற பஸ் போக்குவரவில் தொழிலாளர்களின் பிரச்சினைகள் மேலும் தீர்க்கப்பட வேண்டிய காலம் வந்து விட்டதை எடுத்துச்

சொன்னேன். தொழிலாளர் பிரச்சினையில் தமிழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறினேன்.

தமிழக அரசுக்குப் பாராட்டு

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே இயங்குகின்ற புதிய மக்களரசு தொழிலாளர்கள் பால் கொண்டுள்ள அன்பையும் ஆதரவையும் எடுத்துக் கூறினேன். குறிப்பாகப் போக்குவரவு அமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் தொழிலாளர்களிடம் காட்டுகின்ற கருணை உள்ளத்தை எடுத்துக் கூறினேன். நீண்டகாலமாக இருந்து வருகின்ற தொழிலாளர் பற்றிய சுமார் இருபத்து நான்கு கோரிக்கைகளை ஒரு மேடையில் மொத்தமாக எடுத்துக் காட்டியபோது, படித்துக் கேட்ட நேரத்திலேயே, அந்த மேடையிலேயே சுமார் பதின்மூன்று கோரிக்கைகளை ஏற்றுக் ''குறைகளை நீக்கி ஆவன செய்து தருகிறேன்'' என்று உறுதிமொழி தந்ததை நினைவு படுத்தினேன். அது மட்டுமின்றி கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவது பற்றியும் எடுத்து விளக்கினேன்.

நான் கூறியதை திருமதி லூசி மொழிபெயர்த்துச் சொல்ல, தோழர் பொலியகோவ் கேட்டதும் புன்னகை பூத்த முகத்தோடு எங்கள் ஒவ்வொருவரையும் கைகுலுக்கிப் பாராட்டுவதாகக் கூறினார்.

இரவு உணவுக்குப்பின் தோழர் பொலியகோவும், திருமதி லூசி அவர்களும் எங்களிடமிருந்து விடைபெற்றுத் தத்தம் வீடு திரும்பினர். நாங்கள் மாடி ஏறி அவரவர் அறைகளை நாடிச் சென்றோம்.

மறுநாள் காலை சிற்றுண்டி முடிந்தது. புதிதாக வளர்கின்ற நகர்ப் பகுதியைப் பார்ப்பதற்குப் புறப்பட்டோம். திருமதி லூசியிடம் எங்கள் குழுவில் ஒருவர் ஒரு கேள்வி எழுப்பினார். ''சோவியத் நாட்டின் வரலாறு ஓரளவுக்குப் படித்திருக்கிறோம். ஆனாலும் நீங்களே புரட்சிக்கு முன்பு

பிருந்த நிலை பற்றிக் கூற வேண்டுகிறேன்'' என்றார். ''அந்த நாட்டுக் குடிமக்களை நேராகக் காண்பதும் அவர்களிடம் கேள்வி கேட்பதும் சிறப்பல்லவா!'' என்று எங்களைப் பார்த்துச் சொன்னார். நான் 'ஆம்' என்று தலையை அசைத்தேன். நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த காரின் வேகத்துடன் திருமதி லூசியினுடைய நாவின் வேகம் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

பண்டை இரஷ்யா

''ஸ்லேவ்-இன மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மத்திய, கிழக்கு ஐரோப்பாவில் பரவலாகக் குடியேற ஆரம்பித்தனர். பண்டை இரஷ்ய நாடு, இரஷ்ய இனம், உக்ரைன், ருஷிய இனமக்களைக் கொண்டதாகும். ஒன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் பழைய இரஷ்ய நாடு உருவாயிற்று. பத்தாவது நூற்றாண்டில் அந்நாட்டு மதமாக கிறிஸ்தவம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரபுத்துவ உறவு வளர்ந்த காரணத்தால் தனித்த இராச வம்சம் உருவாகிக் ''கீவ்'' விலிருந்து ஒவ்வொரு பகுதியாகக் குறைந்து பல வீனப்பட்டது. பதின்மூன்றாவது நூற்றாண்டில் மங்கோலியர் படையெடுத்ததன் விளைவாக ரூஸ் கீழ்க் கொண்டு வரப்பட்டு இருநூறு ஆண்டுகளாக அவர்களுடைய ஆட்சி நடைபெற்றது.

''அதே காலத்தில் சுவீடன் பிரபுக்களும் செர்மானிய வீரர்களும் ரூஸ் வடக்குப் பகுதியில் தாக்க ஆரம்பித்தனர். ஆனாலும் அலெக்சாண்டர் நீவ்ஸ்கி மன்னனின் தலைமையில் இரஷியப்படைகள் திருப்பித் தாக்கிச் சின்ன பின்னப்படுத்தின. பதினான்காவது நூற்றாண்டில் முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமாக மாஸ்கோ தனித்துவளர ஆரம்பித்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசியில் இரஷியப் பகுதிகள் மாஸ்கோவைச் சுற்றி இணைந்த நாடாக மத்திய இரஷியா உருவானது.

ஜார்ஜவான் ஆட்சிக் காலத்தில் இரஷ்ய நாட்டின் எல்லைகள் விரிவடையத் தொடங்கின. ''கழான்'' பகுதியும்

அஸ்ட்ரகன்கான் பகுதியும் இணைக்கப்பட்டன. அதுமட்டு மின்றி சைபீரியாவையும் மற்றுஞ் சில பகுதிகளையும் போரில் வென்று சேர்த்தார்கள். பதினேழாம் நூற்றுண்டின் முற் பகுதியில், வாடிகன் ஆதரவோடு போலந்து இரஷியாவின் மீது போர் தொடுத்தபோது காட்டிக்கொடுக்கும் போயர் துணையோடு மாஸ்கோவைப் பிடித்துக் கொண்டனர்.

நிலப் பிரபுக்கள், போயர்கள், ஜார் ஆகியோர் கொடுங்கோன்மை மிக்க ஆட்சியை எதிர்த்து அடிக்கடி கிளர்ச்சி செய்தனர். 1606-1607ம் ஆண்டில் ஐவான் பொலட்நிகோ தலைமையிலும், 1648-1650-1662 ஆம் ஆண்டுகளில் கிராமப் பகுதி கொதித்தெழுந்ததும் 1667-1671ம் ஆண்டில் ஸ்டீபன் ராஜின் தலைமை யிலும் பெரிய விவசாயிகள் கிளர்ந்து எழுந்ததும் குறிப் பிடத்தக்கன''.

நிலநேவா நதியின் கரையின்

பதினேழாம் நூற்றுண்டில் போலந்து பிரபுக்கள் மங் கோலியர் ஆட்சியை ஒழித்தார்கள்

உக்ரையினின் வீரஞ்செறிந்த மக்கள் போலந்து ஆதிக் கத்தை ஒழித்துக்கட்டி மீண்டும் இரஷியாவோடு இணைந் தார்கள். இந்த இணைப்பானது உக்ரையன். இரஷிய மக்களின் அரசியல் பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு முன்னேற்றத்திற்குத் துணையாக இருந்தது.

பதினெட்டாம் நூற்றுண்டில் மகாபீட்டரின் ஆட்சிக் காலத்தில் அரசியல், பொருளாதாரம் பாதுகாப்பு ஆகியவை சீர்திருத்தம் பெற்றன. சுவீடனுேடு போரிட்டு இரஷ்யா வெற்றி கண்டது மட்டுமின்றி பால்டிக் கடற்கரைக்கும் வழியை ஏற்படுத்திக் கொண்டது.

1703ல்தான் பீட்டர் மன்னன் நேவாநதிக் கரை யிலே புதிய இரஷியாவின் தலைநகராகிய புனித பீட்டர்ஸ்பர்க் நகரத்தை உருவாக்கினுன்.

இந்தக் காலத்தில்தான் ஐரோப்பிய வல்லரசுகளின் சிகரமாக இரஷியப் பேரரசு விளங்கத் தொடங்கியது. அரசி

இரண்டாவது கேத்தரின் கொடுங் கோலாட்சி தோழர் ஏமெல்யான் புகச்சோவ் தலைமையில் நடந்த விவசாயப் போராட்டத்தில் ஆட்டங்கொடுக்க ஆரம்பித்தது.

1812ஆம் ஆண்டில் நெப்போலியன் இரஷ்யா மீது படையெடுத்தான். வீரஞ்செறிந்த போர்த் தளபதி குரு சோவ் தலைமையில் இரஷியப் படை நாட்டு மக்களின் ஒத்துழைப்போடு நெப்போலியன் படையை நாசமாக்கித் தாயகத்தை விட்டு விரட்டியடித்தது. நெப்போலியனின் மற்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்த ஆதிக்க முடிவிற்கு அது அடிகோலியது எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இரஷிய மக்கள் நாட்டின் நிலப்பரப்பை விரிவாக்குவதில் முனைந்து நின்றனர்.

கிழக்கு ஐரேப்பாவிலும் வடக்கு ஆசியாவிலும் தெற்கில் விவசாயத்தைத் துவக்கியும், சைபீரியாவில் டைகாவை விலக்கியும் தூரக் கிழக்கில் துறைமுகத்தைக் கட்டியும் விரிவாக்கினர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடையில் இரஷியப் பேரரசு, கிரிமியா, உக்ரையன் கருங்கடற்கரைப் பகுதி, பைலோ இரஷியா, பால்டிக் மாநிலம், காக்கசஸ், மோல் டோலியா, கஜாகஸ்தான் ஆகியவைகளைச் சேர்த்துக்கொண்டது. மேற்கண்ட பகுதிகளில் உள்ள மக்கள் ஜாரின் கொடுமைக்கு ஆளாகியபோதிலும் உண்மையான நண்பர்களாகவும் நட்புக்கு வேண்டியவர்களாகவும் இரஷிய மக்கள் விளங்குவதைக் கண்டு மகிழ்ந்தனர்.

புரட்சி இயக்கமும் விவசாயிகள் விழிப்பும்!

புரட்சி இயக்கம் உருவாகத் தொடங்கியது. விவசாயிகள் பெரிய அளவில் விழிப்புற்று எழத் தொடங்கினர். நாட்டில் தொழிற் பெருக்கம் ஆரம்பித்தது. அதனுடன் முதலாளித்துவமும் முளைவிட்டெழுந்தது.

1880ல் டோனட்ஸ் பகுதியிலும், கிரிகோவ்ரோக் பகுதியிலும் தொழிற்சாலைகள் உருவாயின. பாகு பகுதியிலும், குரு, சினி பகுதியிலும் எண்ணெய்த் தொழிற்

சாலையைக் கண்டார்கள். இரயில்மூலம் ஐரோப்பாவையும் பசிபிக் கடற்கரையையும் இணைத்ததன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது.

இரஷ்யாவில் புரட்சி இயக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரத் தொடங்கியது. வேலை நிறுத்தங்கள் நாட்டில் பரவ ஆரம்பித்தன. முதன் முதலாகத் தொழிலாளர் இயக்கம் துவக்கப்பட்டது.

தொழிலாளர் வர்க்க வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் மாவீரர் வி. ஐ. லெனின் புனித பீட்டர்ஸ்பர்க்கில் 1895ல் கழகம் கண்டார். 1903ம் ஆண்டில் இரண்டாவது மாநாட்டில் புரட்சி சமூக ஜனநாயகக் கட்சி லெனின் தலைமையில் துவக்கப்பட்டது.

ஜப்பான் போரில் இரஷ்யாவின் தோல்வி

1905ம் ஆண்டில் இரஷியா நாடு ஜப்பான் நாட்டோடு நடத்திய போரில் தோல்வி கண்டது. ஜாரின் கொடுமைக்கு நாட்டு மக்கள் நாளும் பலியாகிக் கொண்டு வந்தார்கள். 1905ஆம் ஆண்டு சனவரித் திங்கள் ஒன்பதாம் நாள் ஜார் மன்னனின் படை புனித பீட்டர்ஸ் பர்க்கில் அமைதியான போராட்டம் நடத்திய தொழிலாளர்களைச் சுட்டது. அதை ஒட்டி வெடித்த புரட்சியை ஆட்சியினர் நசுக்குவதில் வெற்றி கண்டனர்.

முதல் உலகப் போரில் இரஷியா முன்னேச்சரிக்கையோடு இல்லாத காரணத்தால் தொடர்ந்து தோல்விக்கு ஆளாகியது. அதன்மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது. புரட்சித் தணலும் போரினால் சிறிது அணைந்தது.

ஜாரின் வீழ்ச்சி

1917ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நாட்டு மக்கள் ஜார் மன்னனைப் பதவியினின்றும் தூக்கி எறிந்தனர்.

ஆனாலும் ஆட்சி பீடத்தில் அமர்ந்தவர்கள் தொழி

லாளத் தோழர்களுக்கு நண்பர்கள் அல்லர்; பூர்ஷ்வா மனப்பான்மை கொண்டவர்கள் ஆவர்.

போல்ஷ்விக் கட்சியின் தலைமையில் தொழிலாளத் தோழர்கள் ஆட்சியை எதிர்த்துப் போரிட்டனர். அக்டோபர்த் திங்கள் இருபத்தைந்தாம் நாள் புதியதாக ஆட்சி பீடமேறியவர்களும் தூக்கி எறியப்பட்டனர். விவசாயிகளும், தொழிலாளர்களும் படைவீரர்களும் சேர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றித் தொழிலாளர் ஆட்சியை நிறுவினர்

இந்த நீண்ட வரலாற்றை திருமதி லூசி கூறக் கேட்ட எங்களுக்கு வகுப்பு அறைகளில் ஆசிரியரிடம் பாடம் கேட்டது நினைவுக்கு வந்தது. நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த கார்கள் போய்ச் சேரவேண்டிய குடியிருப்புப் பகுதிக்கு வந்து நின்றதை ஒலி எழுப்புவதன்மூலம் கார் ஓட்டும் தொழிலாளி நினைவு படுத்தினார்.

குடியிருப்பு வசதியளிப்பதில் விளைந்த முன்னேற்றம்

சோவியத் நாட்டில் நகரங்களிலும் தொழிலாளர்களது குடியேற்றங்களிலும் புதிய குடியிருப்புக் கட்டிடங்கள் பல நாள்தோறும் கட்டி முடிக்கப்பெற்று, நாள் ஒன்றுக்கு சராசரி ஏழாயிரம் குடும்பங்கள் விதம் புதிய குடித்தனப் பகுதிகளில் குடியேறுகின்றன. பளுதூக்கி இயந்திரங்களின் ஓசை வேலை செய்யும் கட்டிட நிர்மாணத் தளங்களில் கேட்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப்பின் நடந்த இருபது ஆண்டுகளில் மூன்று கோடி சதுர மீட்டர் குடியிருப்புப் பரப்புள்ள வீடுகள் சோவியத் தலைநகரில் கட்டப் பெற்றன. இன்று மாஸ்கோவிலுள்ள வீடுகளில் நாற்பத்தைந்து சதவீதம் கடந்த இருபது ஆண்டுகளில் கட்டப் பட்டவை. மற்ற சோவியத் நகரங்களில் கட்டட வளர்ச்சியின் நிலையும் இதுபோன்றே உள்ளது. நகர மக்களின் நபர் விகிதக் குடியிருப்புப் பரப்பளவின் ஆண்டுப் பெருக்கத்தில் மாஸ்கோ நகர் சோவியத் நகர்களில் இருபத்து இரண்டாவது இடத்தை அடைந்திருக்கிறது. ஆண்டிற்கு

ஒரு இலட்சத்து பத்தாயிரம் குடித்தனப் பகுதிகள் கட்டப் பெறுகின்றன. சோவியத் எங்கணுமே குடியிருப்பு நிர் மாணம் பெருத்த அளவில் நடைபெற்று வருகிறது. சோவி யத் மக்கள் வசிக்கும் எல்லா இடங்களிலும் சைபீரி யாவின் எல்லேயற்ற பெரும் பெரும் பரப்புகளிலும், தூரக் கிழக்கிலும் கஜாக்ஸ்தானிலும், மத்திய ஆசியக் குடியரசு களிலும் உக்ரைனிலும் ஐரோப்பியப் பகுதியின் வட பகுதி களிலும், காக்சசிலும், பால்டிக் குடியரசுகளிலும், எல்லா இடங்களிலுமே புதுப்புது நகரங்களும் நகரையொத்த குடி யேற்றங்களும் மின்னல் வேகத்தில் உருவாக்கப்பட்டு வரு கின்றன. நவீன வசதிகளேயுடைய எழிலார்ந்த பரந்த வீடுகள் எங்கும் கட்டப்பெற்று வருகின்றன. நகரங்களின் சுற்று வட்டாரப் பகுதிகளின் தெருக்கள் முன்பு ஒரே சகதிமயமாயிருந்த நிலேமாறித் தார் வீதிகளாகி, ஒளி விளக்குகள் நிறைந்து காணப்படுகின்றன.

குழந்தைகள் நெடுந்தொலேவு நடக்க வேண்டியிராத படி பள்ளிக்கூடங்கள் அண்மையில் அமைந்திருக்கின்றன. பண்பாட்டு நிலேயம், மருத்துவ நிலேயம், சிற்றுண்டி விடுதி, சலவை நிலேயம், குளியல் இடங்கள், முடிதிருத்தும் நிலேயம், தையல் நிலேயம், பல்வேறு சாமான்களும், பழுதுபார்க்கும் கடைகள் போன்ற தொண்டாற்றும் நிலேயங்களும் நகர வாசிகளுக்கு வசதியான இடங்களில் அமைந்துள்ளன, நாட்டு மக்களில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் கட்டப்படும் குடித்தனப் பகுதிகளின் எண்ணிக்கை 1957ஆம் ஆண்டு முதலாகவே சோவியத் ஒன்றிய உலக நாடுகளில் முன்னிலே யில் நிற்கின்றது. 1954 முதல் 1963 வரை பத்து ஆண்டு களில் நகரப்புறங்களில் ஒரு கோடி எழுபது இலட்சத்துக்கு அதிகமாகவும், கிராமப்புறங்களில் ஏறத்தாழ அறுபது இலட்சமும் புதிய குடித்தனப் பகுதிகள் கட்டப்பெற்றன. பதினேழு கோடி எண்பது இலட்சம் மக்கள் அதாவது நாட்டு மக்களில் பாதிப் பேர், புதிய குடித்தனப் பகுதி களுக்குக் குடியேறி தமது குடியிருப்பு நிலேமைகளே வளப் படுத்திக் கொண்டனர்.

கடந்த பத்தாண்டுகளில் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், இத்தாலி, சுவிட்சர்லாந்து ஆகிய ஏழு நாடுகளும் சேர்ந்து கட்டிய குடித்தனப் பகுதிகளின் மொத்த எண்ணிக்கையைவிட அதிக மான குடித்தனப் பகுதிகள் சோவியத் ஒன்றியத்தில் கட்டப் பெற்றன; வீடுகள் கட்டும் பணியை விரைவுப்படுத்து வதிலும், வேலைகளின் தரம் உயர்நிலையில் இருக்கும்படி மேற்பார்வையிட்டுக் கவனித்துக் கொள்வதிலும் செலவு களைக் குறைப்பதிலும் கட்டிட நிர்மாண, கட்டிடப் பொருள்கள் தொழிலின் தொழிலாளர்களது தொழிற் சங்கம் முக்கியப் பங்கு எடுத்துக்கொள்கிறது. இச்சங்கத்தில் ஐம்பது இலட்சம் தொழிலாளர்களும் பொறியியல் வல்லுநர் களும் கட்டிடக் கலை நிபுணர்களும் அலுவலக ஊழியர்களும் ஒன்று படுத்தப்பட்டிருக்கின்றனர்.

உலகிலே சோவியத் நாட்டில்தான் வீட்டு வாடகை மிகவும் குறைந்ததாகும். ஏனெனில், சோவியத் சட்டத்தின் படி வீட்டு வாடகை, வீடு பராமரிப்பதற்கு ஆகும் செலவை அடிப்படையாகக் கொள்ளாமல், குடித்தனக்காரரின் வருவாயையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமையலறை, தாழ்வாரம், குளியல் அறை இவற்றுக்காகக் குடித்தனக்காரர்கள் வாடகை எதுவும் தரவேண்டியதில்லை. குடும்பத்தின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாக இருப்பவரது ஊதியம் பென்ஷன் அல்லது வருவாயின் அடிப்படையில் வாடகை விகிதம் கணக்கிடப்படுகிறது. குடும்ப வருவாயில் சராசரி நான்கு, ஐந்து சதவீதத்துக்குமேல் வாடகைக் காகவும் பொதுவசதிகளுக்காகவும் செலவிடத் தேவை இருக்காது.

குடியிருப்புப் பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்த பொறியியல் வல்லுநர் எங்களை வரவேற்றார். தேநீர் விருந்து நடந்து கொண்டிருந்தபோது, சோவியத் ஒன்றியத்தின் குடியிருப்புக் கட்டடப் பிரச்சினை பற்றித் தொடர்கதை போல் சொல்லத் தொடங்கினார். தேநீர் விருந்து அரை மணி நேரத்திற்குமேல் ஆகிவிட்டது. தொடர்கதையை முக்கால் பகுதிக்கு மேல் முடித்துவிட்டு எழுந்தார்.

நாங்களும் பின் தொடர்ந்தோம். எங்களோடு வந்த திருமதி லூசி தமக்கு ஓய்வு கிடைத்ததை எண்ணி உள்ளம் மகிழ்ந்தவாறு, மேயரைப் பார்த்து, விளையாட்டாக ''விடுமுறை வேண்டும் ஒரு மணி நேரத்திற்கு; எனக்குப் பதிலாக பொறியியல் வல்லுநர் உதவி செய்வார்'' என்று கூறி அமைதியாக எங்களுடன் வந்தார்.

வீடு கட்டுவதிலே புரட்சி!

நாங்கள் அங்குச் சென்ற நேரத்தில் பத்து அடுக்கு, ஆறு அடுக்கு, எட்டு அடுக்கு மாடி வீடுகளும் பல கட்டிக் கொண்டிருந்தார்கள். முடிந்ததும் முடியாததுமாயிருந்த ஒரு வீட்டருகில் அழைத்துச் சென்ருர் பொறியியல் வல்லுநர். 'எத்தனை நாளில் இந்த மாடி வீட்டைக் கட்டி முடிப்பீர்கள்?' என்று எங்களில் ஒருவர் கேட்க ''சுமார் மூன்று திங்கள்களில் இந்த பத்து அடுக்கு மாடி வீட்டைக் கட்டி முடிப்போம்'' என்ருர் அந்த பொறியியல் வல்லுநர்.

''எத்தனை தொழிலாளர்கள் இந்தக் கட்டிடம் கட்டுவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிருர்கள்?'' என்று கேட்டேன். அதற்கு அவர் 'இருபதுபேர் வேலையில் ஈடுபட்டிருக்கிருர்கள்' என்று கூறினர். எங்களுக்கு வியப்பாக இருந்தது, இந்தப் பதிலைக் கேட்டதும்! 'எப்படிக் கட்டுகிறீர்கள் இவ்வளவு விரைவான காலத்தில்?' என்று கேட்க, அதற்கு அவர் கூறினர், ''ப்ரி-பேப்ரிகேட்டடு முறையில் இவ்வீடுகள் எல்லாம் கட்டப்படுகின்றன'' என்று! நாங்கள் பார்த்தோம், செங்கல்லைக் காணவில்லை; மேலே வேய ஓடுகளும் இல்லை. ஆயத்தமான சுவர்களை அங்கே வைத்திருந்தார்கள். வீட்டைக் கட்டுவதற்காகச் சுமை தூக்கும் பொறிகள் (கிரேன்கள்) வேலை செய்து கொண்டிருந்தன. ஒன்றின் மேல் ஒன்றை வைத்து அடுக்கிக் கொண்டு போவது வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருந்தது.

நான் கேட்டேன் ''இவ்வளவு விரைவாக, ஆயத்தமான சுவர்களையும் ஆயத்தமான அடித்தளங்களைக் கொண்டு கட்டுகிறீர்களே, நீண்டகாலத்திற்கு இவ்வீடுகள் நிலைக்குமா?

என்று. அதற்கு அவர், 'செங்கல்லை வைத்துக் கட்டுவதைவிட இந்த வீடுகள் எந்த வகையிலும் சக்தி குறைந்தவையல்ல' என்று பதிலுரைத்தார். உள்ளே சென்றோம். 'ஒரு குடும்பம் வாழ எத்தனை அறைகள் அளிக்கிறீர்கள்?' என்று எங்களில் ஒருவர் கேட்க, அதற்கு அந்தப் பொறியியல் வல்லுநர், 'ஒரு குடும்பத்திற்கு வீட்டை ஒதுக்குவது என்பது ஒருவர் பெறுகின்ற ஊதியத்தைப் பொறுத்தது அல்ல. ஒரு குடும்பத்தில் உள்ளவர் எண்ணிக்கையைப் பொறுத்து அந்தக் குடும்பம் வாழ்வதற்கு ஏற்ற அளவில் அறையின் எண்கள் இருக்கும். உதாரணமாக, ஒரு கணவன், மனைவி மட்டும் உள்ள சிறிய குடும்பத்திற்குப் படுக்கை அறை, சமையலறை, பொருள்வைக்கும் அறை, குளிக்கும் அறை, அத்துடன் இணைந்த கழிவறை ஆகியவை ஒதுக்கப்படுகின்றன. இவை யாவும் சேர்ந்த ஒன்றுதான் ஒரு 'பிளாட்' என்று அவர் கூறினார்.

''சுமார் ஆயிரத்து இருநூறு ரூபிள் ஊதியம் பெறுகின்ற டாக்டராயிருப்பினும் இந்த அளவு கொண்ட 'பிளாட்'தான் அவருக்குக் குடியிருப்பாக அளிக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற சாதாரண தொழிலாளியினுடைய குடும்பம் பெரிதாக இருந்தால் அந்தக் குடும்பம் வசதியாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் அறைகளின் எண்ணிக்கையை உயர்த்திக் குடியிருக்க வசதியான வகையில் ஏற்பாடு செய்கிறோம்'' என்று பெருமிதமாக அந்தப் பொறியியல் வல்லுநர் பதிலுரைத்தார். 'குடியிருக்க ஒரு குடும்பத்திற்கு என்ன குடக்கூலி கொடுக்க வேண்டும்?' என்று ஒருவர் கேட்க, ''அந்தக் குடும்பத்தவர் பெறுகின்ற ஊதியத்தில் ஆறு சதவிகிதம் கொடுக்க வேண்டும்'' என்று பதில் வந்தது. வந்த பதிலைக் கண்டு வியப்பிலாழ்ந்தோம். நம் நாட்டில் குடியிருக்க ஒருவர் பெறுகின்ற ஊதியத்தில் நடுத்தரக் குடும்பமாயிருந்தால் குறைந்தது இருபது சதவிகிதமாவது அளிக்கின்ற நிலையை எண்ணிப் பெருமூச்சுவிட்டேன்.

''உங்கள் நாட்டில் வீட்டு நெருக்கடியை எப்போது தீர்க்கமுடியும் என்று எண்ணுகிறீர்கள்?'' என்று கேட்க,

அந்தப் பொறியியல் வல்லுநர், ''இந்தப் பிரச்சினை வால்கா நகரத்தை மட்டும் பொறுத்தது அல்ல; சோவியத் நாடு முழுவதற்கும் உள்ள இந்தப் பிரச்சினையை 1971ஆம் ஆண்டில் முடித்து விடுவோம்'' என்று பெருமிதமாகக் கூறினார்.

''நாட்டின் பல திட்டங்களில் முக்கிய திட்டமாக எண்ணி இதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்'' என்று மேலும் அவர் கூறினார். அந்த நகரத்தில் ஏற்கனவே கட்டி முடித்திருக்கின்ற மிகப் பெரிய கட்டிடங்கள், அதாவது இருபது, முப்பது அடுக்கு மாளிகைகள், இருநூறு முந்நூறு நானூறு அறைகளும் கூடங்களும் உள்ள கட்டிடங்கள், கருங்கற்களாலும் சலவைக் கற்களாலும் கட்டப்பட்டவையாயிருக்கின்றன.

தமிழகமும் சோவியத்தும்

சோவியத் நாட்டிலேயும் சொந்தமாக வீடுகள் வாங்கிக் கொள்ள ஆட்சியினர் அனுமதி வழங்கியிருக்கின்றனர். நம் தமிழகத்தில் அரசு வீடு கட்டும் நிறுவனத்திடம் மாதத் தவணையில் பணத்தைச் செலுத்தி ஒருவர் வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்வதுபோல் அங்கேயும் அரசினர் வீடு கொடுத்து மாதத் தவணையில் பணத்தை வசூல் செய்து கொள்கின்றனர்.

ஒரு பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்ற ஒரு பேராசிரியரைப் பார்த்துப் பேசியபோது, அவர் வீட்டைப் பற்றிக் கேட்டோம், அப்போது அவர் சொன்னார், ''எங்கள் நாட்டிலேயும் ஒரு வீட்டை உரிமையாக்கிக் கொள்ள அரசு உரிமை தருகிறது. அந்த வகையில் நானும் ஒரு வீட்டைப் (பிளாட்) பெற்று மாதத்தவணையில் பணத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறேன்'' என்று.

எங்கள் குழுவிலிருந்த தோழர் கிருஷ்ணமூர்த்தி, ''ஒருவர், ஒரு வீட்டிற்குமேல் சொந்தமாக்கிக் கொள்ள அனுமதி உண்டா?'' என்று அவர்களே விரும்பாத கேள்வியைக் கேட்டார். ''இல்லை'', ''இல்லை'' என்று

அழுத்தந் திருத்தமாக அந்தப் பொறியியல் வல்லுநர் பகர்ந்தார். அந்தப் பரந்து விரிந்த அழகான பாதையின் இருமருக்கிலும் ஓங்கி உயர்ந்து நீண்டிருந்த கட்டி முடித்த பெருங்கட்டடங்களை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தேன். கட்டடங்களுக்கு இடையே அடர்ந்த செடிகளும் உயர்ந்து நீண்டகொடிகளும் பச்சைப் பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தன.

கண்கள் நமக்கும் உண்டு—நமக்கும்
 கருதும் வன்மை யுண்டு
மண்ணிடைத் தேச மெல்லாம்—தினமும்
 வாழ்திடும் வாழ்க்கையிலே
எண்ண இயலாத—புதுமை
 எதிரிற் காணுகின்றோம்
கண்ணிருந்தென்ன பயன்? நமக்குக்
 காதிருந் தென்ன பயன்?

வால்காகிராடின் வரவேற்பு!

வால்காகிராடு நகரிலிருந்து லெனின்கிராடு நகருக்குப் புறப்படுவதற்கு முன்னுள் நகராட்சி உறுப்பினர்களையும் செயற்குழுவில் உள்ளவர்களையும் மாநகராட்சித் தலைவர், துணைத்தலைவர் ஆகியோரையும் எங்கள் குழு சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் பகல் மூன்று மணி முதல் ஐந்தரை மணி வரை என்று அதற்குரிய காலம் குறிப்பிட்டிருந்தார்கள்.

மாநகராட்சிக்காகத் தனியாக ஓர் எழில்மிக்க கண்ணுடி மாளிகை ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். வெளிநாட்டுக்காரர்களுக்கு வரவேற்பு அளிப்பதை அங்கேதான் வைத்துக் கொள்வது வழக்கம் என்றார்கள். குறித்த நேரத்திற்குத் தோழர் பொலியகோவ் அவர்களும் திருமதி லூசி அவர்களும் உடன்வர நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்தோம். பல்வேறு அலுவல்களைச் சுமந்து கொண்டுள்ள வால்காகிராடு நகர மேயர் அவர்கள் வரவேற்றார். வரவேற்று நீண்டதொரு

உரையே நிகழ்த்தினர். வால்காகிராடு நகராட்சி நிர்வாக முறைகள் பற்றியும், தீட்டி நிறைவேற்றப்படுகின்ற திட்டங்கள் பற்றியும் அவற்றிற்கு ஒத்துழைப்புத் தருகின்ற மன்ற உறுப்பினர்கள் பற்றியும் பெருமையோடு எடுத்துச் சொன்னர்.

'வால்காகிராடு நகராட்சிக்கு ஆண்டு வருமானம் ஏழு கோடி ரூபிள்; அதாவது ஐம்பத்தாறு கோடி ரூபாய். இவை பெருவாரியாகத் தொழிற்சாலைகளிலிருந்தும் சிறிய அளவில் வரியிலிருந்தும், கிடைக்கிறது' என்ருர். மணமாகாதவர்களுக்கு ஒரு தனி வரி இருப்பதாகவும் கூறினர். மொத்தம் வருவாயில் 62 சதவிகிதம் கல்வி, மருத்துவ வசதிகளுக்கு என்றும், ஒரு சதவிகிதம்தான் நிர்வாகச் செலவுக்கென்றும் குறிப்பிட்டார்.

மாநகராட்சிப் பணிகளைச் சிராகச் செய்து முடிக்கச் சில குழுக்கள் இருப்பதாகவும் அந்த குழுக்களில் மாநகராட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதாகவும், டாக்டர்கள், பொறியியல்வல்லுநர், அலுவலகங்களில் பணி புரியும் நிர்வாகத் திறமையுள்ளவர்கள் ஆகியோர் மாநகராட்சி உறுப்பினர்களாக இருக்கிருர்கள். என்றும் கூறினர். இந்தக் குழுக்களே திட்டம் தீட்டி, நிதியொதுக்கி, விரைந்து பணிகளையும் முடிக்கின்றன என்ருர் அவர். வால்காகிராடு மாநகராட்சி நிர்வாக முறையைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு சென்னை மாநகராட்சியின் நிர்வாக முறை நினைவிற்கு வந்தது. சென்னை மாநகராட்சியின் ஆண்டு வருமானம் சுமார் ரூபாய் எட்டுக் கோடிதான் என்று எண்ணிய நேரத்தில் சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகள் என் முன்னே வந்து நின்றன. பாதைகளிலே சாக்கடை நீர் ஓடுகின்ற காட்சி, ஒழுங்காகக் குப்பையை அப்புறப்படுத்தாத நிலை, மேடும் பள்ளமும், குழிவிழுந்த பாதைகளும் ஒன்றன்பின் ஒன்ருக வந்து போயின. குறைந்த வருமானத்தை வைத்துக் கொண்டு நகரை தேவையான அளவிற்குச் சீர் செய்ய முடியாத பரிதாப நிலை நிர்வாகத் திலே உள்ள எங்களுக்கும், ஆணையருக்கும் இருப்பதையும் எண்ணினேன்.

மாநகராட்சியின் நிர்வாகச் செலவு ஆண்டிற்கு ஆவது வருகின்ற வருவாயில் ஐம்பது சதவிகிதத்திற்கு மேலாகும். ஆனாலுங்கூட ஒரு பக்கத்தில் தொழிலாளர் ஊதிய உயர்வுப் போராட்டம் அடிக்கடி இருந்தபடி இருப்பதையும் எண்ணினேன்.

வால்காகிராடு நகரம் விரைந்து வளர்வதில் உள்ள வருமானம் மட்டுமல்ல காரணம்; நிர்வாகச் செலவு, வருவாயில் ஒரு சதவிகிதம் என்பதும் காரணமாகும். அதுமட்டுமல்ல முக்கிய காரணம்; அங்குள்ள தொழிலாளத் தோழர்கள் ஊதியப் போராட்டம் என்றெல்லாம் வேலை நிறுத்தம் செய்வதில்லை. அதோடு கடமை உணர்ச்சி மிகுந்து தாங்கள் செய்கின்ற பணி தாங்கள் பெறுகின்ற ஊதியத் திற்கு அல்ல; நாடு உயர்வதற்கு என்ற உன்னதக் குறிக் கோளைக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இடைநேரத்தில் அவர்கள் பண்பாட்டை ஒட்டி ஏறக்குறைய ஏழெட்டு முறை தேசிய பானமாகிய வாட்காவை ஒருவருக்கொருவர் வாழ்த்துக் கூறி அருந்தி மகிழ்ந்தார்கள். எங்களில் சிலர் அவர்களோடு 'தேசிய பானத்தை' அருந்தினர். எங்கள் குழுவில் சிலர் 'தேசிய மது'வை நீக்கிப் பழச்சாற்றைப் பருகினோம்.

அங்குத் தங்கியிருந்த நாட்களில் மதுவைத் தொடா திருந்த எங்கள் குழுவிலிருந்த நண்பர் ஒருவர் அன்று மட்டும் அவர்களோடு சேர்ந்து சிறிது சுவைத்துப் பார்த்தார். எங்களில் சிலருக்கு இது வியப்பைத் தந்தது. கண்டிப்பாக மதுவைத் தவிர்த்து வந்த அவரை, ''இன்று மட்டும் ஏன் சுவைத்தீர்?'' என்று கேட்டதற்கு ''பல ஆண்டுகளாக மக்களோடு ஈடுபாடு கொண்டு பணியாற்றி வருகின்ற நான் சோவியத் மண்ணில் கால் வைத்ததும் என்னையே மறந்தேன். அவர்களோடு இணைந்து இருக்க விரும்பியே இன்று நான் சுவைத்தேன்' என்றார். மது அருந்தும் நேரத்தில் என்னைப் பார்த்து அந்நகரத் துணை மேயர் 'தேசிய பானத்தைக் குடிப் பதில் தவறில்லையே' என்றுகூறிக்கொண்டே வாட்கா நிரப்பிய கண்ணாடிக் கிண்ணத்தை என்னிடம் நீட்டினார்.

மதுவும் ஊனும் மறுத்தேன்!

நீட்டிய கையைத் தடுத்து நிறுத்தி, மற்றொரு கையில் வைத்திருந்த தண்ணீர் நிரப்பியிருந்த கண்ணாடிக் கிண்ணத்தை அவருக்கு முன்பு நேராக நீட்டி, ''தேசிய பானம்'' (நேஷனல் டிரிங்க்) தான் குடிக்கச் சொல்கிறீர்கள், ஆனால் நான் குடிக்கப்போவது சர்வ தேசிய (இன்டர் நேஷனல் டிரிங்க்) பானமாகும். அதுதான் தண்ணீர்'' என்று அமைதியாகக் கூறினேன். அங்கிருந்த எல்லோரும் கொல் லென்று சிரித்தார்கள். மேஜைமேல் வைத்திருந்த உணவுப் பொருள்களை உண்ண ஆரம்பித்தோம். அவற்றில் ஊன் உணவு வகைகளும் இருந்தன. என் அருகில் ஒரு சிறு தட்டில் பச்சை வண்ணத்தில் (கடுகு போன்ற அளவுள்ள பொருளின் கலவை) ஒன்று வைத்திருந்தார்கள். எல்லோரும் அதனை உண்ண ஆரம்பித்தார்கள்.

என் எதிரில் உட்கார்ந்திருந்த தோழர் முனுசாமி அவர்கள் கடுகு போன்ற பொருளின் கலவையைக் காட்டி, ''இது மரக்கறி உணவில் சேர்ந்த ஒருவகை; சத்துள்ள தாகும். ஆகவே, ''சாப்பிடு'' என்று கூறிக்கொண்டே ஒரு கரண்டி அளவு எடுத்து உண்ணத் தொடங்கினர். நானும் அவரை நம்பி ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து வாயில் போட்டுக் கொள்ள முனைந்தபோது, அதைப் பார்த்துக் கொண்டு இருந்த தோழர் விநாயகமூர்த்தி அவர்கள், என்னைத் தடுத்து நிறுத்தும் வகையில், ''அது மீன் முட்டை, சாப்பிடாதே, சாப்பிடாதே!'' என்று தடுத்தார். எல்லோரும் என்னைப் பார்த்துத் தோழர் முனுசாமி அவர்களிடத்தில் ஏமாற்றம் அடைந்ததை எண்ணி நகைத்தனர்.

தேநீர் விருந்து முடிந்ததும் முக்கிய நிகழ்ச்சி தொடங் கியது. இரு நகரங்களின் சார்பிலும் ஓர் உடன்படிக்கை உருவாக்கப்பட்டு மேயருடன் நாங்கள் அனைவரும் அதில் கையெழுத்திட்டோம். அந்நகர மேயரும் உறுப்பினர்களும் கையெழுத்திட்டனர். உடன்படிக்கையின் கருத்து இதுதான்:—

வால்காகிராடு—சென்னை நட்புறவு

1. வால்காகிராடு நகரமும், சென்னை மாநகரமும் சகோதர நகரங்களாக விளங்க வேண்டும்.

2. ஒரு நகரின் வளர்ச்சியையும், திட்டத்தையும் பரிமாறிக் கொள்வது.

3. ஒரு நகரத்துக்கு ஒரு நகரம் நட்பை வளர்த்துக் கொள்வது.

4. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்குப் பயன் படும் வகையில் நாட்டுக்கு நாடு குழுக்களை அனுப்புவது.

5. உலகில் எந்தப் பகுதியில் நாட்டு விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு நாம் இருவரும் அன்பையும், ஆதரவையும் அளிக்க முன் வரவேண்டும்.

6. எந்த நாடு ஆக்கிரமிப்புக்கு ஆட்பட்டாலும் அந்த நாட்டைக் காப்பாற்றிப் பாதுகாக்க முனைவோருக்கு ஆதரவு காட்டவேண்டும்.

7. உலகில் அமைதி நிலவ, ஒன்றுபட்டு நின்று உழைக்க வேண்டும்.

8. இந்தச் சிரிய திட்டங்களையும் கொள்கைகளையும் உடன்பாடு ஏற்பதன் மூலம் உலகுக்கு உழைக்க முன்வருதல் வேண்டும்.

உலகில் அமைதி எங்கும் நிலவ வேண்டும் என்பதிலே நம் தாயகம் என்றும் பாடுபடத் தயங்கியதில்லை. நாம் உலகிலேயே சமாதானத் தூதுவர்களாக விளங்கி வருகிறோம் என்பது உலகோர் ஒத்துக் கொண்ட ஓர் உண்மையாகும். அதுபோல் உலகில் அமைதி நிலவப்பேரவாக் கொண்டு உழைத்து வருகின்ற தலையாய நாடுகளில் சோவியத் ஒன்றியமும் ஒன்று என்றால் மிகையாகாது. ஏவுகணைகளை வைத்துக் கொண்டே அமைதியை விரும்புகிறார்கள். போர்த் துறையில் பின்தங்கி அல்ல.

தாய்நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளப் போர்த் தளவாடங்களைக் காலத்திற்கேற்ற வகையில் உண்டாக்கிக் கொண்டுள்ளார்கள். போர் இல்லாத அமைதிக் காலத்தில் தான் நாட்டை வளரச் செய்ய முடியும் என்ற பேருண்மையை உணர்ந்து அமைதியை விரும்புகிறார்கள்.

அதுமட்டுமின்றிக் கடந்த இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் நாடு வெற்றி மாலையைச் சூட்டிக் கொண்டது என்றாலும் இலட்சக் கணக்கிலே ஆண் மக்களை இழந்து விட்டது. போரினால் ஏற்படக்கூடிய இழப்பு எந்த அளவிற்குப் பயங்கரமாக இருக்கிறது என்பதைச் சோவியத் மக்கள் முழுதும் உணர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக நாட்டில் பெண் இனத்தைவிட ஆண் இனம் குறைந்த அளவில் இருப்பதன் காரணம் போர் விளைவித்த கேடு என்றும் உணர்கிறார்கள்.

உடன்படிக்கையை ஒட்டி நடந்த விழா நிகழ்ச்சி முடிந்ததும் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி எட்டு அடிக்க இருந்தது. திருமதி லூசி எங்களை உடன் விடுதிக்குப் புறப்படக் கேட்டுக் கொண்டார். நேராக உணவுக் கூடத்துக்குச் சென்றோம். பரிமாறப்பட்ட உணவுகளைப் பதம்பார்க்க ஆரம்பித்தோம் நேரம்போனதே தெரியவில்லை. அன்றைய தினம் கூட்டம் நிறைய இருந்தது.

உணவுக்கூடத்தில் இன்னிசை !

இன்னிசையோடு ஓர் இளமங்கை பாடத் தொடங்கினாள். குரலிலே இனிமை கலந்திருந்தது. பாடிய பாட்டிலே உள்ள பொருள்தான் புரியவில்லையே தவிர கலை தவழ்ந்ததை உணர்ந்தோம். பாடும் முறையிலே ஒரு புதுமை. தென்றல் அசைவதைப் போல் அசைந்தாடிப் பாடினாள். எங்கள் பக்கத்து மேஜையிலே பிரெஞ்சுக் கொடியும், அதற்கு அடுத்த மேஜையில் கிழக்கு ஜெர்மெனியின் கொடியும், வேறொரு மேஜையில் யுகோஸ்லாயோவின் கொடியும் அசைந்தாடிக் கொண்டிருந்தன. அந்தக் கொடியைப் பார்த்ததும் அந்தந்த நாட்டு மக்கள் வருகை தந்திருப்பதும் அவர்கள் பயணிகளாக விளங்குவதும்

அந்நாட்டுக் கொடி மட்டும் இருத்தல் கண்டு புரிந்து கொண்டோம். எங்கள் மேஜைமேல் இந்தியக் கொடியும், சோவியத் கொடியும் சேர்த்து வைத்திருந்தனர். அரசுச் சார்புக் குழு என்பதால் அதிகார பூர்வமானது என்பதை விளக்கும் இரண்டு கொடிகளும் வைக்கப்பட்டிருந்தன. பிரெஞ்சுக்காரர்கள் பாட்டுடன் ஆணும் பெண்ணுமாக ஆடத் தொடங்கினர். இதைத் தொடர்ந்த செர்மானியர் களும், யுகஸ்லோவியர்களும் ஆட ஆரம்பித்தனர். அந்தக் கூடமே ஆனந்தக் கூத்தின் மையமாகக் காட்சியளித்தது. இந்த காட்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம்.

ஆடத் தெரியாதவரை அழைத்துச் சென்ற ஆரணங்கு!

ஒவ்வொரு மேஜையில் இருந்தவரும் பாடத் தொடங்கினர். ஒரு மேஜையிலிருந்தோர் பாடி முடித்ததும் அடுத்த மேஜையிலிருந்து பாட ஆரம்பித்தனர். இப்படி முறையாகப் பாடிக் கொண்டு வந்ததும் நாங்கள் பாட வேண்டிய 'முறை' வந்தது. கூடத்திலிருந்தோர் எல்லாம் குதூகலத்தோடு எங்களைப் பாடும்படித் தூண்டினர். திரு. கோதண்டபாணி, திரு. முனுசாமி ஆகியோர் திருப்பாவை 'திருவெம்பாவை' ஆகிய பாடல்களில் ஒன்றிரண்டு பாடினர். நான் பாரதியின் பாடலாகிய ''வாழ்க நீ எம்மான்'' என்று தொடங்கும் மறைந்துவிட்ட உலக உத்தமர் காந்தியடிகள் பற்றிய பாடலைப் பாடிமுடித்தேன்.

கூடியிருந்தோரெல்லாம் கைதட்டி ஆரவாரம் செய்தனர். பாடிய நானும் அந்நாட்டு மரபுப்படி அவர் களோடு சேர்ந்து கைதட்டி மகிழ்ந்தேன். பாடிய பாடல்களை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தனர். பின்னர் ஆண்களும் பெண்களும்கூடி நடனமாடத் தொடங்கினர். எங்களைத் தவிர அங்கிருந்த எல்லோரும், இளையவர்களும் முதியவர்களும் பங்கு கொண்டனர். அங்கிருந்த ஒரு இளநங்கை எங்கள் அருகே வந்து எங்களில் ஒருவரை நடன மாட அழைத்தார். அழைக்கப்பட்டவர் தயங்கியதும்

எங்களில் சிலர் அவரை வற்புறுத்தி அனுப்பி வைத்தனர். அழைத்துச் சென்ற அந்த இளநங்கை அவரை வேறொரு நடுத்தர வயதுடைய மாதிடம் ஒப்படைத்து ஒதுங்கி நின்றாள். இக்காட்சியைக் கண்ட எங்களுக்கு நகைப்பை அடக்க முடியவில்லை. வாய்விட்டுச் சிரித்தோம். நடன மாடச் சென்ற நண்பரும் ஆடத் தெரியாத காரணத்தால் உடனே திரும்பி வந்து விட்டார்.

தூய்மையின் தொட்டில்

வால்காகிராடு நகரத்திலுள்ள பாதைகளெல்லாம் மற்ற நகரங்களில் உள்ளதைப்போலவே அகலம் மிகுந்தவை யாகும். மைல் கணக்கில் நீண்டிருக்கின்றன; உலகத்திலேயே அகலமுள்ள பாதைகள் சோவியத் நாட்டின் தலைநகரங் களில் இருக்கின்றன—என்று கூறப்படுகிறது. நான் நேரிலேயே அந்நகரத்தில் உள்ள பாதைகளைக் கண்டபோது உண்மை என்பதை உணர்ந்தேன். இப்பெரிய அகலமான பாதைகளெல்லாம் எப்போது பார்த்தாலும் தூய்மையாகக் காணப்படுகின்றனவே அதற்குக் காரணமென்ன என்று எண்ணியபோது அதற்கான காரணத்தை அறிந்தேன். வீட்டில் குடியிருப்பவர்களோ அல்லது அலுவலகத்தில் பணி புரிபவர்களோ குப்பையைப் பாதைகளில் வீசி எறிவதில்லை. வீட்டிலேயும் அலுவலகக் கட்டடத்திலேயும் குப்பையைப் போடுவதற்குத் தொட்டிகள் இருக்கின்றன. குப்பையை முறையாகத் தொட்டிகளில் போடுகின்ற வழக்கத்தை கைக் கொண்டிருக்கிறார்கள்.

எப்போது பார்க்கினும் பாதைகள் தூய்மையாக விளங்குகின்றன. எப்போது தூய்மைப் படுத்துகிறார்கள்? துப்புரவு செய்கிறார்கள்? எத்தனை ஆயிரம் தொழிலாளர்கள் இப்பணியில் ஈடுபடுகிறார்கள்? என்பன போன்ற கேள்விகள் என் உள்ளத்தே எழுந்தன. பகலில் நகரில் சுற்றுகின்ற போதெல்லாம் துப்புரவு எங்கேயாவது நடைபெறுகின்றதா என்று தேடித் தேடிப் பார்த்தேன். எங்கும் நடைபெறுவ தாகக் காணோம். பகலில் துப்புரவு நடைபெறவில்லை

என்றால் இரவில் நடைபெற வேண்டுமல்லவா? அன்று இரவு விழித்திருந்து காணவேண்டும் என்று முடிவு செய்தேன். இரவு உணவை முடித்துக் கொண்டு சென்று திருக்குறளைப் படிக்கத் தொடங்கினேன். இரவு மணி இரண்டு இருக்கும். நான் தங்கியிருந்த ''இன்டூரிஸ்ட்'' விடுதியின் நான்காவது மாடியிலிருந்து சன்னல் வழியே எட்டிப்பார்த்தேன். தானாக இயங்கிப் பெருக்கும் இயந்திரம் பாதையில் பணி செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். இயந்திரம் ''உஸ்'' என்ற ஒலியைக் கிளப்பிக் கொண்டிருந்தது. விடுதியிலிருந்து வெளியே வந்து குப்பையைக் கூட்டும் இயந்திரத்தின் பணியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தேன். அப்போது சென்னை மாநகரில் உள்ள பெரிய பாதைகளான மவுண்ட் ரோடு, கடற்கரைச் சாலை, பூவிருந்தவல்லி—நெடுஞ்சாலை ஆகியவற்றில் மாநகராட்சியின் தானாக இயங்கும் குப்பை கூட்டும் இயந்திரம் குப்பை எடுப்பதில் ஈடுபட்டிருப்பது என் நினைவுக்கு வந்தது. பாதைகளிலுள்ள குப்பைகளை நீக்க இருபது இயந்திரங்கள் பணியாற்றுகின்றன. குப்பைகளையும் மற்றும் கழிவுப் பொருள்களையும் எடுத்துச் செல்ல நாற்பது லாரிகள் ஈடுபட்டிருக்கின்றன.

குப்பைகளும் தூசுகளும் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் லாரியிலிருந்து குழாய் மூலம் தண்ணீரைப் பாதையில் ஒரு தொழிலாளி பாய்ச்சிக் கொண்டிருந்தார். குழாயிலிருந்து பீறிட்டுக் கொண்டு வருகிற தண்ணீரின் வேகத்தில் பாதையில் இருக்கின்ற தூசும், அழுக்கும் நீங்குகின்றன. பாதைகளில் பாய்ச்சப்படும் அழுக்கான தண்ணீர் பாதைகளின் ஓரங்களில் உள்ள சந்துகளில் சென்று விடுகிறது. நகரத்தில் மட்டும் அறுபது லாரிகள் தண்ணீரைப் பாதைகளில் பாய்ச்சித் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன.

மொத்தத்தில் ஆயிரம் தொழிலாளர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். மூவாயிரம் சதுர மீட்டர் நிலத்தை தினந்தோறும் துப்புரவு செய்கிறார்கள். ஒரு சதுர மீட்டர் நிலத்தில் ஐநூறு கிலோ கிராம் குப்பை சராசரியாக இருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் ஐந்து லட்சம் டன் குப்பையை அப்புறப் படுத்துகிறார்கள் என்றும், அதில் தொழிற்சாலையிலிருந்து மட்டும் ஒன்பது ஆயிரம் டன் குப்பை எடுக்கப்படுகிறது என்றும் மாநகராட்சியின் கணக்குக் காட்டுகிறது.

பொதுவாக அங்கு 73— லாரிகள் எப்போதும் பணியில் ஈடுபட்டிருக்குமென்றும் எஞ்சியவற்றை பழுது பார்க்கத் தொழிற்கூடத்தில் விட்டிருப்பார்கள் என்றும் பின்னர் அறிந்தேன்.

ஆண்டுதோறும் ஐம்பது லட்சம் சதுர மீட்டர் நிலத்தைத் துரப்புரவு செய்வதற்கு பத்து லட்சம் ரூபிள், அதாவது இந்திய நாட்டு நாணயப்படி எண்பது லட்ச ரூபாய் செலவாகிறது என்று மாநகராட்சி புள்ளி விவரம் காட்டுகிறது.

துப்புரவுத் தொழிற் கூடத்தில்

மறுநாள் காலை துப்புரவுத் தொழிற்கூடத்திற்குச் சென்றோம். முதலில் குப்பை கூட்டும் இயந்திரத்தைக் காட்டி விளக்கம் கூறினார், அங்குள்ள தலைமை அலுவலர். குப்பை கூட்டும் எஃகு இரும்புத் துடைப்பம் நூற்று இருபது மணி நேரம் பணியாற்றுகிறது என்றும் அதற்குள் அந்தத் துடைப்பம் பழுதடைந்து விடுகிறது என்றும் கூறினார். 'பழுதடைந்த துடைப்பத்தைப் பழுது பார்த்துப் பயன் படுத்த முடியுமா?' என்று கேட்டதற்கு, பழுதுபார்ப்பதில்லை என்றும் புதியதாக ''பிரஷ்'' அங்குள்ள தொழிற் சாலையிலேயே உருவாக்குகிறார்கள் என்றும் கூறக் கேட்டோம்.

எண்பது லாரிகள் இருக்கின்றன. ஒரு லாரியின் மதிப்பீடு 3500 ரூபிள் (இந்திய நாணயப்படி ரூ. 28,000 ஆகும்) என்கிறார்கள்.

புதை சாக்கடையைப் பேணும் முறை

நகரம் துர்நாற்றமின்றியும், தூய்மையாகவும், விளங்கு வதற்கு மற்றொரு காரணம் புதை சாக்கடை சீராகக்

கண்காணிக்கப்படுவதுதான். புதை சாக்கடையை தேவைப் படும்போது சுத்தம் செய்ய 'சைபன்' தேவையான எண்ணிக்கைக்குக் கட்டியிருக்கிருர்கள். சைபன்கள் 1.27 மீட்டரிலிருந்து ஏழு மீட்டர் வரை ஆழமுள்ளவையாக இருக்கின்றன. புதை சாக்கடை ஒழுங்காக இயங்க வேண்டி பம்பிங் நிலையங்கள் பணி செய்கின்றன. இயந்திரம் மூலம் சாக்கடை நீர் சுத்தப்படுத்தப்படுகிறது. தேவையான அளவிற்கு இந்த சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீர் நிலங் களுக்குப் பாய்ச்சப்படுகிறது. அத்தோடு தொழிலகங்களுக்கும் வேண்டிய அளவிற்கு இந்தத் தண்ணீர் பயன்படுத்தப் படுகிறது. மீதமுள்ள 36000 முதல் 40,000 கனமீட்டர் வரை தண்ணீர் வால்கா நதியில் விட்டு விடுகிருர்கள். காய்ந்துபோன குப்பை கூளங்கள் கொளுத்தப்படுகின்றன.

மாஸ்கோ வாஞெலியில்!

ஜூன் திங்கள் ஏழாம் நாள் அன்று மாலை நிகழ்ச்சிகள் ஏதுமின்றி ஓய்வெடுக்க வேண்டிஞர்கள். அரசியல் பொதுத் தொண்டில் ஈடுபட்டிருக்கின்ற எங்களுக்கு ஓய்வு என்பது, அதிலும் பகலில் ஓய்வெடுத்துக் கொள்வது என்பதெல்லாம் வியத்தகு செயலாகும். எதிர்பாரா வகையில், இருவர் வந்து என் அறையின் கதவை மெல்லத் தட்டினர். நான் 'யாரது?' என்று கேட்டவாறு கதவைத் திறந்தேன். ஓர் ஆணும், பெண்ணும் சிரித்த முகத்தோடு வணக்கம் செலுத்த, நானும் பதிலுக்கு வணக்கம் செய்தேன். மாஸ்கோ நகர வாஞெலி நிலையத்திலிருந்து தாங்கள் இருவரும் வந்திருப்பதாகக் கூறிஞர்கள். மேயர் உட்பட நாங்கள் அனைவரும் வாஞெலியில் பேச வேண்டுமென்றும் அதற்கான பேச்சை உடனே பதிவு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மாஸ்கோ வாஞெலியில் பேசப்போவது பற்றி ஒரு வகை யில் மகிழ்ச்சி பெற்ருலும் மற்ருெரு வகையில் திடீரென்று பேசவேண்டுமென்ருல் என்ன செய்வது என்ற திகைப்பு ஏற்பட்டது. அந்த நேரம் லெனின்கிராடு செல்வதற்கான

ஏற்பாட்டைச் சரி செய்து கொண்டிருந்தேன். அவர்களுடைய வேண்டுகோளையும் நிறைவேற்ற முனைந்தேன். கையிலே ஒலிபெருக்கியை வாங்கிக் கொண்டு பேச ஆரம்பித்தேன். நான் கண்டதையும், கேட்டதையும் பாராட்டி அவர்களுக்கு நன்றி சொன்னேன். எங்கள் குழுவிலிருந்த அனைவரும் பேசினர்.

''சோவியத் நாட்டு மக்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம்'' என்று பேச்சைத் தொடங்கினேன். என் பேச்சு இதுதான்:

''வால்காகிராடு மாநகராட்சியினர் அளித்த அன்பழைப்பை ஏற்று மேயர் குழுவில் ஒருவனாக இந்நாட்டுக்கு வந்திருக்கிறேன். எங்கள் குடும்பத்து அண்ணனும் கழகத்தின் காவலரும் தமிழகத்தின் முதல்வருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டுகின்ற அன்பாலும், அரவணைப்பாலும், சோவியத் ஒன்றியத்துக்கு வருகின்ற நல்வாய்ப்பைப் பெற்றேன். அவர்கட்கும் என் வணக்கமும் நன்றியும் உரித்தாகுக!

கடந்த ஐந்தாறு நாட்களாக சோவியத் நாட்டின் நகரங்களில் ஒன்றான வீரம் விளைத்த வால்காகிராடு நகரில் தங்கி, கண்ட காட்சிகள், நகரின் வளர்ச்சி, மக்களின் மாண்பு, தொழிலாளர் அரசால் நாடு காணும் முன்னேற்றம் ஆகியன பற்றி அறிந்து வருகிறோம். வீரர்களின் சிலைகளைப் பார்க்கின்ற நேரத்தில் வீரத்தைப் பெறுகிறேன்.

பசுமை நிறைந்த வயல்களைக் காணும்போது பஞ்சத்தைப் பற்றி ஏதாவது இந்நாட்டு மக்கள் அறிவார்களா என்பதை நானே எண்ணிப் பார்க்கிறேன்.

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே' என்ற எங்கள் தேசியக் கவிஞன் பாரதியின் கனவை இந்நாட்டில் நடைமுறையில் காண்கிறேன். அகன்ற பாதைகள் தூய்மையாகக் காட்சியளிப்பதைப் பார்க்கும்போது ''நகர் உணர்வு''

இந்த நாட்டு மக்களிடத்தில் மண்டிக்கிடப்பதை எண்ணி மகிழ்ந்தேன்.

போருக்குப்பின்னுலே அழிந்துபோன நகரத்தைத் திரைப்படம் மூலம் கண்டேன். ஆனல் இன்ருே அழிந்ததை அப்புறப்படுத்தி ஆங்கே பல அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டதையும் காண்கிறேன்.

புதுப்புதுத் தொழிற்கூடங்கள் உருவாக்கப் பட்டிருப்பதைப் பார்க்கும்போது தொழிற் பெருக்க நாடொன்று உருவாகும் காட்சியின் சிறப்பை என்னென்று சொல்ல! உங்கள் நாட்டின் முன்னேற்றம் கண்டு உலகமே வியக்கக் காண்கிறேன்.

அமைதி காக்கப் போராடும் உங்கள் நாட்டு மக்களுக்கும் குறிப்பாகத் தொழிலாள உடன்பிறப்பு களுக்கும் வணக்கமும், வாழ்த்தும் உரித்தாக்கு கின்றேன். வானெலியில் பேச வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்; வணக்கம்''.

மேயர் சம்பந்தம் அவர்கள் உட்பட எல்லோருமே பேசினேம். திரு. கோதண்டபாணி அவர்கள் தெலுங்கு மொழியில் உரை நிகழ்த்த, தோழர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களோ ஆங்கிலத்தில் பேசினுர்கள். மற்ற நாங்களெல் லாம் தமிழ் மொழியிலேயே பேசினேம். பேச்சு முடிந்ததும் மாஸ்கோ வானெலி நிலயத்தைச் சேர்ந்த பணியாளர் களான இருவரும் எங்களுக்கு நன்றிகூறி விடைபெற்றனர்.

மாலைப் பொழுதினிலே!

வானேடை தன்னிலே ஓர் செங்கதிர் மாணிக்கத்துச் செழும்பழம் மூழ்கும் மாலை; வால்கா நதிக்கரைக்குச் சென்று வரலாம் என்று மேயர் சம்பந்தம் தோழர் கிருஷ்ணமூர்த்தி நான் ஆகிய மூவரும் புறப்பட்டோம். மங்கையர் தம் மழலைச் செல்வங்களை நடத்திச் செல்லும் காட்சி எங்களை மிகவும் கவர்ந்தது. ஒரு வயதுகூட நிரம்பாத பிஞ்சுக்

குழந்தைகளையும் நடத்தியே அழைத்துச் செல்கிறார்கள். அப்போது என்கண் முன் நம்நாட்டில் திருவிழாக்காலங்களில் பெண்களும் ஆண்களும் ஐந்தாறு வயதுள்ள பிள்ளைகளைத் தோள்களில், இடுப்பிலும் சுமந்து செல்கின்ற காட்சிகள் என் கண் முன்னே நிழலாடின. மேலும் நடந்தோம். ஏழெட்டுப்பேர் எங்கள் முன்னே நதிக்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். விரைவாக நடந்து சென்ற நாங்கள் அவர்களைக் கடந்தபோது, அந்தக் கூட்டம் எங்களையே உற்றுப்பார்த்தது. அன்று நாங்கள் தமிழகத்து உடை உடுத்தி இருந்தோம். அவர்களில் ஆங்கிலம் அறிந்த ஒருவர் எங்களைப்பார்த்து, 'இந்தியாவா?' என்றால், 'ஆமாம்' என்றேன். திரு. சம்பந்தம் அவர்கள் அணிந்திருந்த சரிகை போட்ட மேல்துண்டைத் தொட்டுப் பார்த்து 'நன்றாக இருக்கின்றதே' என்று பலநாள் பழகியவர் போல் இன்முகத்தோடு பேச்சைத் தொடர்ந்தார். திரு. சம்பந்தம் அவர்கள் தாம் மேலே போட்டிருந்த அந்தத் துண்டை எடுத்து அவருக்குப் போர்த்த, அவரோடு வந்த கூட்டம் சிரிப்பொலி பொங்கக் கை கொட்டி ஆரவாரம் செய்தது.

கைப்பையில் நாய்க்குட்டி!

கூட்டத்திலிருந்த ஒருவர் கேமராவை முடுக்கிப் புகைப் படம் எடுத்தார். அந்தக் கூட்டத்திலிருந்த சிலர் கையில் தோல் பெட்டி வைத்திருந்தனர். பெட்டியோ அளவிலே கைப் பையைவிடப் பெரியதாகவே இருந்தது. பையின் வாய் திறந்திருக்க அதனுள்ளிருந்து நாய்க்குட்டி தன்தலையை மேலே நீட்டியது. அதேபோல எல்லோருடைய பைகளிலும் நாய்க்குட்டிகள் காட்சியளித்தன. ஆங்கிலம் தெரிந்த அன்பரைப் பார்த்து 'நாய்களை ஏன் தூக்கிச் செல்கிறீர்கள்? நடக்கவும் ஓடவும் முடியாத நிலையில் உள்ளனவா?' என்று நான் கேட்க, அதற்கு அவர் ''நகரில் நாய்களை நடமாட விடுவது கூடாது, அதனால்தான்'' என்றார். அப்போது சென்னை மாநகரத்தின் வீதிகளில் உலவிக் கொண்டிருக்கும்

சொறி நாய்களும் பைத்தியம் பிடித்த நாய்களும் வருவோரை போவோரைக் கடித்து நகர மக்களுக்குத் தொல்லை கொடுப்பதைப் பற்றி எண்ணினேம்.

பேசிக் கொண்டே நடந்து சென்ற நாங்கள் வால்கா நதியை அடைந்தோம். அப்போது மாலை மணி ஏழு அடித்து முப்பது நிமிடம் ஆகியிருந்தது. ஞாலத்தொரு பொருளாம் நெஞ்சக் களிப்பினில் கூத்தைச் சேர்க்கும் கன பொருளாம் ஞாயிறு, விண்ணெலாம் பொன்னை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது. ஒழுங்காக வடக்குத் தெற்காக ஓடும் நதியைக் கண்டோம். ஆற்றங் கரையின் படிக்கட்டுகளில் உட்கார்ந்து கொண்டு ஆற்றை நோக்கிப் பார்த்துக் கொண் டிருந்தோம்.

''சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டி விளையாடிவருவோம்''

என்ற பாரதியின் பாடல் நினைவுக்கு வந்தது.

மிஸ்டர் பிஷ்-சுவையான நிகழ்ச்சி!

இரவு உணவுக்குத் திருமதி லூசியும் தோழர் பொலியகோவும் எங்களுக்குகாகக் கீழே காத்திருந்தார்கள். மூன்ருவது நான்காவது மாடிகளிலே தங்கியிருந்த நாங்கள் கீழே இறங்கினேம். நண்பர் கோதண்டபாணி அவர்கள் மட்டும் வருவதற்குச் சிறிது நேரமாகிவிட்டது. அவருக் காகக் காத்திருந்தோம். இதற்குள் உணவு பரிமாறும் பெண் எங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களை பரிமாற ஆரம்பித்து விட்டார். பகல் உணவு நேரத்தில் திரு. கோதண்டபாணி அவர்கள் கேட்டிருந்த சுவையான மீன் பண்டத்தை எடுத்து வந்து வைத்து விட்டுப்போனர். திரு. கோதண்டபாணி அவர்கள் வந்து சேருவதற்குள் அவருக்காக என்று எடுத்துவந்த மீன் பண்டத்தை எங்களில் ஒருவர் தின்று தீர்த்து விட்டார். அவர் வந்து உட்காந்ததும் மீனைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் தேடுவதை

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மீன் மீன் என்று கோதண்டபாணி அவர்களைப் பார்த்துக் கூற, அவர் 'எங்கே? எங்கே?' என்று கேட்க, ''உங்களைத் தான் மிஸ்டர் பிஷ், மிஸ்டர் பிஷ் என்று பெயரிட்டு இருக்கிறார்கள் என்று மேயர் சொன்னதும், அங்கிருந்த நாங்கள் எல்லோரும் 'கொல்'லென்று சிரித்து விட்டோம்! எங்களோடு சேர்ந்து லூசியும் சிரிப்பை அடக்க முடியாது திணறினாள். ஒருவாறாக அன்றைய இரவு உணவு முடிந்தது.

அடுத்து எல்லோரும் வால்கா நதி நோக்கி நடந்தோம். என்றுமில்லாத அளவுக்கு அன்று சிறிது குளிரும் அதிகமாக இருந்தது. திருமதி லூசியும் தோழர் பொலியகோவும் தத்தம் இல்லத்திற்குத் திரும்பினர். சோவியத் நாட்டில் தனியாகச் சுற்ற அனுமதிக்கப்படுவதுண்டா என்ற ஐயப் பாடு எங்களிலே ஒரு சிலருக்கு இருந்தது. நாங்கள் தனியாகச் சுற்ற ஆரம்பித்தோம். நம் சென்னை நகரின் கடற்கரையில் இளையோரும் முதியோரும், குழந்தைகளும் காதலரும் பொழுதுபோக்குவது போலவே அங்கேயும் வால்கா நதிக்கரையின் ஓரத்தில் பெண்களும் ஆண் களும் கூடிக்கூடி உட்கார்ந்து பொழுதுபோக்கிக் கொண் டிருக்கிறார்கள். கரையின் மேல் அழகான பூங்காக்கள் அமைந்திருப்பதும் அவற்றில் காதலர்கள் உலாவந்து கொண்டிருப்பதும் காண்பதற்கு இனிய காட்சியாக இருந்தன. இரவு மணி பன்னிரண்டு ஆகிவிட்டதால் எல்லோரும் விடுதிக்குத் திரும்பினோம்.

ஜூன் 28ஆம் நாள் வால்கா கிராடிலிருந்து ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கீவ் நகருக்குச் செல்லவிருந்த நாங்கள், நிகழ்ச்சி நிரலை மாற்றிக் கொண்டு எழில் மிகுந்த லெனின்கிராடு நகரத்திற்குப் புறப்பட்டோம். விமான மூலமாக சுமார் இரண்டாயிரம் கிலோ மீட்டர் தொலைவு பறந்து சென்றோம். ''ஏரோபிளாட்''டில் ஏறக்குறைய மூன்றரை மணி நேரத்தில் லெனின் கிராடு நகரடைந்து விட்டோம்.

லெனின்கிராடில்

வால்காகிராடிலிருந்து எங்களை ஏற்றிச் சென்ற வானூர்தி லெனின்கிராடு நகரத்தை அடையும்போது இரவு மணி பதினொன்று அடித்து முப்பது நிமிடம் ஆகியிருந்தது. விமான நிலையத்தில் எங்களை வரவேற்க லெனின்கிராடு மாநாகராட்சியைச் சார்ந்த வெளிநாட்டு உறவு அதிகாரி யான தோழர் குல்போவிச் என்பவரும் மன்ற உறுப்பினர் சிலரும் வந்திருந்தார்கள். மலர்ச் செண்டு அளித்து மேயர் சம்பந்தம் அவர்களையும் எங்களையும் வரவேற்றனர். குறிப் பாகத் தோழர் வி. முனுசாமி அவர்களை ஏற்கனவே அறிந்திருந்த காரணத்தால் அவரோடு பேசிக் கொண்டே வந்து எங்களைக் காரில் ஏற்றிச் சென்றனர்.

விமான நிலையத்திலிருந்து நேராக நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''ஒட்டல் அஸ்டோரியா'' என்னும் விடுதிக்கு அழைத்துச் சென்றனர். ஐரோப்பாக் கண்டத்திலேயே உயர்நிலை விடுதிகளில் ஒன்றாக ''அஸ்டோரியா'' கருதப்படுகிறது. எங்கள் குழுவிலுள்ள ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அறை ஒதுக்கி யிருந்தனர். எனக்கு நான்காவது மாடியில் உள்ள நானூற்று மூன்றாவது அறை கிடைத்தது.

வழக்கமாக வானூர்தியில் பயணம் செய்கின்றபோது அதனுள்ளேயே உணவளிப்பார்கள். ஆனால் எங்களில் எவரும் அங்கு உண்ணவில்லை. ஆகவே, அவரவரர் அறைக்குச் சென்று, கொண்டு வந்த பெட்டிகளை வைத்து விட்டு நேராகச் சிற்றுண்டி உண்ணும் இடத்திற்குச் சென்றோம். உணவு முடிக்க மணி பன்னிரண்டு ஆயிற்று. பிறகு வழக்கம்போல் உறங்கச் சென்றோம்.

காலையில் முதலில் சந்திக்கும் தோழர் பொலியகோவும் திருமதி லூசியும் தவறாமல் வந்துவிட்டனர். சிற்றுண்டிக்குச் சென்றோம். சோவியத் ஒன்றியத்தில் உள்ள முக்கிய நகரங் களில் ஒன்றான லெலின்கிராடு நகரில் ஆங்கிலம் அறிந்தவர் களை மிகுதியாகக் கண்டேன். அதுமட்டுமன்றி அந்நகரி லுள்ள மக்களும் ஆரவாரத்துடன் காணப்பட்டனர். பல

நாட்டுச் சுற்றுப்பயணிகளை அங்குக் கண்டோம். எங்கள் மேசைக்கு அடுத்த மேசையிலே யூகோஸ்லோவியா நாட்டுக் கொடி பறந்து கொண்டிருந்தது. அமர்ந்திருந்தோர் நல்ல உடற்கட்டும், நெடிய உருவமும் உடையவர்களாக இருந்தனர். அவர்களைக் கண்டதும் யூகோஸ்லாவிய நாடு அரபிய-எகிப்து பிரச்சினைக்கு வழிகாணும் பொருட்டு ஐக்கிய நாட்டு மன்றத்தில் கொண்டு வந்த தீர்மானம் நினைவுக்கு வந்தது.

இந்தப் பிரச்சினையைப் பற்றி ஊன்றித் தொடர்ந்து படித்துக் கொண்டு வந்த நான், 'அவர்கள் தீர்மானம் என்னவாயிற்று தெரியுமா?' என்று தோழர் பொலியகோவ் அவர்களைப் பார்த்துக் கேட்க ''இன்னும் விவாதிக்கும் நிலையிலேயே இருக்கின்றது'' என்று பதில் வந்தது.

சிற்றுண்டி முடித்து விடுதியின் வாயிலருகில் வந்தோம். நகர மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவா மிகுதியின் காரணமாக நான் முன்னே சென்று கூட்டத்தின் அருகில் நின்று பார்த்தேன். மிகப் பழைய கார் ஒன்றைக் கண்டேன். 1803ம் ஆண்டு மோட்டார் வண்டி கண்டு பிடித்தபோது இருந்த நிலையில் அது இருந்தது. ''கோச்'' வண்டியைப் போன்று அது தோற்றமளித்தது. நம்முடைய நாட்டிலும் கிராமப் பகுதிகளுக்குச் சென்முல் குழந்தைகளும், பெரியவர்களும்கூடி நின்று வேடிக்கை பார்ப்பது உண்டல்லவா? அதைப்போலத்தான் அவர்களும் அந்தப் பழைய காரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். நாங்கள் எதிர்ப்பார்த்து நின்ற கார்களும் வந்து நின்றன. அவற்றில் ஏறினோம்.

எங்கள் முதல் நிகழ்ச்சியே லெனின்கிராடு மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்று தலைவர் உறுப்பினர் ஆகியோரைச் சந்திப்பதாகும். நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு எதிரிலேயே மாநகராட்சிக் கட்டடமும் இருந்தது. அங்குச் சென்றடைந்தோம். கட்டட வாயிலிலேயே எங்களை மன்ற உறுப்பினர்கள் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

அன்பு குழைய துணைத் தலைவர் எங்களை வரவேற்றுப் பேசினார். பின்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க லெனின்கிராடு

நகரத்தைப் பற்றி வரலாற்றுப் பேராசிரியர் போல நீண்ட பெரும் விளக்கம் அளித்தார்.

''சோவியத் ஒன்றியத்திலேயே இரண்டாவது பெரிய நகரமாக லெனின்கிராடு திகழ்ந்து வருகிறது. அது வட துருவத்திற்கு அருகிலேயே இருப்பதால் எப்போதும் குளிர் நிறைந்திருக்கும். மாமன்னர் பீட்டர் 1703ம் ஆண்டில் இந்நகரத்தை உருவாக்கினர். இந்நகரே 1918ம் ஆண்டு வரை இரஷ்யக் குடியரசின் தலைநகராக விளங்கிற்று.

முதலில் இந்நகரத்திற்குப் புனித பீட்டர்ஸ்பர்க் என்ற பெயர் சூட்டப்பட்டது. ஆனல் 1914 முதல் 1924 வரை இந்நகருக்கு பெட்ரோகிராடு என்ற பெயர் விளங்கியது.

மாவீரர் வி. ஐ. லெனின் இந்நகரத்தில் பல ஆண்டுகள் தங்கி வாழ்ந்து வந்த காரணத்தால், அவர் இயற்கை எய்திய பின்னர், இந்நகருக்கு அவர் நினைவாக லெனின்கிராடு என்னும் பெயரிடப்பட்டது.

பால்டிக் கடற்கரையை அடையும் நேவா நதியின் முகத்துவாரத்தில் இருக்கும் சுமார் நூறு தீவுகளின் மேல் இந்நகரம் கட்டப்பட்டுள்ளது. லெனின்கிராடு நகரம் பெரும் தொழிற்கூடங்களும், கலைக் கூடங்களும் நிரம்பி எழிலோங்கி காட்சி அளிக்கிறது. அது மட்டு மின்றி உலகில் மிக அழகிய நகரங்களில் ஒன்ருகவும் இது விளங்கி வருகிறது. இருநூற்றைம்பது ஆண்டு களுக்கு முன்பாக இரஷ்யக் கட்டடக் கலைஞர்களின் கைவண்ணத்தால் உருவாக்கப்பட்ட பூங்காக்களும், சதுக்கங்களும், கட்டடங்களும் இன்றைக்குக் கட்டு கின்ற கட்டிடங்களுக்கு இணையாகவும், துணையாகவும், விளங்கி அழகு மிகுந்து காணப்படுகின்றன. இந்நகரத்தில் ஐம்பது கலைக்கூடங்களும், பதின்மூன்று திரைப்பட அரங்குகளும், ஏழு நாடக அரங்குகளும், நாற்பத்திரண்டு உயர்கல்வி நிலையங்களும், பன்னிரண்டு விஞ்ஞான ஆய்வுக் கூடங்களும், இரண்டாயிரத்து அறுநூறு நூல் நிலையங்களும், நூற்று இருபத்

தொன்பது அரண்மனைகளும், மற்றும் பொழுபோக்கு மன்றங்களும் உள்ளன'' என்ற புள்ளி விவரப் பட்டியலைப் பெருமையோடு மூச்சு விடாமல் துணை மேயர் கூறி முடித்தார்.

இடையிலே செய்த 'பொடி' வேலை!

என் அருகில் அமர்ந்திருந்த மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் தும்ம ஆரம்பித்தனர். கண்களில் கசிந்த கண்ணீரைத் துடைத்தவாறு எழுந்து நகர்ந்தனர். துணை மேயர் பேச்சை நிறுத்தி 'என்ன எழுந்து விட்டீர்கள்?' என்று வினவினார். தும்மியவர்களில் ஒருவர் அருகில் வந்து, தோழர் முனுசாமி மூக்குப் பொடியை இவர்களுக்கும் கொடுத்து விளையாட்டாகப் போடச் சென்னதில் வந்த வம்பை எடுத்துச் சொன்னார். அங்கிருந்த எல்லோரும் தோழர் முனுசாமி அவர்களின் குறும்புத்தனத்தை அறிந்ததும் ''கொல்''லென்று சிரித்தனர்.

பின்னர் துணை மேயர் தம் பேச்சைத் தொடர்ந்தார். ''அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் தொட்டில்'' என்னும் சிறப்புப் பெயரையும் லெனின்கிராடு நகரம் பெற்று விளங்கி வருகிறது. போர் வீரர்கள் மாலுமிகள் ஒன்று திரண்டு **1917**ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஏழாம் நாளன்று கொடுங்கோலன் ஜார் மன்னனுக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர். புரட்சி செய்ததன் விளைவாகப் பெற்ற வெற்றியின் சின்னமாகத் தொழிலாளர்களும், போர் வீரர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஆட்சிக்கு வந்தார்கள். உலக வரலாற்றிலேயே முதன் முதலாக மாவீரர் லெனின் தலைமையில் விவசாயிகளும், தொழிலாளிகளும் கூட்டாக ஆட்சியை அமைத்தார்கள்.''

இந்த வீர வரலாற்றுக் காதையை அவர் பெருமகிழ்ச்சியோடு கூறிக் கொண்டே வந்தார்.

''விடுதலை வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட நாங்கள் போரில் ஈடுபட்ட நேரத்தில் பட்ட துன்பங்களும்

நீங்கள் அறியவேண்டாமா?'' என்று முகத்தில் துயரத்தைத் தேக்கியவாறு அந்தச் சோக வரலாற்றை உள்ளடக்கிய இரண்டாம் உலகப் போரைப் பற்றிய பேச்சைத் தொடர்ந்தார்.

இட்லர் படையைப் புறங்கண்ட நகரம்

''இரண்டாம் உலகப் போரில் லெனின் கிராடு நகரம் எதிரிகளால் கைப்பற்றப் பட்டது. போரினை ஒட்டித் தொள்ளாயிரம் நாட்களாக இந்நகரம் முற்றுகைக்கு உள்ளானது. இலட்சத்து ஐம்பதாயிரம் துப்பாக்கிகளின் ரவைகள் நகரத்தைச் சுவை பார்த்தன. மேலும் நாஜிப் படையினர் நகரத்தை அழிக்க ஓர் இலட்சம் குண்டுகளையும் வீசினர்.

''ஆனாலும் லெனின் கிராடு நகரத்து மக்கள் அஞ்சாது உறுதியாக நின்று போரிட்டனர். இட்லரின் படையை முறியடித்து நகரை மீட்டனர்.

''வீரத்தின் விளைநிலமாக விளங்கிய லெனின் கிராடு நகரத்திற்கு ''லெனின் ஆணை'' என்ற வீரப்பட்டயத்தை மத்திய ஆட்சி வழங்கிப் பெருமைப்படுத்தியது'' இந் நிகழ்ச்சியைக் கூறிய துணை மேயரின் முகம் அன்றலர்ந்த மலரைப் போல் காட்சி அளித்தது.

''பெரும்போர் முடிந்த அடுத்த நாளே அழிந்த பகுதிகளையும் தொழிற்கூடங்களையும் புதுப்பிக்கும்ப் புனிதப் பணி துவங்கியது.

''1932ஆம் ஆண்டுக்கு முன் இருந்து வந்த தொழில் உற்பத்தி போரினுல் பெரிதும் பாதிக்கப்பட்டுங்கூட தொழிலாளிகளின் கடுமையான உழைப்பின் பயனுக 1948ஆம் ஆண்டிலேயே போருக்கு முன்னுள்ள உற்பத்தி நிலையை அடைந்தது.''

திட்டமிட்ட முன்னேற்றத்தைத் துணை மேயர் தெளிந்த நடையில் கூறி முடித்தார். இரு நாட்டு ''நட்புறவும் வளர்க'' என்ற வாழ்த்தொலியோடு எல்லோரும் சுவைநீர் பருகவும் நிகழ்ச்சி முடிவுற்றது.

மாநகராட்சி மன்ற நிகழ்ச்சி முடிந்ததும் நேராக விடுதிக்குச் சென்றோம். மாலை வேலை; மங்கையர்தம் காதலனைத் தேடிக் கொண்டிருந்த நேரம். நாங்களும் போரில் பங்கு கொண்டு மறப்போர் புரிந்து வீரமரண மெய்தியோரின் 'பிஸ்கரேவ்' கல்லறையைக் காணத் தேடிக்கொண்டு சென்றோம்.

அமைதி குடி கொண்டு சோகத்தின் உருவமாகக் காட்சி அளித்துக் கொண்டு இருந்த கல்லறையைக் கண்டோம். இரண்டாம் உலகப்போரில் லெனின் கிராடைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டபோது லெனின் கிராடு நகரத்திற்கு வெளியிலிருந்து எந்தவிதமான உணவுப் பொருள்களும் உள்ளே வரமுடியாதபடி நாஜிப் படைகள் தடுத்து நிறுத்தின. முற்றுகையின் வேகத்தைக் கண்டவர்கள் 'லெனின்கிராடு நகரம் இன்றோ நாளையோ எதிரியின் கையில் சிக்கிச் சீரழியப் போகிறது' என்று எண்ணி நடுங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் தாய் நாட்டைக் காக்க சோவியத் வீரர்கள் தங்களுக்கு நிகராகத் தரணியில் எவருமில்லை என்ற தன்னம்பிக்கையோடு ஆதிக்க வெறிபிடித்த ஹிட்லர் படைகளை பயங்கரமாகத் தாக்கிப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். மாஸ்கோ மாநகர் வெற்றி மங்கையை மணந்து கொண்ட செய்தியைக் கேட்டு வாஷிங்டனும், இலண்டனும் அன்றைய இன்பக் கடலில் நீந்தின.

இந்தப் பெரும்போரில் நாஜிப் படைகள் தோல்வியை வேதனையோடு அணைத்துக் கொண்டன என்றாலுங்கூட, இலட்சக்கணக்கான சோவியத் வீரர்களின் உயிர்களைப் போக்கிவிட்ட உண்மையை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இதற்குச் சான்று நினைத்தாலும் நெஞ்சுருக்கும் ''பிஸ்கரேவ் கல்லறை''யின் சோக வரலாறு ஆகும். ஜெர்மானியப் படைகள் லெனின்கிராடு நகரை முற்றுகையிட்டு நகரத்தின் நடுவிலே இருந்து போரிட்டுக் கொண்டிருந்த ஐந்து லட்சம் சோவியத் போர்வீரர்களுக்கும் தேவையான உணவுப் பொருள்கள் நகரத்தின் வெளியிலேயிருந்து வரமுடியாது தடுத்து விட்டதால், சோவியத் வீரர்கள் ஒரு நாள், இரண்டு நாள் என்றில்லாமல், தொடர்ந்து சில

நாட்கள் பட்டினி கிடந்து இலட்சக் கணக்கில் சாகத் தொடங்கினர். நகரத்துக் குடிமக்களும் உணவின்றி உயிர்விட்டனர். இவ்விதமாக உயிர்விட்டவர்களின் தொகை ஒன்றல்ல, இரண்டல்ல; ஓராயிரமும் அல்ல; போர் வீரர்கள் ஐந்து இலட்சம் பேரும் நகரத்து மக்கள் ஐந்து இலட்சம் பேருமாக மொத்தம் பத்து இலட்சம் பேர் முற்றுகையிட்ட பகுதியிலேயே மடிந்தனர். இப்படிப்பட்ட அவலத்தை சோவியத் நாடு எப்படித்தான் தாங்கிக் கொண்டதோ! தாய்நாட்டுப் பற்று மிகுதியே இதற்குக் காரணம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.


கல்லறையிலே கண்ணீர்

நாங்கள் பிஸ்கரேவ் கல்லறையைக் கண்டபோது எங்களையும் அறியாமல் கண்கள் கண்ணீர் சிந்தின.

நாட்டைக் காப்பாற்றத் தங்கள் இன்னுயிர்களை ஈந்து மறைந்த மாவீரர்களின் நாட்டுப்பற்றையும் தன்னலங்கருதாத தகைமை சான்ற சிறப்பியல்புகளையும் எண்ணியவாறே நாங்கள் கொண்டு சென்ற மலர் வளையத்தை வைத்து வீர வணக்கம் செலுத்தினோம்.

அந்தக் கல்லறையோ ஆயிரமாயிரம் காதல் கதைகளையும், தாயன்புச் சிறப்பினையும் நட்புக்கு இலக்கணம் வகுத்த நல்லவர்களையும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தது.

அந்த நாட்டுக் கல்லறையை வெறிச்சோடும் வெட்ட வெளியாய், பொட்டல் காடாய் வைத்திராமல் கண்ணுக்கு இனிமையாக மனத்திற்கு மகிழ்ச்சி தருகின்ற வகையில் பசுமை மிக்க மலர்க்காடாய்த் தோற்றுவித்து இருக்கின்றார்கள். சோவியத் நாட்டிலேயே மிகப் பெரிய கல்லறைகளுள் இதுவும் ஒன்று என்கிறார்கள். இது ஏறக்குறைய ஒரு மைல் நீளம் அமைந்திருக்கிறது. அமைதியைக் காக்கும் சின்னமாக வீரத்தாயின் உருவச் சிலையை கம்பீரமாகத் தோன்றும்படி வடித்திருக்கிறார்கள். போரில் நடந்த நிகழ்ச்சிகளை நினைவுப்படுத்தும் வகையில் இக்கல்லறையில் வாயிற்படியில் சில சின்னங்களைக் காட்சிப் பொருள்களாக



லெனின் கிராடு நகரத்தில் மாண்ட பத்துலட்சம் பேர்களின்
(பிஸ்கரேவ்ஸ்கோயே) கல்லறை

வைத்திருக்கிறார்கள். அவற்றுள் ஒரு சிறுமியின் நாட்குறிப்பு எல்லோருடைய கண்ணையும் கருத்தையும் ஈர்த்து விட்டது. அந்நாட்குறிப்பைக் காணவும், படிக்கவும் பார்க்க வந்த மக்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள் பெரும் பாலோர் மாணவக் குழந்தைகளும் அவர்களுடன் வந்த ஆசிரியப் பெருமக்களும் ஆவார்கள். எங்களைக் கண்டதும் விருந்தினர்' என்பதறிந்து வழிவிட்டுப் பார்க்க இடம் அளித்தனர். நாங்களும் நாட்குறிப்பைப் படிக்கத் தொடங்கினோம்.

''இன்றைய தினம் என் அண்ணனை இழந்துவிட்டேன்'' என்று ஒரு நாள் குறித்திருந்தார். ''இன்று என் அக்காளை பறிகொடுத்துவிட்டேன்.'' இது இன்னொரு நாளைய குறிப்பு. நாட்குறிப்பின் சில பக்கங்களைத் தள்ளிப் பார்த்தோம். ஒவ்வொரு நாளும் அந்தச் சிறுமியின் உறவினர்கள் ஒவ்வொருவராக போரில் இறந்து விட்ட செய்தியைக் கண்டோம். மேலும் சில பக்கங்களைத் தள்ளிப் பார்த்தோம். குறிப்புகளே எழுதப்படவில்லை. மேலும் எந்தக் குறிப்பும் இல்லையே என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது ''அந்தச் சிறுமியே போரினால் மடிந்திருக்க வேண்டும்'' என்று எங்களிடம் திருமதி லூசி கூறினார். அதைக் கேட்டு எங்களையும் அறியாமல் எங்கள் கண்களிலிருந்து நீர் தளும்பியது. கண்களைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தோம். இந்தக் கல்லறையைக்காண நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் வருவதாகக் குறிப்பிட்டார்கள், அங்கிருந்த பொறுப்பாளர்கள். அது உண்மையுங்கூட. ஏனெனில் நாங்கள் அந்தக் கல்லறைக்குச் சென்றிருந்த அன்றைய தினமும் வெளிநாட்டுக்காரர்கள் எங்களைப் போல் பலர் வருகை தந்திருந்தனர்.

தமிழறிஞர் செம்பியனுடன்

லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் சிறந்து விளங்கும் திரு. செம்பியன் அவர்கள் பகல் உணவு நேரத்தில் நாங்கள் தங்கியிருந்த அஸ்டோரியா விடுதிக்கு

வந்து சேர்ந்தார். திரு. செம்பியன் எங்கள் அழைப்பிற்கு இணங்கி எங்களோடு சேர்ந்து உணவுண்டார்.

எங்கள் குழுவினர் எல்லோருக்கும் திரு. செம்பியன் அவர்களை மேயர் அறிமுகம் செய்து வைத்தார். என்னை அறிமுகம் செய்யும்போது ''நான்தான் தங்களைக் காண வேண்டி தோழர் பொலியகோவ் அவர்கள் மூலம் சொல்லி யனுப்பினேன்!'' என்று செம்பியன் அவர்களைப் பார்த்துக் கூறினேன்.

''ஆமாம், அவ்விதம்தான் நான் கூறக்கேட்டேன்'' என்று நல்ல தமிழில் அவர் பதில் கூறி, செவிக்கினிய செந்தமிழ்த் தேனை எங்கள் காதினில் பாய்ச்சி இன்பத்தில் ஆழ்த்தினர்.

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர் பட்டியலில் இடம்பெற்றுத் தமிழ் வளர்க்கும் தூய தொண்டில் ஈடுபட்டிருக்கும் டாக்டர் மு.வ. அவர்கள் ''தங்களைக் காணும் வாய்ப்புக் கிடைப்பின் காணுமாறு கூறி அனுப்பினர்கள்'' என்றேன்.

''தமிழ் பயின்ற நான், மேலும் மு.வ. அவர்களிடம் தமிழ் விளக்கம் பெற்றேன். அவ்வகையில் நானும் மு.வ. அவர்களின் மாணவன் என்பதை எண்ணிப் பெருமை அடைகிறேன்'' என்று ஆங்கிலம் கலக்காத அரிய தமிழில் திரு. செம்பியன் பேசியபோது, அடிக்கடி ஆங்கிலச் சொற்கள் கலந்து பேசியப் பழக்கப்பட்ட நான் சிந்தித்து, ஆங்கிலச் சொற்களைத் தவிர்த்துத் தமிழ் பேசினேன். உணவு உண்ணும்போது இடையிடையே பேசிக் கொண்டேயிருந் தோம். மொழி பெயர்ப்பாளர் திருமதி லூசிக்கு ஓய்வு கொடுக்கும் வகையில் தோழர் பொலியகோவ் ருஷிய மொழியில் பேசுவதை நேரிடையாக திரு. செம்பியன் அவர்கள் தமிழில் மொழி பெயர்க்கத் தொடங்கினர். வட துருவத்தில் தேமதுரத் தமிழோசையின் இனிமை கேட்டு இன்பத்தில் திளைத்தோம்.

வடகோடியில் சந்தித்த வண்டமிழ்ப் புலவன்!

பல்கலைக் கழகத்துக் கிழைக்கலைப் பிரிவில் தமிழும் இந்தியும் பயிற்றுவிக்கும் பேராசிரியர் ஆவார் செமியோன் ரூதின் எனும் செம்பியன். தமிழர் ஒருவரைக்கூடக் கண்டு பழகாத வேளையிலே, தாமே தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற்றவர் அவர். அரிதின் முயன்று அம்மொழியின் ஆன்ற பெருமை உணர்ந்து, அதன்பால் ஆருக் காதலும் பெருமதிப்பும் வைத்தவர். ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, இலத்தீன், இந்தி, வங்காளி, மலையாளம், தமிழ் முதலிய பலமொழி வல்லுநர் இந்த ருஷிய ரூதின்.

1926ம் ஆண்டுக்கு முன்னரேயே மெர்வார்ட் என்னும் ருஷிய இளைஞர் ஒருவர் பேச்சுத் தமிழுக்குத் துணைநூல் ஒன்று தம் மொழியில் எழுதியுள்ளார். அதனையும் போப்பையர், வீரமாமுனிவர், கால்டுவெல் முதலியவர் தம் இலக்கண—இலக்கியங்களையும் துணையாகக் கொண்டு தமது சலியா உழைப்பையே ஆசிரியராகவும், ஆர்வத்தையே தோழராகவும் கொண்டு தென்னகத்துத் தமிழினைத் தேனெனத் தேர்ந்து மாந்திக் கற்றுள்ளார் வடகோடி ருஷிய ரூதின். மொழியின் ஒலியுருவினைச் சற்றும் வழுவின்றி அறிந்திருக்கும், அவரது திறமை பாராட்டுக்குரியது.

தம் பெயரைச் செம்பியன் என்றுகூறிக் கொள்வதில் பெருமையடையும் அவர், தமிழின் அன்பராகி, அடியாராகி, தமிழ்நெஞ்சங்கொண்டவராகி விட்டார்! ஆகவே, தமிழகத்துப் பழக்கங்களையும் பண்பாட்டினையும் போற்றிப் பின்பற்றவும் விழைகிறார். கூர்ந்த மதி கொண்டவர்; எனவே, உயர்ந்த மொழி பெயர்ப்பாளராகத் திகழ்கிறார். ஒன்றியத்தில் பல மொழிகளிலும் அகராதி வெளியிடுகின்ற வழக்கம் உண்டு. அதன்படி தமிழ்—ருஷிய அகராதி வெளியிடப்பட்டது. **38,000** சொற்களைக் கொண்ட அதனை உருவாக்கியதில் பெரும்பங்கு பேராசிரியர்

செம்பியனையே சாரும். அவருடைய கண்காணிப்பில் நல்ல பல சொற்கள் சேர்க்கப் பெற்று நல்ல பல குறிப்புகளுடன் வெளியாகி உள்ளன. அந்த அகராதி தமிழை முறையாகப் பயிலாத ருஷியரும் தமது மொழிக் கூறுகளைத் தமிழில் பெயர்த்தலுக்கு நல்ல துணையாகப் பயன்படுகிறது. தமிழ் எழுத்து மட்டிலும் தெரிந்த ருஷியர் தமிழ்ச் சுவடிகளைத் தாமே படித்துப் புரிந்து கொள்ளுவதற்கு இந்த அகராதி பெரிதும் உதவும்.

எங்களைத் திரு. செம்பியன் கண்டபோது அவர் காட்டிய அன்பை என்னென்பது! ஆறும், மலையும், நாடும் இடைப்பட்ட நெடுந்தொலையிலுள்ள வராயினும் உணர்ச்சியால் தமிழர்; புலமையால் தமிழ்ப் பேராசிரியர்; பேச்சால் பேருரையாளர்; செயலால் தமிழ்த் தொண்டர்; தொண்டால் தமிழ்க் காவலர்; வேற்று நாட்டிலே நம் தமிழன்னைக்கு ஏற்றம் தேடும் எழுத்தாளர்; அவ்வண்டமிழ்க் காவலரைக் கண்டதிலே களிபேருவகை கொண்டேன்.

பகல் உணவு முடிந்ததும் நேராகக் ''கோடைக் காலப் பூங்காவுக்குச் சென்றோம். நேவா நதிக்கரையின் அருகில் இருக்கும் இப்பூங்காவிற்கு அழகு வேலைப்பாடு அமைந்த இரும்புக் கம்பிகளைச் சுவருக்குப் பதிலாக அமைத் திருக்கிறார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டட விற்பன்னர்களான தோழர்கள் மெல்ட்டன், எகொரோவ் ஆகியவர்களால் இப்பூங்கா கலை எழிலோடு அமைக்கப் பட்டதாக திரு. செம்பியன் கூறினார்.

அடர்த்தியான பழங்கால மரங்களின் நிழல் படர்ந்த பாதைகள் அமைந்திருந்தன. எழில் மங்கை மேலும் எழிலைக் கூட்டிக் கொள்ளத் தங்க அணிகளை பூட்டிக் கொண்டிருப்பது போல, அப்பூங்கா அழகிய சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

பூங்காவின் இடையிடையே குழாய்கள் பொருத்தப் பட்டிருந்தன. இக்குழாய்களிலிருந்து மேல் நோக்கிப்

பீறிட்டு வரும் நீர்மேல், பலவண்ண மின்னொளி பட்டுக் கண்ணுக்கு இனிமையையும் கவர்ச்சியையும் அளித்துக் கொண்டிருந்தது. மேலை நாடுகளின் சிற்பிகள் இங்கு வரவழைக்கப்பட்டுச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டன. ''முதல் பீட்டர் மன்னன் பூங்கா உருவாக்கப்படுவதற்குச் செலவைப் பற்றிச் சிறிதும் எண்ணவில்லை'' என்று திரு. செம்பியன் கூறினார்.

அதுமட்டுமின்றி பிரெஞ்சு மன்னன் வெர்சேல்ஸ்ஸில் உருவாக்கிய அழகுமிக்க பூங்காவைவிடச் சிறப்பாக அமைய வேண்டுமென்று அவர் கனவு கண்டதை மேலும் எடுத்துக் கூறினார்.

ஏறக்குறைய எழுபத்தொன்பது சிலைகள் அங்கே இருந்தன. ஒவ்வொன்றும் ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாக இருந்தது.

ஓரிடத்தில் ''அமைதியும் நிறைவும்'' என்பதாக நினைவு கூரத் தக்கவகையில் சிற்பங்கள் பல இணைந்து நிறைந்து காணப்பட்டன. முதல் பீட்டர் மன்னரின் எண்ணப்படி அமைக்கப்பட்டது என்று கூறிய திரு. செம்பியன், அந்தச் சிற்பங்களில் இள நங்கை ஒருத்தி இடது கையில் ஊது குழலும், வலதுகையில் தீப்பந்தமும் கொண்டு காணப் பட்டதைப் போரின் முடிவைத் தெரிவிப்பதாக விளங்குகிறது என்ற விளக்கத்தைக் கொடுத்தார். அதை அடுத்துள்ள வெற்றிப் பெண் தெய்வம் இந்த இளநங்கையின் வீரத்தைக் குறிக்க மகுடம் சூட்டுவதாக அமைந்திருந்தது. அந்த வெற்றித் தெய்வத்தின் அடுத்த கையில் அமைதியைக் குறிக்கப் பொருள் ஒன்று விளங்கியது. வீழ்ச்சியடைந்த சுவீடனைக் குறிக்க அதன் சின்னமான சிங்கம் மண்ணிலே வீழ்ந்துகிடக்க அதன்மேல் நின்று கொண்டிருக்கும் வெற்றித் தெய்வத்தைக் கண்டோம்.

மறுநாள் காலையும் தமிழறிஞர் திரு. செம்பியன் அவர்கள் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்தார். முகத்தில் புன்னகை தவழ இன்பத் தேன் வந்து பாய்கின்ற செந்தமிழில் ''வணக்கம்'' என்று கைகூப்பி அறைக்கு வந்து முன்னே

நின்றார். அவருடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நானும் ''இதாப்ரவிச்ச'' என்று (ரஷிய மொழியில் வணக்கம் என்று பொருள்) கூறி அமரச் செய்து, அளவளாவ ஆரம்பித்தேன். அன்று நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி ''பெட்ரோட்வோரெட்ஸ்'' என்று அழைக்கப் படும் ஜார் மன்னர்களின் கோடை வாசஸ்தலத்தைக் காணவேண்டும். அதைப் பற்றிய வரலாறு அறிய முயன் றேன். ''டிரிங், டிரிங்'' என்று ஒலி கேட்டுத் தொலைபேசியை எடுத்தேன். மூன்றாவது மாடியில் இருந்த என்னைக் கீழே வரும்படி அழைத்தார் தோழர் பொலியகோவ், நானும் திரு. செம்பியன் அவர்களும் மேயர் உட்பட மற்ற நண்பர் களோடு கீழே இறங்கினோம்.

எங்களை ஏற்றிச் சென்ற இரண்டு கார்களும் மின்னல் வேகத்தில் சென்று ஜார் மன்னர்களின் அரண்மனையை அடைந்தன. அக்டோபர் புரட்சிப் பொன்விழாவை முன் னிட்டு அரண்மனைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தனர். ஆகவே உள்ளே சென்று பார்க்க முடியவில்லை. அரண் மனையை அடுத்திருந்த கோடைப் பூங்காவில் நுழைந்தோம். வேகமாக முன்னே நடந்த தோழர் எஸ். கிருஷ்ணமூர்த்தி யும் நானும் செம்பியனை விடவில்லை. அவரும் எங்களோடு பின் தொடர்ந்தார். அது பூங்காவாக மட்டும் விளங்க வில்லை. அங்கே உயர்ந்த மரங்களும், படர்ந்து ஓங்கி வளர்ந்த பெரு மரங்களும் நிறைந்தும் அடர்ந்தும் இருந்தன. இலக்கிய அறிவு மிகுந்த செம்பியன் அவர்களிடம் இரஷிய இலக்கியங்களைப் பற்றி அறியச் சில கேள்விகளைக் கேட்டேன் பதில் சொல்ல முயலும்போது தோழர் எஸ்.கே. குறுக்கிட்டுத் தொழிற்சங்கம் பற்றிய கேள்விகளைத் தொடர்ந்தார். 'உங்கள் இருவர்க்கும் சேர்த்தே பதில் கூறுகிறேன்' என்று தொடங்கினார். திரு. செம்பியன் தாம் அறிந்தவரையில் தொழிற்சங்கத்தைப் பற்றிய சில செய்திகளைக் கூறி இலக்கியத்தின் மீதுள்ள ஆர்வம் காரணமாகவும் அறிவு காரணமாகவும் மார்க்சிம் கார்க்கியின் 'அன்னை' பற்றிய உயிரோட்டம் உள்ள இலக்கியத்தைப் பற்றி விளக்கம் தந்தார். அந்தத் தொடர் கதையில் இழையோடிய தொழிற்


சங்கச் சிறப்புப் பற்றியும் சுவைபட எடுத்துக் கூறினர். மேற்கொண்டு தொழிற்சங்கச் செய்திகளையும், கம்யூனிஸ்டுக் கட்சியைப் பற்றியும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் தமக்குத் பதில் அளித்து வந்தார்.

அந்தப் பெரிய மலர்க்காட்டில் பாதையின் ஊடே நடந்தே சென்றோம். பேச்சில் உள்ள சுவை காரணமாக நடையில் வேகமும் உள்ளத்தில் உவகையும் மேலிட மேலும் நடந்தோம். அந்த மலர்க்காட்டிற்கு ஆங்காங்கு வடித் திருந்த அழகு சொட்டும் சிலைகள், மேலும் பெரலிவூட்டிக் கொண்டிருந்தன. எங்களோடு வந்துகொண்டிருந்த மேயரையும் மற்ற நண்பர்களையும் வழி தவறி விட்டு விட்டோம். பூந்தோட்டத்தை அடுத்த கடலுக்கு வந்து சேர்ந்தோம். அந்தக் கடற் பகுதிக்கு 'பின்லந்து ஜலசந்தி' என்று கூறுகிறார்கள். மேலும் பேச்சைத் தொடர்ந்தோம்.

தமிழாய்ந்த நண்பரின் குடும்பத்தைப் பற்றி அறிந்து கொள்ளச் சில கேள்விகளைக் கேட்டோம். தாம் ஒரு குழந் தைக்குத் தந்தையென்று கூறிய திரு. செம்பியன், அண்மைக் காலம் வரை வாடகை வீட்டிலேயே குடியிருந்ததாகவும் தற்போது கூட்டுறவுச் சங்க மூலம் மாதத் தவணையில் பணம் செலுத்தும் வகையில் வீடு ஒன்று வாங்கியிருப்ப தாகவும் கூறினர். ''உங்கள் வருவாயில் குடும்பம் நடத்தி மேற்கொண்டு வீடுவாங்கப் பொருளாதாரம் இடம் தருகிறதா?'' என்று கேட்டதற்கு, தம் ஊதியம் மட்டும் போதாது என்றும் தம் துணைவியும் வேலை செய்வ தாகவும், இருவர் வருமானம் இருப்பதால்தான் வீடு வாங்க முடிந்ததாகவும் அவர் கூறினர்.

அரண்மனை வாயிலில்

அரண்மனையிலிருந்து மூன்று பர்லாங் தொலைவிற்கு நீரூற்று நீர் பாய்ந்தோடி கடலில் கலக்கும் பகுதியை அழகு படுத்தியிருக்கிறார்கள். அந்த நீரூற்றுகளின் மையத்தில் சிங்கத்தின் வாயை சாம்சன் பிளப்பது போன்ற சிலையின் தோற்றம் காண்பதற்குக் கவர்ச்சிகரமாகத் தோன்றுகிறது.



லெனின் கிராடு நகரின் ஒரு தோற்றம் (நெவெஸ்கி சதுக்கம்)

அங்கே மத்தாப்பு சொரிவது போன்ற நீருற்றுத் தொட்டுள்ளது. அதில் அரை நிமிடத்திற்கு ஒரு முறை விட்டு விட்டு நீர் சொரியும். அங்கே குழந்தைகளும் பெரியோர்களும் தங்களை மறந்து விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டோம். எங்களைப் பிரிந்துவிட்ட மேயரையும் நண்பர்களையும் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வருவதாக திரு. செம்பியன் குழந்தைபோல் ஓடினார். அவரது உள்ளமே குழந்தையுள்ளம்தான். உருவந்தான் இளைஞரை ஒத்திருந்தது. அரண்மனையின் அருகில் நின்றிருந்த திரு. கிருஷ்ணமூர்த்தியும் நானும் 'அரண்மனை உள்ளே போக முடியுமா?' என்று அங்கிருந்த ஒருவரைக் கேட்க எண்ணினேம். இதற்குள் செம்பியன் அவர்கள் மேயரையும் மற்ற நண்பர்களையும் கண்டுபிடித்து அழைத்துக்கொண்டு வந்தார்.

லெனின்கிராடு நகரம் அழகு மிகுந்து விளங்குகிறது. பாதைகளோ பாங்காக அமைந்துள்ளன. பெரும் பாதைகளின் நடுவில் போக்குவரவை ஒழுங்குபடுத்தும் வகையில் பூங்காக்கள் அமைத்திருக்கின்றனர். செடிகளில் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. ஒழுங்கான பாதகளில் இருமருங்கிலும் நெடிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. லெனின்கிராடு நகர மக்கள் பரபரப்பாகவே எப்போதும் காணப்படுகின்றனர். பஸ்களிலும், டிராம் வண்டிகளிலும் பயணம் செய்கின்றனர்.

பேருந்துப் பயணம்

பேருந்துகள் காண்பதற்குக் கவர்ச்சியாக மட்டுமல்ல; பயணம் செய்ய வசதியாகவும் உள்ளன. நாங்கள் பேருந்தில் பயணம் செய்ய ஏறினேம். பஸ் புறப்பட்டது. ஏறும் பயணிகள் நான்கு 'கோபக் நாண'யத்தை ஏறுகின்ற இடத்திற்கு அருகில் (உள்ள) பெட்டியில் போட்டு, அதற்குப் பக்கத்தில் சுருளாக வைக்கப்பட்டுள்ள பயணச் சீட்டைக் கிழித்துக் கொள்கிறார்கள். எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும் நான்கு கோபக் காசுதான் கட்டணமாக வசூல்

செய்கிறார்கள். நாங்களும் நாலு நாணயத்தைப் போட்டுப் பயணச் சீட்டைப் பெற்றோம்.

'பஸ்ஸில் கண்டக்டர் இல்லையா?'' என்று திருமதி லூசி அவர்களைக் கேட்டேன். ''பயணச் சீட்டு அளிப்பதற்கு என்று ஆள் தேவையில்லை. ஏனெனில் எங்கள் நாட்டில் பயணம் செய்வோர் ஒவ்வொருவரும் வண்டி ஏறும்போது தாங்களாகவே முன்வந்து காசைப் பெட்டியில் போட்டுப் பயணச் சீட்டைக் கிழித்துக்கொண்டு உட்காருவர். இப்போதுகூட பார்க்கவில்லையா?'' என்று அவர் சொன்னார். அப்போது பஸ் நின்றதும் பயணிகள் ஏறிக் காசு போட்டுப் பயணச் சீட்டைக் கிழித்துக்கொண்டு உட்கார்ந்ததைச் சுட்டிக் காட்டினார்.

குறைந்த செலவில் பஸ் பயணத்தை மேற்கொள்ளு கிறார்கள். ஆகவேதான் பஸ் எப்போது பார்த்தாலும் பயணி கள் நிறைந்து காணப்படுகின்றன. என் சிந்தனை அனைத்தும் தமிழகத்தைச் சுற்றிக்கொண்டிருந்தது. அப் போது அண்மையிலே நடந்த ஓர் உரையாடல் நினைவுக்கு வந்தது.

கலைஞர்போடும் கணக்கு

ஒரு நாள் மாலை பஸ் போக்குவரவு அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களோடு, அவர் காரிலேயே உடன் சென்றேன். அப்போது கலைஞர் அவர்கள் சிந்தனையிலாழ்ந் திருந்த காரணத்தால் அமைதியாக வந்து கொண்டிருந்த வர் திடீரென்று காரிலிருந்து வெளியே தலையை நீட்டி எங்கள் காருக்கு முன்னாலே ஓடிய சிவப்பு வண்ணம் பூசி யிருந்த பஸ்ஸைப் பார்த்தார். முகத்தில் புன்னகை தவழ என்னைப் பார்த்துப் ''போகின்ற பஸ்ஸைப் பார்த்தாயா? அதில் கூட்டம் நிறைய இருக்கிறது. ''வசூலும் இன்று நிறைந்து இருக்குமல்லவா?'' என்று பஸ் உரிமையாளரைப் போல் என்னைக் கேட்டார். ''உண்மையிலேயே கடந்த சில திங்களாக அரசு நடத்தும் பஸ்ஸில் கூட்டம் அதிகம் ஏறுவதை நான் பார்த்து வருகிறேன். அதிலும்

குறிப்பாக நீண்ட தூரம் செல்லும் பஸ்ஸில் கட்டணம் குறைந்திருப்பதும் காரணமாகும்'' ''உண்மைதான்''.

''இப்போதெல்லாம் நீண்ட தூரம் செல்லும் பஸ்ஸில் மக்கள் நிறைந்து காணப்படுவதை நான் பார்த்து வருகிறேன்'' என்று பதில் கூற, அதற்குக் கலைஞர் ''முன்பெல்லாம் நான் தயாரித்து வெளியிடும் திரைப்படங்களின் அன்றாட வசூலைக் கேட்டறிந்து மகிழ்ச்சியடைவது வழக்கம். ஆனால் அமைச்சரான பின்னர் நான் பொறுப்பேற்றிருக்கும் போக்கு வரவுத் துறையில் அரசு பஸ்களின் அன்றாடம் வசூலாகும் தொகையைத் தெரிந்து கொண்டு அதிலும் சிறப்பாக முன்னைவிட இப்போது வசூல் மிகுதியாக ஆவது கண்டு மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறேன்'' என்று பூரிப் படைத்த நிலையில் பேசிக்கோண்டே வந்தார். இந்த நிகழ்ச்சியை என்மனம் எண்ணக் கொண்டிருக்கயில் நாங்கள் ஏறிவந்த பஸ் அடுத்த நிலையத்தில் வந்து நின்றது. பஸ்ஸிலே என்னைத் தோழர் பொலியகோவ் முதுகைத் தட்டி எழுந்திருங்கள் என்று ஜாடை காட்டி நின்றார்.

காசு போட்டால் பழச்சாறு வழங்கும் இயந்திரம்

பஸ்ஸைவிட்டு இறங்கி நடைபாதையிலே நடக்க ஆரம்பித்தோம். சென்னை நகரிலே உள்ள எடை பார்க்கும் இயந்திரம் போன்ற ஒன்றைக் கண்டோம். அதைப் பார்த்ததும் சற்று நின்றோம். இயந்திரத்தின் இடையில் மூன்று பொத்தான்கள் இருந்தன. ஒவ்வொரு பொத்தானுக்கும் மேலே ஆப்பிள், ஆரஞ்சு, மினரல் வாட்டர் என்று எழுதியிருந்தது. பொத்தானுக்குக் கீழே கண்ணாடிக்குவளை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. மாலை நேரமல்லவா? சென்னை நகரில் சிற்றுண்டி உண்ணும் நேரம், பசியின் உணர்வைப் பெற்றதால் காபியின் நினைவு வந்தது. இதற்குள் தாயின் கடமையை நிறைவுற ஆற்றும் திருமதி லூசி அம்மையார் இயந்திரத்தைக் காட்டி ''பழரசம் குடிக்கலாமே'' என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்கள்.

பழரசம் குடிக்க ஆவல் ஒரு பக்கம் இருப்பினும் மறுபக்கம் இயந்திரம் எப்படி வேலை செய்கிறது என்பதையறிய ஆவல் மிகுதியாலும் எங்களில் சிலர் 'பழரசம் தேவை என்றோம்'. பத்து கோபக் நாணயத்தைப் போட்டுப் பொத்தானை அழுத்த பழரசம் கொட்டியது. அங்கு வைக்கப்பட்டிருந்த கண்ணாடிக் குவளையை எடுத்துப் பிடிக்க, அது நிறைந்ததும் பழரசம் வருவது நின்றது. ஒருவர் குடித்து முடித்ததும் கண்ணாடிக்குவளை இருந்த இடத்தில் திருப்பி வைத்து அழுத்தினவுடன் கீழேயிருந்து தண்ணீர் பீறிட்டு மேலே வேகமாக வரவும், தானாக குவளை கழுவப்படுகிறது. ஒவ்வொருவரும் பத்துக் கோபக் நாணயம் போட்டுப் பழச்சாறு பருகினோம்.

இதை முடித்துக் கொண்டு மேலும் நடந்தோம். நடைபாதையிலே வேறொரு இயந்திரம் கண்டோம். எதற்காக இது இங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்க, ''நாணய மாற்றுச் செய்து அளிக்கும் இயந்திரம்'' என்று கூறியவாறு தோழர் பொலியகோவ் தம்மிடமிருந்து ஒரு பத்துக் கோபக் நாணயத்தை இயந்திரத்தில் போட்டதும், மூன்று கோபக் நாணயங்கள் மூன்றும் ஒரு கோபக் நாணமும் வந்து விழுந்தன. விழுந்த நாணயங்களை எடுத்துக்கொண்ட தோழர் பொலியகோவ் 'மேலும் செல்லலாம் என்றார். அவரைத் தொடர்ந்து நடந்தோம். பழச்சாறு பருக நகரின் நடைபாதையில் வைத்து மக்கள் பயன்படுத்தச் செய்திருப்பதும் நாணய மாற்று இயந்திரம் நடைபாதையிலே அமைந்திருப்பதும் பார்த்துப் பயன்படுத்தியபோது இப்படிப்பட்ட இயந்திரங்களும் நம்முடைய நாட்டிற்கு வருமேயானால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று என் மனம் ஏங்கியது.

ஸ்டாலின் சாதனைகள்

இவைகளெல்லாம் எவ்வளவு ஆண்டுகளாக, இருந்து வருகின்றன என்று தோழர் பொலியகோவை நான் கேட்டேன். பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்து

வருகின்றன என்று பதில் கூறினர். இவைகளெல்லாம் உலகம் கண்டு வியந்த சோவியத் சிற்பி ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தவை. நாட்டிற்கு அவர் செய்த முன்னேற்றப் பணிகளில் இவைகளெல்லாம் சிறியவை என்பதைக்கேட்டறிந் தேன். என்னுடைய உள்ளம் அவரை வாழ்த்திற்று. அதைப் போலவே கண்டக்டர் இல்லாமல் பஸ் ஓடுவதும், பயணி கள் தாமாகவே முன்வந்து காசு போட்டுப் பயணச்சீட்டு எடுத்துக்கொள்வதுமான சீறிய திட்டத்தைக்கொண்டு வந்த வரும் அதன் மூலம் மக்களின் மனவளத்தைப் பெருக்கிய வரும் மாவீரர் ஸ்டாலின்தான் எனச் சொல்லக் கேட்டேன். என் உள்ளம் குளிர்ந்தது. உவகையும் மிகுந்தது.

உலகிலேயே சோவியத் நாட்டை எவரெஸ்ட் சிகரத் திற்கு உயர்த்திய மறைந்த மாவீரர் ஸ்டாலினைப் பற்றிப் படித்தவற்றையெல்லாம் என் மனம் ஒரு முறை நினைவு படுத்திக்கொண்டது. செருப்புத் தைக்கும் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்து வறுமையில் உழன்று பின்னர் போர் வீரனாக மாறி சோவியத் ஒன்றியத்தின் தலைமையேற்றோர் தலைசிறந்த நிர்வாகி என்ற பேரும் பெற்று இரண்டாம் உலகப் போரில் சோவியத் நாட்டிற்குப் பெரு வெற்றியைக் குவித்தார். வெறிபிடித்த இட்லரின் பேராசைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். வெற்றிக்கொடி நாட்டிய, உலகமே புகழ்ந்த மாவீரர் ஸ்டாலின் இயற்கை அடைந்தபோது உலகமே கண்ணீர் விட்டதையும் எண்ணினேன்.

தமிழகத்தின் தலைநகரமான சென்னை நகரத்தில் மாவீரர் ஸ்டாலின் மறைந்ததை யொட்டி தி.மு. கழகத்தின் சார்பில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த இரங்கல் கூட்டம் என் மனத்திரையில் தோன் றியது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அங்குக் கூடி யிருந்த இலட்சக் கணக்கான மக்களிடையே ஸ்டலினைப் பற்றி எடுப்பான முறையில் தமக்கே உரித் தான நடையிலே எடுத்துக் கூறிப் புகழாரம் சூட்டி, இரங்கலைத் தெரிவித்ததும், அதற்கு முன்னதாக கலைஞர் கருணாநிதி அவர்கள் உணர்ச்சி மிகுந்த பேச்சால் கூடி யிருந்த மக்களைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்தியதும்,

அக்கூட்டத்திலேயே ஸ்டாலின் மறைந்த அன்று பிறந்த தமது ஆண் குழந்தைக்கு 'ஸ்டாலின்' என்ற பெயரைச் சூட்டியிருப்பதாக எடுத்துக்கூறியதையும் நினைவுகூர்ந்தேன்.

அன்று மாலை முழுதும் கார் மூலம் செல்வதை விட்டு நடந்து சென்று பார்க்க வேண்டியன அனைத்தும் பார்த்து விட்டு விடுதி திரும்பினோம்.

வெள்ளை இரவு!

லெனின்கிராடு நகரில் வேறு எங்கும் காணாத ஒரு புதுமையைக் கண்டோம். அங்கு இரவும் பகலும் ஏறக்குறைய ஒன்றாகவே இருக்கிறது. சூரியன் மறைந்த பின்னும் இருட்டுவதில்லை. இதற்குக் காரணம் அந்த நகரம் வட துருவத்தின் அருகில் இருப்பதுதான். இப்படி வெளிச்சம் கலந்த இரவாக இருப்பதை வெள்ளை இரவு என்று கூறுகிறார்கள்.

இரவு உணவு முடிந்ததும் நகரைச் சுற்றிப் பார்க்க விடுதியை விட்டு வெளியே புறப்பட்டோம். அப்போது நிலவிய வெள்ளை இரவைக் கண்டு வியந்தோம்.

முப்பது இலட்சம் மக்கள் வாழ்கின்ற லெனின் கிராடு நகரம் இரவில் பரபரப்பாகவே இருக்கிறது. கலைக்கூத்துக் காணச் செல்வோரும், பூங்காக்களில் பொழுதுபோக்கி மகிழ்ச்சி பெறுவோரும் பாதைகளில் நடந்து செல்வோரும் நிறைந்து காணப்பட்டனர்.

நடைபாதை மூலம் சென்ற நாங்கள் ஐசக் சதுக்கத்தைக் கடந்து, ''அட்மிராலிடி'' அடைந்து வெண்கலக் குதிரை வீரன் சிலையைக் கடந்து, பல்கலைக் கழகத்தை அடைந்தோம். வண்ணம் பூசப்பட்ட அந்தக் கட்டிடம் காணுவதற்கு இனிமையாகவும், கவர்ச்சியாகவும் காட்சியளித்தது. கலை மன்றக் கட்டிடத்தைப் பார்த்துவிட்டு மேலும் நடக்க எகிப்து நாட்டுச்சிலை எங்கள் கண்ணுக்கு விருந்தாக அமைந்தது.

நேவா நதியில்

அழகு கொழிக்கும் நேவா நதியின் மேல் அமைந்த பாலத்திற்கு வந்தோம். அந்த நேரத்தில் ஒரு கப்பல் சென்று கொண்டிருந்தது. கப்பலின் மேல் தளத்தில் ஐந்நூறு பேர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கூட்டாகப் பாட்டுப் பாடிக் கொண்டு சென்றனர். பாட்டின் பொருள் புரியாவிட்டாலும் பாடிய பாடல் செவிக்கு இனிமையாக இருந்தது. அருகில் இருந்த மொழி பெயர்ப்பாளர் திருமதி லூசி அவர்களை "என்ன பாடல் இது? பாடலின் கருத்தென்ன அறியலாமா?" என்று கேட்டேன்.

"சுவையூட்டும் அந்தப்பாடல்" வெள்ளை இரவைப் பற்றியதாகும். நினைவில் நீங்கா இப்பாடல் அலெக்சாண்டர் புஷ்கின் என்ற எங்கள் பெருங்கவிஞர் பாடியதாகும். வெள்ளை இரவைப் பற்றிக் கவிஞர் இலர் மெண்டோவ் கூடப் பாடியிருக்கிறார்" என்று கூறினர். இரவு பற்றி புஷ்கின் மட்டுந்தான் பாடியுள்ளார் என்று நினைக்கின்றீர்களா? தமிழகத்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூடப் பாடியுள்ளார்' என்று கூறி, அந்தப்பாடலைத் திருமதி லூசி அவர்கட்கும் பாடிக் காட்டினேன். அந்தப்பாடல் இதுதான்:

"விண்முதல் மண் வரைக்கும்
  வியக்கும் உன்மேனி தன்னைக்
கண்ணிலே காண்பேன்; நீயோ
  அடிக்கடி உடையில் மாற்றம்
பண்ணுவாய் இருளே, உன்றன்
  பகல் உடை தங்கச் சேலை!
வெண்பட்டில் இராச் சேலை மேல்
  வேலைப் பாடென்ன சொல்வேன்!"

லெனின்கிராடு நகரத்து மக்கள் இரவிலே நேவா நதிக்கரைக்கு வந்து பீட்டர், பால் ஆகிய கோட்டைகளைக் காண்பதிலே ஏற்படும் களிப்பும், வசந்த மாளிகையின் வனப்பும், ஹெர்மிடேஜ் ஓவியக் கூடத்தின் எழிலும் கண்டு செல்வது வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

நேவா நதியின் கரையில் மேலும் சென்ருேம். ஒளி மிக்க பீட்டர் மன்னனின் மாளிகையைப் பார்த்த நாங்கள் நதியை நோக்க நதியிலே மிதந்து கொண்டிருந்த ''அரோரா'' கப்பல் கண்ணைக் கவர்ந்தது.

கொடுங்கோலன் ஜார் மன்னனை எதிர்த்து 1917ம் ஆண்டில் மாவீரன் லெனின் புரட்சி நடத்தியபோது இந்த ''ஆரோரா'' மூலம் போரிட்டு வெற்றி கண்டதால் நினைவுச் சின்னமாகப் போற்றிக் காப்பாற்றப்பட்டு வருவதாக விளக்கம் தந்தார் திருமதி லூசி.

மேலும் நடந்தோம். பார் புகழும் மாவீரரின் பெருஞ் சிலையைத் தாண்டிப் புரட்சி நடத்தி வெற்றி கண்டு புது அரசு நிறுவிப் புதிய வரலாற்றைப் படைத்த ''மோல்னி'' தலைமை அகத்தை அடைந்தோம்.

வீரப் பெருமூச்சு

வெள்ளை இரவை ஒருவாருகக் கண்டு மகிழ்ந்து விடுதி திரும்பினேம். விடுதியின் வாயிற் சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் மணி ஒன்று அடித்து, ஒலியெழுப்பித் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது.

அவரவர் அறைக்குச் சென்ருேம். எனக்கோ உறக்கம் வரவில்லை. வழக்கமாக உறங்குவதற்குமுன் செய்யும் பணியாகிய ''அன்ருடக் குறிப்பு'' எழுதுவதைத் தொடர்ந்தேன்; எழுதி முடிந்ததும் உறக்கம் வந்தது.

மறுநாள் காலை வழக்கத்திற்கு மாருக எழுந்ததைப் பின்னர் அறிந்தேன். ஞாயிறு தன் ஒளிக் கதிர்களைப் பரப்பிக் கொண்டிருந்தது சன்னல் வழியே தெரிந்தது. மணியோ நான்குதான் என்பதை தலையணையின் அடியில் வைத்திருந்த கைக்கடிகாரம் காட்டிக் கொண்டிருந்தது. படுக்கையை விட்டெழுந்து முறையாக முடிக்க வேண்டிய காலைக் கடன்களை முடித்துப் படுக்கைக்குப் பக்கத்திலேயிருந்த தொலைபேசி மூலம் குழு நண்பர்களோடு வழக்கம்போல் தொடர்பு

கொண்ட பின்னர் உடன்கொண்டு போயிருந்த திருக்குறளைப் படிக்கத் தொடங்கினேன்.

மணி ஒன்பதாயிற்று என்பதைத் தோழர் பொலிய கோவ் கீழ்வாசலில் வந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் தெரிந்து கொண்டோம். காலைச் சிற்றுண்டி முடிந்து வெளியே வருவதற்கு ஒன்றரை மணி நேரம் ஆயிற்று.

கட்டடக் கட்டுமானப் பொருள் உற்பத்தித் தொழிற் சாலைக்குச் சென்றோம். சோவியத் நாடு குடியிருப்புப் பிரச் சினையில் தன்னிறைவு பெறுவதற்கு ''பிரிபேப்ரிகேடட்'' தொழிற்சாலை பெரிதும் பயன்பட்டு வருகிறது. திட்ட மிட்டுச் செயலாற்றி முன்னேறும் சோவியத் வெற்றி பெறுவதற்குத் தொழிலாளர்கள் காரணமாக இருப்பது போலவே பொறியியல் வல்லுநர்களும் தங்கள் பங்கினைச் செலுத்துகிறார்கள். அத்தொழிற்சாலையின் முதல்வர் எங்களை இன்முகத்துடன் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

பெரும்பெரும் இயந்திரங்களும் பளுதூக்கிகளும் பெரும் இரைச்சலுடன் வேலை செய்து கொண்டிருப்பதைப் பார்த் தோம்.

இத்தொழிற்சாலையில் எத்தனைத் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள் என்று எங்களில் ஒருவர் கேட்க, அதற்கு இரண்டாயிரத்து ஐநூறு தொழிலாளர்கள் பணிபுரிவதாக பதில் வந்தது. ''ஒரு மணி நேரத்திற்கு எவ்வளவு பொருள் கள் உற்பத்தியாகின்றன?'' என்று கேட்டதற்கு ''ஒரு இல்லக அறைத் தொகுதிக்குத் தேவையான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன'' என்று பொறியியல் வல்லுநர் பதிலுரைத்தார்.

திட்டமிட்டபடி ஓர் ஆண்டிற்கு ஏழாயிரம் இல்லக அறைத் தொகுதிகள் கொண்ட பெரிய வீடுகள் கட்டப்பட்டு வருவதாகக் கூறிய பொறியியல் வல்லுநர், ''எண்பதிலிருந்து முந்நூற்று இருபது இல்லக அறைத் தொகுதிகள் கொண்ட வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் விளக்கமாகக் கூறினார். பொதுவாகப் பெரும்பாலான எட்டு, அல்லது

ஒன்பது அடுக்குகள் கொண்ட மாளிகைகள் சோவியத் நாட்டில் கட்டப்பட்டு வருகின்றன. தொழிலாளர்களின் வேலைநேரத்தைத் தெரிவித்த பொறியியல் வல்லுநர், வாரத்திற்குஐந்து நாட்கள் தான் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள்'' என்றார். சோவியத் நாட்டில் மூன்று அல்லது நான்கு திங்களில் ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டி முடிப்பதாக அந்தப் பொறியியல் வல்லுநரே கூறினார்.

எட்டடிக் குச்சும் எட்டடுக்கு மாளிகையும்

விரைவாக முன்னேறும் சோவியத் நாடு, வீட்டுப் பிரச்னையில் தன்னிறைவு கொள்வதற்கு எடுத்துக்கொண்டு பணியாற்றும் நோக்கமும் தன்மையும் எண்ணிய போது வியப்படைந்தோம். தமிழகத்தின் நினைவு தன்னாலே வந்து விட்டது. குறிப்பாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே எழில் நகரம் என்று எல்லாராலும் போற்றப்படும் சென்னை மாநகரில் ஆயிரக்காணக்கான குடிசைகள் இருப்பதும் அவற்றில் ஏழைப்பாட்டாளிகள் ''எட்டடிக் குச்சுக்குள்ளே—சுந்தையா எத்தனை நாளிருப்பேன்?'' என்று கூறாமல் குடியிருந்து கொண்டிருக்கும் நிலையை ஒரு கணம் எண்ணிப் பார்த்தேன். ஏக்கம் பிறந்த நிலையில் வானோங்கி நிற்கும் கட்டடங்களை ஏறிட்டு நோக்க, உடன் வந்த நண்பர் ஒருவர் ''நகருவோம்'' என்று தட்டிக் கூறத் தொழிற்சாலையை விட்டு வெளியே வந்தோம்.

கண்கவர் கலைக்கூடம்

காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு விடுதியை விட்டுப் புறப்பட மணி ஒன்பது ஆயிற்று. லெனின்கிராடு நகரின் சிறப்புக்கு மணிமகுடம் வைத்தாற்போல் ஹெர்மிடாஜ் என்னும் கலைக்கூடம் விளங்கி வருகிறது. அன்று பார்க்கவேண்டியவைகளில் ஒன்றாக நிகழ்ச்சி நிரலில் ஹெர்மிடாஜ் குறிக்கப்பட்டிருந்தது. நான் படித்திருந்த இன்பச்

செலவு நூல் ஒன்றில் ஹேர்மிடாஜ் போன்ற கலைக் கூடங்கள் இலண்டன் மாநகரிலும் பிளாரன்ஸ் நகரிலும், பார் போற்றும் பாரிஸ் நகரத்திலும் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது நினைவுக்கு வந்தது.

பதினெட்டாவது நூற்றாண்டில் கட்டப்பட்ட மாபெரும் மாளிகைகள் ஜார்மன்னர்களின் வசந்த கால மாளிகையாகப் பயன்பட்டு வந்திருக்கின்றன. மன்னர் ஆட்சி மறைந்து மாவீரர் லெனின் அவர்களால் பாட்டாளி அரசு உருவாக்கப்பட்ட பின்னர் வசந்த கால மாளிகைகள் எல்லாம் கலைக் கூடங்களாக மாற்றப்பட்டன.

நாங்கள் ஹேர்மிடாஜ் கலைக் கூடத்தை அடைந்ததும் எங்களுக்காகத் தோழர் பொலியகோவ் நுழைவுச் சீட்டுகள் வாங்கி வந்தார். உள்ளே நுழைந்த இக்கலைக் கூடத்தை இரண்டாம் முறையாகப் பார்ப்பதாகக் கூறிய திருமதி லூசி, மாளிகையின் வரலாற்றைக் கூறினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இம்மாளிகைகள் புதுப்பிக்கப்பட்டன. அம்மாளிகையில் மட்டும் நானூறு பெருங்கூடங்கள் இருக்கின்றன. இவ்வறைகளில் உள்ளவற்றை முழுவதும் காணவேண்டுமெனில் குறைந்தது ஒரு வாரம் பிடிக்கும் என்றும் கூறினார்.

அங்கிருக்கும் ஓவியங்கள் எண்ணற்றவை. பலநாட்டு இணையற்ற ஓவியர்கள் தீட்டிய கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களை எல்லாம் அங்குத் திரட்டி வைத்திருக்கின்றனர்.

இவ்வோவியக் கூடங்களில் காணும் ஓவியங்கள் கிறிஸ்தவ சமயக் கொள்கைகளைத் தாங்கி நிற்கின்றன. பண்டைய இரஷ்ய மக்களால் போற்றப்பட்ட சமய ஓவியமும் இங்குள்ளன.

சமயத்தை வெறுத்த போதிலும் இவ்வோவியங்களைக் கலையின் சின்னங்களாகவும், வரலாற்றின் சின்னங்களாகவும் சோவியத் நாடு காப்பாற்றிப் போற்றி வருவது அனைவராலும் பாராட்டத் தக்கது. இக்கலைக் கூடங்களுக்குப் பொது மக்களும், மாணவர்களும் ஆயிரக்கணக்கில் அன்றாடம் வந்து கண்டு களிக்கிறார்கள். முதல்மாடியிலே

மன்னர்கள் மாலை நேரத்தை மகிழ்ச்சியாகப் போக்குவதற்கு, ''தொங்கும் பூங்கா'' அமைத்து வைத்திருப்பதைக் கண்டோம். மைகேல் ஏஞ்சல், இரேம் பிரண்ட்ஸ், தித்தியான் ஆகியோரின் வண்ண ஓவியங்களான காலையில் இயற்கைக் காட்சி, கடற்கரையின் மாட்சி, மகிழ்வு தரும் மாலை தொழிலாளர் பெரும் உழைப்பின் சிறப்பு, மன்னர்கள் மதுக்கிண்ணத்தை முத்தமிடும் காட்சி, ஆகிய வற்றைக் கண்டபோது இந்திய வரலாற்று நினைவு வந்தது. தில்லி மாநகரத்தில் அரசுகட்டிலில் கொலு வீற்றிருந்த ஒரு மன்னர் பரம்பரை குடித்துக் குடித்தே கோட்டை விட்ட சோக வரலாற்றை ஒரு கணம் எண்ணிப் பார்த்தேன்.

உள்ளங் கவரும் ஓவியங்கள்

உள்ளத்தைக் கவரும் பிரெஞ்சு ஓவியர்களின் ஓவியங் களும் இத்தாலிய நாட்டு மறுமலர்ச்சி ஓவியர்களின் உயிரோட்டமுள்ள ஓவியங்களும் எண்ணற்றிருந்தன. டச்சு நாட்டு ஓவிய விற்பன்னர்களின் கால்நடை வண்ண ஓவியங் களையும் கண்டோம். விலை மதிக்க முடியாத செல்வங் களைக் கொண்ட கூடங்களை பார்த்தோம். எங்கும் பார்த் திராத அணிமணிகளும் பாதுகாக்கப்படவேண்டிய விலை உயர்ந்த கற்களும், இரத்தினங்கள் பதிப்பித்த வீரவாட் களும், தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்த புனித பைபிள் நூற்களும் கண்டோம். பண்டைக்கால அணிகலன்களும் இருந்தன. கவிஞரும் புகழ்படைத்த விஞ்ஞானியுமான லோமோ நோசாவ் இல்லம் பெரும் கூண்டு போன்ற அமைப்பைக் கொண்டதாக இருந்தது.

இங்கிலாந்து நாட்டிலிருந்து கொண்டுவந்த மயில் சிலையை ஜார்மன்னர்கள் பரிசாகப் பெற்ற காட்சியைக் கூடத்தில் கண்டோம். பலவண்ணப் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட அழகு மிகுந்த ஒரு மேசையையும் கண்டோம்.

இங்கிலாந்து நாட்டின் ஓவியக் காட்சியில் முதற் பரிசு பெற்ற பல வண்ணப் பளிங்குக் கற்களாலான பொருள்கள் பலவும் அங்கு இருந்தன. பதினேன்காவது நூற்றுண்டில்

பயன்படுத்தப்பட்ட மூன்று போர் உடைகளையும் காட்சிக்கு வைத்திருக்கிறார்கள்.

1762ஆம் ஆண்டு தீட்டப்பட்ட வசந்த கால மாளிகை ஒன்றின் ஓவியம். ஓவியமாகத் தோன்றவில்லை; அசல் மாளிகையாகவே காட்சி அளித்தது.

சமக்காளங்களிலும் பல வண்ண ஓவியங்களைத் தீட்டியிருந்தனர். ஜார்மன்னர்களுக்காக நான்கைந்து அறைகளாக விளங்கிய பெருங்கூடங்களனைத்தும் பொன் தகடுகளால் உட்புறமும் மேற்புறமும் வேயப்பட்டு விளங்கி நின்றன. ஓர் அறை தங்கியிருக்கவும், மற்றோர் அறை காதலியுடன் கொஞ்சிக் குலவவும், ஜார் மன்னர்கட்குப் பயன்பட்டனவாம். மற்ற அறைகள் சான்றோர்களையும், அமைச்சர்களையும் சந்தித்து உரையாடல் நிகழ்த்தும் மன்றங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. இந்த விவரங்கள் அங்கே ருஷிய மொழியில் எழுதப்பட்டிருந்ததை திருமதி லூசி எங்களுக்கு ஆங்கில மொழியில் எடுத்துச் சொன்னார்.

ஓவியக் கூடத்தைக் கண்டு முடித்ததும் வெளியே நடந்தோம். ஒரு காலத்தில் உயர்ந்த குடும்பத்துப் பெண்களுக்குக் கல்விக்கூடமாக விளங்கி வந்த கட்டடம் இன்றைய தினம் ஆட்சியிலே உள்ள கட்சியின் இருப்பிடமாக மாறியிருப்பதையும் அறிந்தோம். மாவீரர் லெனின் வாழ்ந்த எளிமையான தோற்றமுள்ள அறை காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்தக் குறுகிய ஆனால் அழகு மிகுந்த கட்டிடத்தின் முன் மாவீரர் லெனினது உயிரோட்டமுள்ள சிலை காட்சியளிக்கிறது. உணர்ச்சி மிகுந்த பெருங்கூட்டத்தின் முன்னே கையுயர்த்தி உணர்ச்சியுடன் கலந்து முழக்கமிடுவது போன்று அந்தச் சிலை விளங்குவதைக் கண்டோம். லெனின் சிம்ம கர்ஜனை புரியும் காட்சி, தமிழகத்துப் பெருந்தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை நினைவுபடுத்திற்று.

உலகத்திலே கண்டும், கேட்டுமிராத வண்ணம் அன்னுடம் பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு தமிழகத்து லெனின் உரை நிகழ்த்துவதைக் கேட்க இலட்சக் கணக்கில் மக்கள் தேன் அடையை மொய்த்துதிருக்கும்

தேனிக்களைப்போல் அமர்ந்திருக்கும் காட்சி என் நினைவுக்கு வந்தது.

நேவா நதிக்கரையில் மத்திய மாலுமிக்கூடம் கண்ணிய மிக்கத் தோற்றத்துடன் காட்சியளித்தது. மாலுமிக் கூடத்திற்கு மகுடம் சூட்டியதுபோல் கிரேக்க ஓவியர்களின் கைவண்ணங்கள் விளங்கின. அட்மிரால்டி, பீட்டர் பால் ஆகிய கோட்டைகளின் தங்கக் கலசங்கள் ஒளி வீசிக் கொண்டிருந்தன.

சிறப்புமிக்க கோட்டைகள் ருஷிய நாட்டின் பாஸ்டிலியாகவும் பயன்பட்டு வந்தன என்று கூறிய திருமதி லூசி, அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் இறந்ததும் அவர்களை அடக்கம் செய்வது பற்றியும், அவ்விதம் அடக்கம் செய்யும் பெட்டிகள் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டவை என்றும் எடுத்துச் சொன்னார்.

புனித ஐசக் கோவிலின் தங்கத் தகட்டால் வேயப்பட்ட விதானம் கண்ணைக் கவர்ந்தது. இலண்டன் மாநகரத்தில் இருக்கும் புனித பால் கோவில் போன்றும், ரோம் நகரத்தில் விளங்கும் புனித பீட்டர் கோவில் போன்றும் விளங்குவதாக இத்தாலியைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் (எங்கள் அருகில் நின்று கொண்டு) கோயிலைப் பார்த்துப் பேசிக் கொண்டார்கள். இந்தக் கோவில்களைக் காட்டித் திருமதி லூசி, ''சோவியத் நாட்டில் நாற்பது அல்லது ஐம்பது வயதிற்கு உட்பட்டோர் எவரும் கோவில்களுக்குச் செல்வதில்லையென்றும் அறுபது வயத்திற்குமேற்பட்ட வயது முதிர்ந்த பெரியோர்கள் சிலரே கோவிலுக்குச் செல்கிறார்கள் என்றும் சொன்னார். எங்களில் ஒரு நண்பர் திருமதி லூசி அவர்களை இடைமறித்து ''அவ்விதமாயின் இளைஞர்களும் நடுத்தர வயதுடையோரும் கோவிலுக்குச் செல்வது இந்நாட்டில் தடைப்படுத்தப் பட்டுள்ளதா?'' என்று கேட்டனர். ''மன்னர் ஆட்சி ஒழிந்து தொழிலாளர் அரசு மலர்ந்த பின்னால் நாடு வளம்பெற உழைக்கும் முயற்சி மேலிட்டதாலும் பகுத்தறிவு வளரப்பெற்றதாலும் மக்கள் கோவிலுக்குச் செல்வதைத் தவிர்த்து விட்டார்கள்'' என்று அவர் விடையிறுத்தார்கள்.

அது புலியின் குகை

லெனின்கிராடு நகரிலிருந்து முப்பத்தைந்து கிலோ மீட்டர் தூரமுள்ள ராஸலீவ் என்ற இடத்திற்கு கார் மூலம் புறப்பட்டுச் சென்றோம். நாங்கள் சென்ற அழகான பாதை பின்லாந்து நாட்டிற்குப் போவதாகச் சொன்னார்கள். இரயில் பாதை ஓரமாகவே இந்தக் கார்ப்பாதையும் அமைந்திருந்தது. வழிநெடுக இருந்த கிராமங்களைப் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. கிராமங்களில் உள்ள வீடுகளெல்லாம் சிறியனவாகவே இருந்தன. கிராமங்களில் உள்ள வீடுகள் அதிகச் செலவில் கட்டப்பட்டதாகத் தெரிய வில்லை. வீடுகளின்மேல் வானொலி, டெலிவிஷன் ஆகியவைக் கான தொடர்புக் கம்பிகள் இருக்கக் கண்டோம். நகரங்களில் காணமுடியாத சைக்கிள்களை அங்கு ஆண்களும், பெண்களும் ஓட்டிக்கொண்டு செல்வதைக் கண்டோம். கிராமத்திலே கூட சாலைகள் சாதாரண நிலையில் போடப்பட்டிருந்தாலும் முப்பது நாற்பது அடி அகலம் உள்ளவைகளாக இருக்கின்றன.

இரயில் நிலையங்களைக் கண்டோம். நம்முடைய நாட்டில் உள்ள இரயில் நிலையங்களைப்போல பெருஞ் செலவு செய்து கட்டப்பட்ட கட்டடங்களாக இல்லை. எளிய முறையில் போடப்பட்ட நீண்ட மேடையும் (பிளாட்பாரம்) சிறிய அறை ஒன்றும் மட்டுமே இருந்தன.

பின்லாந்து நாட்டிலிருந்து பல பேருந்துகள் எதிர் நோக்கி வந்து கொண்டிருந்தன. அவைகளில் இன்பச் செலவினர் சோவியத் நாட்டைப் பார்ப்பதற்கு வருவதாகக் கூறக் கேட்டோம்.

நாங்கள் அடைய வேண்டிய ராஸலீவ் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். இடப் பக்கத்திலே பெரிய ஏரியும், வலப் பக்கத்திலே அடர்ந்த மரங்கள் கொண்ட காடும் இருந்தன.

சாலையின் ஓரத்திலிருந்த பரந்த இடத்தில் பேருந்துகள் பல நின்றிருந்ததால், அவ்விடம் பேருந்து நிலையம் போல் காட்சியளித்தது.



மாவீரர் லெனின் தலைமறைவாக வாழ்ந்தபோது தங்கியிருந்த குடில்

வண்டி நின்ற பாதையிலிருந்து காட்டிற்குச் செல்லச் சிறிய பாதை ஒன்று தெரிந்தது. அதன்வழியே உள்ளே நடந்தோம். இடப்புறத்தில் அண்மையில் கட்டியிருந்த புதுமையான கட்டிடத்தைக் கடந்து மேலும் இடப்பக்கம் நோக்கி சிறிது தூரம் நடந்தோம். அங்கு ஒரு குடிசை தெரியவந்தது. அருகில் சென்ருேம். என்ன புதுமை! சோவியத் நாட்டிலே எங்கும் காணமுடியாத ஒரு குடிசையை அங்குக் கண்டோம்.

அந்தக் குடிசையில்தான் சில ஆண்டுக் காலம் தலை மறைவாக மாவீரன் லெனின் வாழ்ந்ததாக திருமதி லூசி கூறினர். ஜார்மன்னனை எதிர்த்துப் புரட்சி நடத்தியபோது லெனினைத் தேடிப் பிடிக்க ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் நாடெங்கும் வலைபோட்டுத் தேடிக் கொண்டிருந்த நேரத்தில் பின்லாந்து நாட்டிலிருந்து எவருக்கும் தெரியாமல் ராஸ்லீல் ஏரிவழியாக படகுமூலம் தாமே படகைச் செலுத்தி இவ்விடத்தை அடைந்து, தலைமறைவாக இக் காட்டிலுள்ள குடிசையில் லெனின் வாழ்ந்து வந்ததாகத் திருமதி லூசி மேலும் கூறத் தொடங்கினர்.

தலைமறைவாக அந்தக் குடிசையில் லெனின் வாழ்ந்த காலத்தில், தாமே உணவைச் சமைத்து உண்டதும், புரட்சியை அங்கிருந்தே நடத்திச் சென்றதும் அப்போது எவரும் தம்மைக் கண்டு கொள்ள முடியாதிருக்கத் தாடியை எடுத்து விட்டதுமான வீரஞ்செறிந்த தியாக வரலாற்றினைக் கேட்டோம்.

அந்த மண் குடிசையைக் கண்டபோது ''உலகம் உய்ய அந்த மாவீரர் தம் இன்னுயிரைப் பணயம் வைத்துத் தியாக வாழ்க்கை புரிந்த இடமல்லவா இந்த இடம்!'' என்று எண்ணியபோது உடல் புல்லரித்தது.

அருகிலிருந்த புதிய கட்டிடத்திற்குச் சென்ருேம். லெனின் நினைவுக் கூடமாக அது விளங்குகிறது. பின்லாந்து நாட்டிலிருந்து படகுமூலம் எவரும் அறியாமல் லெனின் அப்போது பயன்படுத்திய அப்படகு அப்படியே அங்குக் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்

டோம். துடுப்பும், அத்துடன் அங்கே இருந்தது. அவர் உடுத்திய உடைகளும், உணவு சமைக்கப் பயன்படுத்திய பாத்திரங்களும் அங்கே சில இருந்தன. காட்சிக்கு எளியனாய் கடுஞ்சொல் அல்லனாய் புரட்சிக்குத் தலைவனாய் விளங்கி, மக்கள் மகிழ்வுடன் வாழத் தாம் எளிய வாழ்க்கை மேற்கொண்ட அந்த ஏந்தலை எண்ணியெண்ணிப் போற்றினோம்.

மெத்ரோ பயணம்

நிலத்தின் மேல் ஓடுகின்ற இரயிலில் பயணம் செய்து பழக்கப்பட்ட எங்களுக்குச் சுரங்க மின்சார இரயிலைப் பார்க்க வேண்டும்; அதில் ஏறிப்பயணம் செய்ய வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. பாதைகளின் ஓரங்களில் எங்கெங்கு 'எம்' என்று எழுதப்பட்ட பலகை நிறுத்தப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் சுரங்க இரயில் நிலையம் இருக்கின்றது. 1837ஆம் ஆண்டில் தோன்றிய சாதாரண இரயில் இன்று, மெத்ரோ (சுரங்க) இரயில்வரை வளர்ச்சி பெற்றிருக்கின்ற நிலையை எண்ணி வியந்தோம்.

சுரங்க இரயில் அமைப்புமுறை உலகிலேயே சோவியத் நாட்டிலேதான் சிறப்பாக உள்ளது என்று மேலைநாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். சுரங்க இரயில் லெனின்கிராடு நகரில் 1961ஆம் ஆண்டில்தான் ஏற்பட்டது. செல்வந்தர் ஏறிச் செல்லச் சொகுசான ஒரு பெட்டி ஒதுக்குவதும் ஏழைகள் பயணம் செய்ய எளிய முறையில் வேறு பெட்டிகள் இருப்பதுமான வழக்கம் அந்தநாட்டில் இல்லை. எல்லோரும் பயணம் செய்யத்தக்க அளவில் ஒரே சீராக வசதி செய்யப்பட்ட சுரங்க இரயிலைத்தான் அங்குக் கண்டோம். பால்டிஸ்கரா சுரங்க இரயில் நிலையத்திற்குச் சென்றோம். நிலத்திலிருந்து சுமார் முந்நூறு அடிக்கு அடியில் சென்றால்தான் இரயிலடிக்குப் போக முடியும். எங்கலேட்டர் என்று கூறப்படுகிற தானாக இயங்கும் படிக்கட்டுகளில் கால்களை வைத்தவுடன் நம்மைக் கீழே கொண்டு போய் விட்டு

விடுகிறது. அதைப் போலவே இரயில் நிலையத்திலிருந்து மேலே வர வேண்டுமென்றாலும் எஸ்கலேட்டர் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டால் மேலே கொண்டு வந்து விட்டு விடுகிறது.

இரயில் கதவுகளுக்கிடையே!

நாங்களும் எஸ்கலேட்டர் மூலம் இரயிலடிக்குச் சென்றோம். இரயிலுக்குப் பயணச்சீட்டு எங்கு வாங்குவது என்று சுற்றுமுற்றும் பார்த்தோம். அங்கே அதற்காக என்று தனியாக அறையோ அலுவலரோ காணப்படவில்லை. எங்கே பயணச் சீட்டு வாங்குவது என்று திருமதி லூசியைக் கேட்டோம். 'பயணச் சீட்டுக் கொடுப்பதற்கு யாரும் இல்லை' என்று கூறினர். இரயில் நிலையத் தலைவர் எங்களை வரவேற்றார். தோழர் பொலியகோவ் இரயில் நிலைய அதிகாரியை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இரயிலில் ஏறுவதற்கு முன்னே ஆறு வழிகளை அங்குக் கண்டோம். உள்ளே செல்வதற்கு முன் அங்கு ஐந்து ''கோபெக்'' நாணயத்தை கதவின் பெட்டியில் போட்டு விட்டால் உள்ளே செல்ல வழி தானே திறக்கும். ஐந்து கோபக் நாணயத்தோடு வாயிலின் உள்ளே சென்று காசைப் பெட்டியில் போட்டோம். 'காசு போடாமல் உள்ளே சென்றால் நஷ்டமல்லவா ஏற்படும்? அவ்விதம் போகின்றவர்கள் இருக்க மாட்டார்களா?' என்று எங்களில் ஒருவர் கேட்டதற்கு ''காசு போடாமல் உள்ளே போய்ப் பாருங்களேன்'' என்று கூறினர் இரயில் நிலைய அதிகாரி. எங்களில் ஒருவர் காசு போடாமல் உள்ளே நுழைய முனைந்தார்; அப்போது துடுப்புப் போன்ற ஒன்று நீண்டுவந்து மேலே செல்ல முடியாமல் தடுத்து நிறுத்தியது. காசு போடுபவர்தான் உள்ளே நுழைய முடிகிறது. கண்காணிக்க ஆள் இல்லாமலே இந்த ஏற்பாடு அங்கே இருக்கிறது.

இரயில் நின்றதும் தானகக் கதவுகள் திறந்து கொண்டன. பயணிகள் சிலர் இறங்கினர், சிலர் ஏறினர்.

எல்லோரும் ஏறிய பின்னர் கடைசியாக ஏறலாம் என்று நான் காத்திருந்தேன். எங்கள் குழுவில் இருந்த எல்லோரும் ஏறிவிட்டார்கள். கடைசியாக நான் ஏற முயன்றேன். புறப்பட இன்னும் நேரம் இருக்கிறது என்று எண்ணியவாறு உள்ளே நுழைந்தேன். அந்தநேரத்தில் கதவுகள் மூடிக் கொண்டன: கதவுகளுக்கிடையே நான் இடையிலே அகப் பட்டுக் கொண்டேன். என்னல் இயன்றவரை இரு கைகளா லும் தள்ளிக் கதவை விலக்கிக் கொண்டு மெள்ள உள்ளே நுழைந்து விட்டேன். எனக்கு இந்த நிகழ்ச்சியால் ஓர் ஐயம் பிறந்தது. எங்களோடு வந்த இரயில் அதிகாரியைப் பார்த்து, 'வயதான ஒருவர் கதவுகளின் இடையில் அகப் பட்டுக் கொண்டால் விபத்து ஏற்படாதா?' என்று வின வினேன். அதற்கு அந்த இரயில் அதிகாரி ''கதவுகள் மூடாது நின்றுவிடின் இரயிலும் புறப்படாது. மேலும் விபத்து மூலம் இறப்பு ஏற்படுவதும் இல்லே. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓரிருவர் விபத் தால் இறப்பது உண்டு. அதுகூட குடித்துவிட்டு தன்னிலே தவறி இரயில் ஏறுகிறவர்கள்தான் விபத்துக்கு உள்ளா கின்றுர்கள்'' என்றுர். கதவுகளேத் தள்ளி நான் உள்ளே சென்றதும், தானுக கதவுகள் மூடிக்கொண்டன. இரயிலும் புறப்பட்டது. அடுத்த இரயில் நிலேயமான விளாடி மீர்ஸ் கயா அடைந்தோம். காலே நேரமாக இருந்ததால் தொழி லகங்களுக்குச் செல்வோர் தொகை அதிகமாக இருந்தது.

சுரங்க இரயில் நிலேய அதிகாரி எங்களேப் பார்த்து அங்கிருந்த சிலேகளேயும் பல வண்ண ஓவியங்களேயும் சுட்டிக் காட்டினுர். தஞ்சையும் மதுரையும் மாமல்லபுரமும் அஜந் தாவும் என் மனக்கண் முன்னே காட்சி அளித்தன. இரயில் நிலேயங்கள் ஒவ்வொன்றும் அழகுக் கோயிலாக உருவாக்கி இருக்கிறுர்கள்.

ஆற்றின் கீழே இரயில் பயணம்

அடுத்து வந்த வேறெரு இரயிலில் ஏறினேம். இரயிலும் புறப்பட்டது. உடன் வந்த இரயில்வே அதிகாரி

நாள்தோறும் சுரங்க இரயிலில் பத்து இலட்சம் மக்கள்வரை பயணம் செய்வதாக எடுத்துச் சொன்னார். அப்போது இரயில் நேவா நதியின் கீழ் ஓடிக் கொண்டிருப்பதையும் எங்களுக்கு நினைவு படுத்தினார். லெனின்கிராடு நகரத்தின் நடுவில் ஓடிக் கொண்டிருக்கும் நேவா நதி, நகருக்கு எழில் கூட்டுவதோடு மட்டுமின்றி குடிநீர்ப்பஞ்சத்தையும் நீக்கி, லெனின் கிராடு நகரை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது. நேவா நதி சில இடங்களில் மூன்று கிலோ மீட்டர் அகலங்கூட இருக்கிறது என்று அவர் கூறினார். இரயில் நதியைக் கடந்தது. இதைக் கடக்க மூன்று நிமிடங்கள் ஆயின. நதியின் நீரைக் கடந்து கரையை அடைய கலத்தைப் பயன்படுத்தும் இந்தக் காலத்தில் நிலத்தை வெட்டி காட்டு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பெருநதியின் கீழேயும் இரயிலை ஓட்டச் செய்யும் சோவியத் அரசின் விந்தையை எண்ணி வியந்து போனோம். இரண்டு நிமிடங்கள் கூட ஆகவில்லை. இதற்குள் தொழில் நுணுக்கப்பயிற்சி நிலையத்தில் வந்து இரயில் நின்றது. ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே நிலையத்தில் நின்றது. அடுத்து வந்த இரயில் நிலையம் புஷ்கின் பெயரால் அமைந்திருந்தது. நிலையம் கலைக் கூடமாக அந்தக் காட்சி அளித்தது. புஷ்கின் ஒரு கலைஞனல்லவா? அவனுடைய உயிரோட்டமுள்ள அழகுச் சிலையையும் அங்கு வடித்திருக்கிறார்கள். பாவேந்தர் பாரதிதாசன் புஷ்கினைப் போன்று புரட்சிப் பாடல்களைப் பாடித் தமிழர்களுக்கு விழிப்புணர்ச்சி உண்டாக்கியவர், சென்னை மாநகரில் வீதிக்கு அவர் பெயரைச் சூட்டி மக்கள் மகிழ்ந்தனர். நகரத்தில் புரட்சிக் கவிஞரின் சிலையை நிறுவ வேண்டும் என்ற தீர்மானத்தை மாநகராட்சி மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிய சிறுதொண்டு மத்தியக் குழு தலைவன் என்ற முறையில் என்னைச் சேர்ந்தது என்ற எண்ணம் புஷ்கின் சிலையைக் கண்டபோது நினைவுக்கு வந்தது. உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி சென்னையில் புரட்சிக் கவிஞரின் சிலையும் திறக்கப்பட்டது.

மானமறவர் திருநகர் நோக்கி

ஜூன் திங்கள் முப்பதாம் நாள் முழுவதும் லெனின் கிராடு நகரத்தில் தங்கி இருந்தோம். இரண்டு நாட்களாக எங்களுடன் துணையாக இருந்து மகிழ்வித்த தமிழறிஞர் செம்பியன் அவர்கள் அன்று இரவுவரை இருந்து விடை பெற்றார். எங்களைப் பிரிந்தபோது தமிழகத்தின் நினைவாகக் கொண்டு சென்ற நூல்களை அவரிடம் அளித்தோம்.

மேயர் திரு. சம்பந்தம் நீதிநூல்கள் பத்து இணைத்த ஆங்கில மொழிபெயர்ப்போடு கூடிய நூல் ஒன்றையும், திரு. முனுசாமி ''பெரிய மாறுதல்'' என்ற ஆங்கில நூலையும் கொடுத்தார்கள். ''திருக்குறள்'' ''மாணவர் செய்யுட் கோவை'' ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகள்'' அறிஞர் அண்ணாவின் ''இரங்கோன் ராதா'' ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்'' ஆகிய நூல்களையும், கலைஞர் கருணாநிதி அவர்களின் ''தேன் அலைகள்'' என்ற நூலையும் தமிழகத்தின் நினைவாக என் சார்பில் அன்பளிப்பாக அளித்தேன். எல்லா நூல்களிலும் அறிஞர் அண்ணா அவர்களின் அரிய கையெழுத்தை வாங்கியிருந்தேன். அதை திரு. செம்பியன் அவர்களிடம் காண்பித்தபோது, ஒரு முறைக்கு இரண்டு முறை ஊன்றிப்பார்த்து மகிழ்ச்சியடைந்தார். கடைசியாக எங்களிடமிருந்து அவர் விடைபெற்றபோது அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கின்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தரவேண்டுமென்று தமிழகத்தின் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொண்டோம். அவரும் வர முயல்வதாகத் தெரிவித்து எங்களிடமிருந்து விடைபெற்றார். உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிந்தோம். (உலகத் தமிழ் மாநாட்டிற்கு அவர் வந்திருந்தார். என்னையும் சந்தித்து அளவளாவினார்).

அன்று இரவு உணவை முடித்துக் கொண்டு மாஸ்கோ மாநகருக்குப் புறப்பட ஏற்பாடாகியிருந்தது. விமானத்திலேயே பயணத்தைத் தொடர்ந்த எங்களுக்கு அந்நாட்டிலுள்ள இரயிலிலும் பயணம் செய்ய வேண்டும் என்ற அவா ஏற்பட்டதால் அதற்கேற்ற வகையிலே இரயில் மூலம் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. விடுதி

யிலிருந்து புறப்பட்டபோது தங்கியிருந்த நாட்களில் பழகி யவர்களிடம் ''தோப்ரே நோச்'.' (ருஷிய மொழியில் இரவு வணக்கம் என்பது பொருள்) கூறி விடை பெற்ருேம். விடுதியில் பணியாற்றும் பெரும்பாலோர் வயது முதிர்ந்த மூதாட்டிகள்; அன்புடன் நோக்கி விடையளித்தனர். குறிப் பாக லிஃப்டில் (ஏறியிறங்கும் கருவி) பணிபுரியும் மூதாட்டி எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார். லிஃப்டில் ஏறும்போதும் இறங்கும்போதும் அந்த ஆங்கிலம் அறிந்த அம்மையாரிடம் பேசுவோம். எப்போது பார்ப்பினும் கையடக்கமான வானொலிப்பெட்டியை வைத்துக் கொண் டிருப்பார்; ''எப்போது பார்த்தாலும் வானொலிப்பெட்டி பாடிக் கொண்டிருக்கிறதே, பாட்டு என்ருல் உங்களுக்கு அதிகம் பிடிக்கும்போல் தெரிகிறதே'' என்று எங்களில் ஒருவர் கேட்க, அதற்கு அந்த அம்மையார் 'பாட்டு என்ருல் எனக்குப் பைத்தியம்' என்று கூறிஞர்.

கடைசியாக அந்த அம்மையாரிடமும் விடைபெற்றுக் கொண்டு இரயில் நிலையத்திற்குச் சென்ருேம். எங்களை வழியனுப்ப லெனின்கிராடு நகரத்துத் துணை மேயர் இவலாம் பீவ் அவர்களும் மற்றும் சில நகர மன்ற உறுப் பினரும் வந்திருந்தனர். இரயில் இரவு 11-50க்குப் புறப்பட்டது. இரவு நேரத்தில் பயணம் செய்யும் இந்தத் துரித இரயிலுக்குச் ''சிவப்பு அம்பு'' என்ற பெயரைச் சூட்டியிருக்கிருர்கள். இந்த இரயிலில் உள்ள பெட்டிகளில் தனித் தனி அறைகள் எட்டு அல்லது பத்து இருக்கின்றன. ஒவ்வோர் அறையிலும் இரண்டு பேர் படுத்து உறங்கிப் பயணம் செய்கின்ற அளவுக்கு வசதி செய்யப்பட்டிருக் கின்றது. படுக்கைகள் வெண்ணிறத் துணிகளால் ஆனவை. குளிரைத் தடுக்கக் கம்பளிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெட்டியிலும் சிற்றுண்டி நிலையம் வைத்திருக் கிருர்கள்.

நான் பயணம் செய்த அறையில் என்னுடன் தோழர் குப்புசாமி இருந்தார். அறைகளின் கதவுகளை மூடிக் கொண்டு படுத்துக் கொண்டோம். சிலமணி நேரம் படிப்பதில் கழித்தோம். இரயிலின் இருபுறத்திலும் வயல்

வெளிகளும் கிராமங்களும் தென்பட்டன. லெனின்கிராடு நகருக்கும் மாஸ்கோ மாநகருக்கும் இடையே 400 மைல்கள் உள்ளன. நாங்கள் சென்ற இரயில் மறுநாள் காலை எட்டரை மணிக்கு மாஸ்கோ நகரை அடைந்தது.

எங்களை வரவேற்க மாஸ்கோ மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும் மொழி பெயர்ப்பாளராக திருமதி கலியா என்பவரும் வந்திருந்தார்கள். வழக்கம்போல் இரண்டு கார்கள் இரயில் நிலையத்தில் காத்திருந்தன. இரயில் நிலையத்திலிருந்து கார்கள் மூலமாக நாங்கள் தங்குவதற்கு ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சோவியத் ஸ்கயா' என்ற விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

சோவியத் நாட்டின் தலைநகரமான மாஸ்கோவில் உள்ள சிறந்த விடுதிகளில் இதுவும் ஒன்ருகும். நாங்கள் அரசு விருந்தினராகச் சென்றிருந்ததால் இங்கேயும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறையினை ஒதுக்கினுர்கள். நான் தங்கியிருந்தது நான்காவது மாடியிலுள்ள 423ஆம் எண் அறையாகும். காலைச் சிற்றுண்டி முடிந்தது; விடுதியை விட்டுப் புறப்படுவதற்கு முன்பாக எங்கள் வருகையை மாஸ்கோ வானெலியில் பணியாற்றும் தமிழரான திரு. மணிவர்மன் அவர்கட்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தோம். திரு. மணிவர்மன் அவர்கள் தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்று ஏழாண்டுகளுக்குமுன் சோவியத் நாடு சென்றவராவார். 1960ஆம் ஆண்டில் தமிழகத்திலேயிருந்து சோவியத் நாட்டிற்குத் தமிழ்ப்பணி ஆற்றச் சென்ற தமிழறிஞர் ஆறு பேரில் ஒருவர்தான் திரு. மணிவர்மன். இவர் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்களின் அரசியல் மாணவராவார். அவருடைய அன்பிற்குரியவர். தீந்தமிழ் ஒளியைத் திக்கெட்டும் பரப்பும் பணியில் திரு. மணிவர்மன் ஈடுபட்டு இருப்பது பாவேந்தர் பாரதிதாசன் கனவாகிய

''என்னருந் தமிழ் நாட்டார்
பன்னருங் கலைஞானத்தால்
பராக்கிரமத்தால், அன்பால்
உன்னத இமயமலை போல்

ஓங்கிடும் கீர்த்தியெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிட''ச்

செயலாற்றிக் கொண்டிருக்கிறார் என்று எண்ணியபோது இறும்பூதெய்தினோம்.

பழம் பெருமையின் மினுமினுப்பு

மாஸ்கோ நகரின் எழிலையும், ஏற்றத்தையும் கண்டு களிக்க கார்மூலம் ஒருமுறை சுற்றிப் பார்த்தோம். முதன் முதலில் உலகில் உருவாகிய சோஷலிச நாட்டின் தலைநகரம் என்ற மகோன்னதப் புகழை மாஸ்கோ பெற்றுவிட்டது. உலகத்தில் நிலப்பரப்பில் ஆறில் ஒரு பங்கு சோவியத் பூமி என்று பெருமைக்குரிய நாட்டின் தலைநகரம் மாஸ்கோ என்கிற நிலையில் அங்குள்ள மக்கள் பெருமைப்படுகிறார்கள். சோவியத் நாட்டில் வாழ்கின்ற 22 கோடி மக்களிடையே 115 தேசிய இனங்கள் உள்ளன. எனினும் இணைந்து வாழ்கின்ற பெருமைக்குரிய நாட்டின் தலைநகர்தான் மாஸ்கோ.

பிரிந்து செல்கின்ற உரிமை அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சிக்கும், பண்பாட்டிற்கும் உலகத்திற்கே மையமாக மாஸ்கோ மாநகரம் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி உலக சோஷலிச நாடுகளுக்கு வழிகாட்டியாகவும், அரசியல் ஆசானாகவும், விளங்கிக் கொண்டிருக்கிறது என்று தற்கால அரசியல் வரலாற்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மாஸ்கோவில் உள்ள போர்க் கருவிக் காட்சிக் கூடத்திற்குச் சென்றோம்; கண்ணுக்கினிமையாக இருந்தது. சோவியத் நாட்டிலும் புறநானூற்றுக் காவியத்தைப் படைத்திருக்கிறார்கள் போலும்! அதன் ஒவ்வொருபுறமும் வீரவரலாற்றை விளக்கிக் கொண்டிருக்கிறது. காட்சிக் கூடத்திற்கு என்றே எட்டுப் பெருங்கூடங்கள் இருக்கின்றன. ஜார்மன்னர் போருக்காகப் போர்க் கருவிகளைச் சேகரித்து வைத்துக் கொண்டிருந்த இடமாம் அது. போரில் வெற்றி

கண்டபோதெல்லாம் சேகரித்த பொருள்களையும், பரிசாகப் பெற்றவைகளையும் திரட்டி இங்கே வைத்திருக்கிறார்கள்.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உருவாக்கப்பட்ட போர்க் கருவிகளை அங்கே கண்டோம். சோவியத்தில் பதினாறாம் நூற்றாண்டில் தான் போர்க் கருவி செய்யத் தொழிற்சாலை முதன்முதலாக உருவாக்கப்பட்டது, என்று திருமதி லூசி கூறினார்.

யாளிமுகம் உள்ள வீரவாள் இந்தியாவின் பரிசாக அங்கே வைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். அரபு நாடுகள், இரான் நாடு, ஆகியவை பயன்படுத்திய போர்க் கருவிகளையும் அங்கே வைத்திருந்தார்கள். இவையனைத்தும் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தன என்றும் கூறக் கேட்டோம்.

சுவீடன் நாட்டு மன்னன் அளித்த கிறிஸ்தவ வேதமாகிய பைபிளில் பொன் தகடுவேய்ந்த அட்டைகள் உள்ளதைக் கண்டோம். அதுபோல் பல பைபிள் நூல்களின் அட்டைப் புறத்தில் தங்கத் தகடுகள் மட்டுமின்றி வைரக் கற்கள் பதித்திருப்பதையும் கண்டோம். மன்னர்களுக்குச் சூட்டும் மகுடம் வைரக்கற்கள் பதித்துத் தங்கத்தால் செய்யப்பட்டு இருந்ததைப் பார்த்தோம்.

மூக்குப்பொடிச் சிமிழ்

அந்நாட்டு மக்களும் அந்தக் காலத்தில் மூக்குப் பொடி போட்டுவந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் தங்கத்தால் செய்யப்பட்ட பொடி டப்பி ஒன்று காட்சிக்காக வைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். உடனே எனக்கு, நமது தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கட்கு அன்புத் தம்பிமார்கள் வெள்ளியாலான பொடி டப்பியை அன்பளிப்பாக அளிப்பது நினைவுக்கு வந்தது.

சிலுவை ஒன்றையும் கண்டோம். மூன்று கிலோ கிராம் எடையுள்ள தங்கத்தால் செய்யப்பட்ட அந்தச் சிலுவை ஜார் மன்னனின் மனைவி பயன்படுத்தியது என்று எழுதப்பட்டிருந்ததை திருமதி லூசி சொன்னார்.

பதினேழாம் நூற்றுண்டில் ஜார் மன்னனின் குடும்பம் பயன் படுத்திய தங்கப் பாத்திரங்களையும் காட்டினுர்கள்.

பொன்னும் மணியும் பதித்த பலநாட்டு அழகு மிகுந்த ஆடைகளையும் கண்டோம். குறிப்பாக, கிரேக்க நாட்டி லிருந்து அனுப்பப்பட்ட பவழம் பொதிந்த ஆடைகளை அங்கே பார்த்தபோது பொன்னும், மணியும், முத்தும் பவளமும், மயிலின் தோகையும் ஒரு காலத்தில் நாவாய் களின் மூலம் நம்முடைய மூதாதையர் கிரேக்க நாட்டிற்கு அனுப்பி வைத்த வரலாற்று நினைவு மின்னலென என்மனக் கண்முன் ஒளிவிட்டு மறைந்தது.

பதினுறு, பதினேழாம் நூற்றுண்டுகளில் செய்யப்பட்ட 'கூஜா'க்கள் இருந்தன. செர்மன், பிரான்சு ஆகிய நாடு களில் செய்த தங்கப் பாத்திரங்கள் (ஜார் மன்னனுக்குப் பரிசு களாக அளிக்கப்பட்டவை) ஆகியவையும் அங்கு வைக்கப் பட்டிருந்தன. முதல் அலெக்சாண்டர் மன்னனின் வெற்றிக்கு அடையாளமாக, தோல்வியை அணைத்துக் கொண்ட பிரெஞ்சு நாட்டு மன்னன் நெப்போலியன் அளித்த பரிசாகிய பீங்கான் தட்டுகள் வேலைப்பாடு அமைந்து கண்ணைக் கவர்ந்து கொண்டிருந்தன. ஈரான் நாட்டு மன்னன் ''ஷா'' அளித்த அன்பளிப்பாகிய சிம்மாசனம் சிறப்புமிக்க ஒன்ருக விளங்கிக் கொண்டிருந்தது. வரலாற்றை நினைவுபடுத்துகின்ற வகையில் மாமன்னர் பீட்டர் தந்தை அமர்ந்திருந்த அரியாசனத்தை அங்கே காட்சிப் பொருளாகக் கண்டோம். சாதாரண மரத்தால் செய்யப்பட்ட நாற்காலியின் பின்னணியில் இருக்கின்ற வரலாற்றை நோக்கினுல் வியப்பாகத்தோன்றும். மகாபீட்டரும் அவருடைய இளவலும் ஒன்ருக அமர்ந்து அரசோச்ச இரண்டு நாற்காலிகளை இணைத்துப் போடப் பட்டிருந்ததைக் கண்டோம். இளையவன் அரசு கட்டிலுக்கு வந்தபோது, அவனுக்கு வயது குறைவாக இருந்த கார ணத்தால் மகாபீட்டர் அறிவுரை கூறும் வகையில் அருகில் அமர்ந்திருக்க ஆட்சி நடத்தினுனும்.

அரசி காதரைனுக்குத் துருக்கி நாட்டு மன்னன்

அளித்த குதிரை, அதன் அணிகள் (தங்கத்தால் செய்யப்பட்டவை) முதலியவற்றைக் காட்சியிலே கண்டோம்.

இங்கிலாந்து நாட்டின் பேரரசி எலிசபெத் அன்பளிப்பாக அளித்த அழகு மிகுந்த தேரைக் கண்டோம்.

ஒரு மூலையில் போர்க் கருவிகள் குவிந்து கிடந்தன. அவற்றில் பழைய வாட்களும் முனை மழுங்கி ஒளி இழந்த நிலையில் சில இருந்தன.

மொழிபெயர்ப்பாளர் திருமதி லூசி அந்த வாட்களைப் பற்றிய வரலாறுகளை எடுத்துச் சொன்னார். ''1801ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தான், முதலாம் அலெக்சாண்டர் மன்னன். அதற்கடுத்த ஆண்டிலேயே ருஷிய நாட்டின்மீது படை எடுத்த நெப்போலியனைத் தோல்வி காணச் செய்து புறமுதுகிட்டு ஓடச் செய்தான். அப்பெரும் போரில் பயன் பட்ட வீரவாட்கள் இவைகள்தாம்'' என்றுகூறக் கேட்ட எனக்குப் புறநானூற்றின் ஒரு காட்சியில் முனை மழுங்கிய வாளின் வரலாறு நினைவுக்கு வந்தது.

குறுநில மன்னனான அதியமான் நானிலம் போற்ற வெற்றி பல கண்டு வீறுடன் ஆண்ட மன்னர்களிலே ஒருவன். தமிழ்போற்ற என்றும் தயங்கா அம்மன்னன், தமிழ் மூதாட்டியாம் ஔவையின் அன்பைப் பெற்றவர்களிலே ஒருவன். கவிஞராக விளங்கித் தமிழ் வளர்த்த ஔவை மூதாட்டி, சிறந்த தூதுவராகவும் விளங்கினார்.

காஞ்சித் தொண்டைமான் என்னும் மன்னன் போர்க் குணம் கொண்டு குறுநில மன்னனான அதியமான் நெடுமான் அஞ்சி மீது போர் தொடுக்கத் தீய எண்ணங் கொண்டிருந்தான்.

இச்செய்தி அறிந்த ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றார். தமிழ் போற்றும் வகையில் கவிஞர்களைச் சிறப்பிக்கும் பண்பு அன்றைய நாளில் எல்லாத் தமிழ் மன்னர்களிடமும் இருந்து வந்தது. தூது வந்த ஔவையைத் தொண்டைமான் அன்புடன் வரவேற்றான்; விருந்தளித்தான்; தானும் உடன் உண்டான். தன் போர்க் கருவிக் கூடத்திற்கு அழைத்துச் சென்று ஒழுங்குபடுத்திச் சீராக

வைக்கப்பட்டிருந்த போர்க் கருவிகளைக் காட்டினன். அங்கு வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்றை எடுத்து அதன் கூர்மையைச் சுட்டிக் காட்டி, அவ்வாள் ஒளி உமிழ்ந்து கொண்டிருப்பதை எடுத்துக் கூறி போருக்குத் தான் ஆயத்த மாக இருப்பதை வெளிப்படுத்தினன். அதனைப் புரிந்து கொண்ட ஔவை மூதாட்டி:

''போர் முகத்தைக் காணுத இப்போர்க் கருவிகள் இங்கே பீலி அணிந்து, மாலைசூடி, நெய் பூசப்பட்டு அழகுபட விளங்கி ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனல், உண்டானல் உணவளித்தும், உள்ளதைப் பகிர்ந்தளித்தும் மகிழும் அதியமான் நெடுமான் அஞ்சியின் போர்க் கருவிக் கூடத்திற்குச் சென்றேன். ஆங்கே கூர்மையுள்ள வாட்களை நான் காணவில்லை. இன்னபிறபோர்க் கருவிகள் உடைந்தும் சிதைந்தும் கிடந்தன. வேலும் வாளும் பகைவரைக் குத்திய தாலும் வெட்டியதாலும் நுனி முறிந்தும் முனை மழுங்கியும் இருக்கின்றன. அனைத்தையும் கொல்லன் உலைக்களத்திலேதான் நான் கண்டேன்'' என்று கூறினர்.

ஔவை கூறியதைக் கேட்ட தொண்டைமான் தன் செயலுக்கு வெட்கி, நாணித் தலைகுனிந்து மூதாட்டியிடம் மன்னிப்புக் கேட்டான். ''இனிப் போர்த் தொடுக்க மாட்டேன். அமைதியை மேற்கொள்வேன்'' என்று அதியமான் கூறுகிறுன். தாம் முனைந்த செயலில் வெற்றி கண்ட ஔவையார் அதியமான் மன்னனின் திருந்திய நிலையை எண்ணி வியந்து பாராட்டி விடை பெறுகிறுர்.

''இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
கடியுடை வியன நகரவ்வே; அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்

இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே''.

என்ற பாடலை திருமதி லூசி அவர்களிடம் எடுத்துக் கூறிப் பண்டைய தமிழகத்தில் அரசர்களுக்குள் ஏற்பட விருந்த போரைத் தடுத்து அமைதி உண்டாக்கிய வரலாற்றை எடுத்துச் சொன்னேன். இன்றைய உலகில் ''சமாதானம்'' என்று ஒரு புறத்தில் பேசப் படுவதும் மறுபுறத்தில் போர் நடந்து கொண்டிருப்பதுமான விசித்திர நிலை நிலவுவதையும் சுட்டிக்காட்டி பண்டைய தமிழகத்தின் வரலாற்றை உலகம் அறிய வேண்டும் என்றும் கூறினேன். இதைக் கேட்ட திருமதி லூசி ''உங்கள் தமிழகத்திலும் ''அமைதி'' ஏற்படுத்தப் பெண்தானே முயன்று வெற்றி கண்டார். அதை எண்ணும்போது ''பெண்ணின் பெருமை''யை இவ்வுலகம் மேலும் உணர வேண்டும் என்று கருதுகிறேன்'' என்றார்.

''எங்கள் நாடு அதை உணர்ந்து பெண்ணினத்தைப் பெருமைப்படுத்துவதில் உலகில் முன்னணியில் இருக்கிறது'' என்று பெருமிதத்தோடு கூறினார். போர்க் கருவிக் கூடத்தைப் பார்த்து முடித்து வெளியே வந்தோம். நேரத்தைப் பார்த்தோம். பகல் உணவை நினைவு படுத்திற்று, விடுதி திரும்பினோம்.

காலையில் சிற்றுண்டி முடிந்ததும் மாஸ்கோ வானொலி ஒலி பரப்பாளர் திரு. மணிவர்மன் அவர்களின் வருகைக் காகக் காத்திருந்தோம். சரியாக ஒன்பதரை மணிக்கு வருவ தாக முந்திய நாளே தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தார். ஆனால் எதிர்பாராத விதமாகத் தோழர் பொலியகோவ் எங்களை உடனே புறப்படும்படிக் கேட்டுக் கொண்டார். அப்போது மணி ஒன்பது அடித்து இருபது நிமிடங்கள் ஆயின.

'சிறிது நேரம் பொறுத்துப் போகலாம்' என்று தோழர் பொலியகோவிடம் கூறினோம். பார்க்கவேண்டிய இடத்தில் சரியாக ஒன்பது மணிக்கு இருந்தால்தான் பார்க்க வேண்டியதைப் பார்க்க முடியும் என்று கூறவே திரு. மணிவர்மன் அவர்களைக் காணமுடியாமலே புறப்பட்டு

விட்டோம். விடுதியிலிருந்து நாங்கள் ஏறிச் சென்ற கார்கள் செஞ்சதுக்கத்தை அடைந்தன. மாஸ்கோ மாநகர் சோவியத் நாட்டிற்குக் கோபுரமாக விளங்குவதுபோல், கிரம்ளின் மாளிகை கோபுரக் கலசமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே மாஸ்கோவிற்குச் செல்லும் எவரும் கிரம்ளின் மாளிகையைக் காணத் தவறுவதில்லை.

கிரம்ளின் மாளிகையிலே!

மாஸ்குவா ஆற்றங் கரையின் இடது பக்கத்தில் இருக்கும் கிரம்ளின் மாளிகை மாஸ்கோ மாநகரின் பழைய பகுதிகளிலே ஒன்ருகும்.

செஞ்சதுக்கத்தில் பதினைந்து, பதினுருவது நூற்ருண்டுகளில் கட்டப்பட்ட கட்டடக் கலையழகு முழுதும்கொண்ட கிறிஸ்தவக் கோயில்கள் ஒரு புறத்திலும் இவான் மணிக் கூண்டு மறுபுறத்திலும் இருக்கின்றன. வேருெரு பக்கத்தில் அரண்மனைகளையும் கண்டோம்.

மிகப் பழைய கோவிலின் தங்கத் தகடுகள் வேய்ந்த கோபுரத்தில் சோவியத் ஒன்றியத்தின் செங்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது.

கிரம்ளின் மாளிகையின் ஐந்து கூண்டுகளில் விளங்குகின்ற நட்சத்திரங்கள் இரவு வேளையில் பார்க்கின்ற போது ஒளிவிட்டு மிளிர்கின்றன.

மாளிகையிலே உள்ள கூண்டுகளின் அளவுக்குத் தகுந்த வகையில் நட்சத்திங்கள் ஏறக்குறைய ஒரு டன் எடைக்கு மேல் உள்ளன. என்ருலும் காற்றடிக்கும்போது சுற்றுவதைப் பார்த்தால் வியப்பாகவும் விநோதமாகவும் விளங்குகின்றன. துருப்பிடிக்காத (ஸ்டெயின்லெஸ்) தகடுகளால் செய்யப்பட்டவை என்ருலும் அதற்குமேல் கண்ணுடியால் மறைக்கப்பட்டிருக்கிறது. அதில் பகலில் சிவப்பு நிறமும், பால் வெண்மையும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. நட்சத்திங்களிலே பொருத்தப்பட்டிருக்கின்ற மின்விளக்குகள் 3700 முதல் 5000 வாட்ஸ்வரை மின்சக்தி உடையவையாக இருக்கின்ற காரணத்தால் இரவுவேளைகளில் வானத்திலே

வெண்ணிலவோடு போட்டி போட்டுக் கொண்டு ஒளி வீசுகின்றன.

இரஷ்ய கால வரலாற்றின் பின்னணியைக் கொண்டு விளங்குகின்ற—பாதுகாக்கப்பட வேண்டிய கலை அழகோடு விளங்கும் கட்டடங்களையும், நினைவுச் சின்னங்களையும், அங்கே காண்பதிலே மகிழ்ச்சி பெற்றோம். மக்கள் கூடுகின்ற அரண்மனைகளும் போல்ஷாய் நாடகக் குழுவின் கம்பெனியும் இருக்கின்றன.

மாஸ்குவா ஆற்றை எதிர்நோக்கி விளங்கிக் கொண்டிருக்கும் கிரம்ளின் மாளிகையின் ஒரு பக்கச் சுவரை 19 கூண்டுகள் அழகுபடுத்திக் கொண்டிருந்தன. அந்தச் சுவரைத் தொடர்ந்து பெரும் கட்டடங்கள் பல காட்சி யளிக்கின்றன. ஸ்பாஸ்கயா கூண்டிற்கும் நிகோல்ஸ்கயா கூண்டிற்கும் இடையிலேதான் சோவியத் ஒன்றியத்தின் உயர்மட்ட ஆளும் குழு இருக்கும் கட்டடமும், அமைச்சர் களின் அலுவலகங்களைக் கொண்ட வேறொரு கட்டடமும் இருக்கின்றன.

கிரம்ளின் மாளிகைக் கட்டட வேலை 1839ம் ஆண்டில் துவங்கி, முழுதும் கட்டி முடிக்கப் பத்தாண்டுகள் ஆயினவாம்.

பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பேசட்ஸ் பெருங்கூடத்தை மூவாயிரம் பேர் உட்காருவதற்கு ஏற்ற வகையில் அமைத்திருக்கிறார்கள்.

இன்று கிரம்ளின் மாளிகையின் கிழக்குப் பகுதியில் நீண்ட சதுரத்தில் செஞ்சதுக்கம் இருப்பதைக் கண்டோம். தொழிலாளர் போராட்டம் முதலாளித்துவ நாட்டிலேயே முதலிலே நடைபெற்றாலும், அந்தப் போராட்ட நாளைச் சிறப்பாகக் கொண்டாடுகின்ற இடமாகச் செஞ்சதுக்கம் விளங்கிக் கொண்டு இருக்கிறது.

நாங்களும் காட்சிப் பொருளானோம்!

மாஸ்கோவில் தங்கியிருந்த பெரும்பாலான நாட்களில் நாங்கள் வேட்டியும், சட்டையும் தான் அணிந்திருந்தோம்.

கிரம்ளின் மாளிகைக்குச் சென்றபோதும் அதே உடையில் சென்ற காரணத்தால், மற்ற வெளிநாட்டுக்காரர்கள் எங்களை உற்று உற்றுப் பார்ப்பதிலேயே தங்களுடைய நேரத்தைச் செலவழித்து விட்டார்களென்று சொல்லலாம்.

ஏனெனில், அங்கு வந்த பெரும்பாலோர் கிரம்ளின் மாளிகையைப் புகைப்படம் எடுத்து முடித்ததும், தொடர்ந்து நூற்றுக்கணக்கில் எங்களையும் புகைப்படம் எடுத்தார்கள்.

எங்கள் குழுவின் தலைவர் மேயர் சம்பந்தம் அவர்கள் எங்கள் அறுவரை நிற்க வைத்துச் செஞ்சதுக்கத்தில் பல இடங்களில் புகைப்படம் எடுக்க ஆரம்பித்தார். எங்களைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான வெண்புறுக்கள் தரையிலே தத்தி நடந்து கொண்டும் மேலே பறந்து கொண்டும் இருந்தன.

மண்ணிலே மறைந்த மாவீரர்

லெனின் உயிரற்ற உடல் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குப் பின்னால் இடது பக்கத்தில் மறைந்த சோவியத் அரசுத் தலைவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் புதைக்கப்பட்ட இடம் உள்ளது. அந்த இடத்திலே மறைந்த தலைவர்களின் பெயரும் வரலாறும் பொறிக்கப்பட்ட சலவைக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்கவர்களின் கல்லறைகள் மீது அவர்களுடைய மார்பளவுச் சிலைகள் இருக்கின்றன. கிரம்ளின் மாளிகையின் சுவரில், மறைந்த மாவீரர்களின் சாம்பல் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. புரட்சி எழுத்தாளன் மார்க்சிம் கார்க்கி போன்ற உலகறிந்த மேதைகள் சிலர் புதைக்கப்பட்ட இடத்தையும் கண்டோம்.

கிரம்ளின் சுவரின் அடியில் 1917ம் ஆண்டில் நடந்த புரட்சியில் பங்கு கொண்டு உயிரிழந்த தோழர்கள் புதைக்கப்பட்ட இடத்தையும் காட்டினார்கள். புரட்சி வீரர்களின் தியாகத்தை எண்ணியபோது உடல் சிலிர்த்தது. அந்தத் தியாகிகட்கு வீரவணக்கம் செலுத்தினோம்!



கிரம்ளின் மாளிகையில் லெனின் உடல் வைக்கப்பட்டிருக்கும் இடம் நோக்கி மக்கள் வரிசை

லெனின் உடலைக் கண்டோம்!

இவைகளையெல்லாம் பார்த்த பின்னுல் லெனின் உடல் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அடைந்தோம்.

தொழிலாளர் அரசை நிறுவத் தொல்லைகளையும், துயரங்களையும் ஏற்றுப் பெரும் புரட்சி நடத்தி ஜார் மன்னனின் கொடுங்கோன்மைக்குச் சாவு மணி அடித்த மாவீரர் லெனின் மறைந்து விட்டார். எனினும் அவரை மக்கள் என்றும் கண்டுகளிக்கும் வகையில் அவருடைய உடலைப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கிறுர்கள். அவ்விதம் வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்கு ''லெனின் மசோலியம்'' என்று பெயரிட்டிருக்கிறுர்கள்.

ஆண்டவன் நம்பிக்கையற்றுப் பகுத்தறிவு வாதிகளாக விளங்கும் சோவியத் நாட்டு மக்களும் மற்ற சில நாட்டு மக்களும், மறைந்த லெனினின் உடலைக் காண்பதிலே காட்டும் ஆர்வம் அளவிடற்கரியதாகும்.

நாள்தோறும் அவ்விடத்திற்கு மக்கள் ஆயிரக்கணக்கில் வருவதும், மணிக்கணக்கில் வரிசையாக மாலையும் கையுமாக நின்று கொண்டு மரியாதை செலுத்துவதும் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும்.

நாங்கள் சென்ற அன்றும் ஆயிரக்கணக்கில் மக்கள் வரிசையில் நின்றிருந்தார்கள். அந்த வரிசையில் நாங்களும் நின்று பார்க்கவேண்டுமானுல் குறைந்தது நான்கு மணி நேரமாவது ஆகும் என்று கூறினுர்கள். ஆனுலும் வெளி நாட்டவர் என்ருலே இயற்கையாக அன்புகாட்டும் அவர்கள் எங்களுக்கு முன்னே வழி விட்டார்கள். மசோலியத்தின் வாயிலருகில் நின்றிருந்தவர்கள் விலகிக் கொண்டதும் வரிசையில் நாங்களும் சேர்ந்து உள்ளே சென்ருேம்.

வாயிற் காப்போர் இருவர் துப்பாக்கி ஏந்திய வண்ணம் கற்சிலைபோல் நின்கிறனர். பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு முறை, முறைபோட்டுக் கொண்டு இரு இரு போர்வீரர்கள் மாறிக் கொண்டேயிருக்கிறுர்கள்.

முந்நூறு அடி தொலைவிலிருந்து அந்த வீரர்கள்

துப்பாக்கி ஏந்தி வீரநடைபோட்டு வருகின்ற காட்சி காணத்தகுந்தது!

எங்களுக்கு திருமதி லூசி அம்மையார் மசோலியத்தைப் பற்றிய முழு வரலாற்றையும் கூறத் தொடங்கினர்:

''உலகத் தலைவராக விளங்கிய சோவியத் நாட்டின் பெருந்தலைவர் தோழர் லெனின் 1924ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் இயற்கை எய்தினர்.

எங்களுடைய நாட்டுமக்களுக்கு மறுவாழ்வு அளித்து உலகத்திற்கு வழிகாட்டியாக விளங்கிய தோழர் லெனின் அவர்கள் மறைந்து விட்டாலும், எங்களால் அவரை மறக்க முடியவில்லை. எங்கள் கண்களிலிருந்து அவரைப் பிரித்துவிட முடியாது.

அவர் உடலைப் பாதுகாப்பாக வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதன் மூலமாக எங்கள் உள்ளம் நிறைவான மகிழ்வு பெறுகிறது. அதுமட்டுமின்றி அவர் எங்களுக்கு அளித்து விட்டுச் சென்ற கொள்கைகளைக் கடைபிடிக்கவும், நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில் நழுவி விடாதிருக்கவும், அவர் உடலைப் பார்த்துக் கொண்டு செயலாற்றுகிறோம். அதனால் அவர் நேரிடையாக நின்று துணைபுரிவது போன்ற உணர்வைப் பெறுகிறோம். அதுமட்டுமின்றிச் சோவியத் நாட்டை வளங்கொழிக்கும் பூமியாக்கி வைத்த மாவீரரின் உடலையாகிலும் பார்க்கின்ற வாய்ப்பு எதிர்காலச் சந்ததிக்கு இருக்கட்டும் என்று எண்ணி, அவர் உடலைப் பாதுகாத்து வருகிறோம்.

உலகத்தின் எந்தத் தலைவருக்கும் அளிக்காத பெருஞ் சிறப்பை லெனினுக்குச் செய்வதிலே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அவ்வுடலைக் காண்பதன் மூலமாக அவரை நினைத்தவாறு நாங்கள் செயலாற்ற விழைகிறோம். அதன் காரணமாக அவர் இயற்கையெய்திய அன்றே கட்டட வல்லுநர் தோழர் ஏ. வி. ஷிசுசேவ் அவர்களைக் கொண்டு மூன்று நாட்களில்

மரத்தால் தற்காலிகமாக மசோலியத்தைச் சோவியத் அரசு முடிக்கச் செய்தது. அதில் வைத்து லெனின் உடலைப் பாதுகாக்க முனைந்தோம். பல திங்கள் ஆன பின்னுல் அந்த ஆண்டுக் கோடைக் காலத்திலேயே புதியதாக மரத்தினுலேயே வேருெரு மசோலியம் கட்டி முடிக்கப்பட்டது.

பின்னர் 1930ஆம் ஆண்டில் மரத்தால் செய்யப் பட்ட மசோலியத்தை எடுத்துவிட்டு, கண்ணைக் கவரும் வண்ணக் கற்களைக் கொண்டு எளிமையான தோற்றத்தில், ஆனுல் சிறிய அளவில் உறுதியாக இருக்கும் வகையில் மசோலியத்தைக் கட்டி முடித்தோம். அதைத்தான் இன்றைய தினம் நீங்கள் காணுகிறீர்கள். இங்கேதான் லெனின் உடலைப் பாது காப்பாக வைத்திருக்கிருேம்!''

இவ்வாறு திருமதி லூசி அவர்கள் கூறிக் கொண் டிருக்கும்போது மசோலியத்தின் உள்ளே சென்று விட்டோம். உள்ளே சென்றதும் முழு அமைதி நிலவக் கண்டோம். ஒளிவிளக்கில் லெனினின் உடல் கண்ணுடிப் பெட்டியில் இருப்பதைக் கண்டோம். பெட்டியைச் சுற்றிலும் வீரர்கள் துப்பாக்கியுடன் பாதுகாப்புக்காகவும் மரியாதைக்காகவும் தங்களுக்கே உரித்தான வகையில் நின்றிருக்கும் காட்சி உள்ளத்தைத் தொட்டது.

மாவீரர் லெனின் போர் உடை அணிந்தவாறு படுத்த நிலையில் இருந்ததைப் பார்த்தோம். லெனின் முகத்தில் ஒளி படர்ந்திருந்தது; உயிரோடு உறங்கும் நிலையில் எப்படி இருந்திருப்பாரோ அதே நிலையில் இருக்கக் கண்டோம். உடல் புல்லரித்தது; உள்ளம் நெகிழ்ந்தோம்; உயிரோடு லெனினைப் பார்த்ததாகவே உணர்ந்து மகிழ்ந்தோம்.

ஸ்டாலின் உடல் எங்கே?

''லெனினுக்கு உற்ற துணைவராக விளங்கிய ஸ்டாலினினுடைய உடல் லெனினுக்குப் பக்கத்திலே வைக்கப்பட்டிருந்தது என்று கூறினுர்களே—அது எங்கே?''

என்று எங்களில் ஒருவர் திருமதி ஹூசி அவர்களைக் கேட்டதற்கு அவர் பதில் கூறாமல் சிறிது நேரம் மௌனம் சாதித்துவிட்டு, ''இங்கே பார்த்தீர்களா! இதுதான் வான வெளிவீரர் தோழர் கோமரோவ் அவர்கள் மறைந்த இடம்'' என்று சுட்டிக் காட்டினர். ''ஸ்டாலின் நினைவாவது மக்களுக்கு நீங்காதிருக்க என்ன செய்திருக்கிறீர்கள்?'' என்று எங்களில் மற்றொருவர் கேட்டதற்கு, ஸ்டாலினைப் புதைத்த இடம் காட்டப்பட்டது.

புல், பூண்டு, செடி, கொடிகள் வளர்ந்த இடத்தில் ஸ்டாலின் பெயர் பொறித்த சலவைக்கல் நிற்பதைக் கண்டோம்.

வேளாண்மைக் கண்காட்சியில்

சோவியத் நாடு புரட்சிக்குப் பின்னல் அடைந்த முன்னேற்றத்தை நாட்டு மக்களும், உலகமும் அறிந்து கொள்வதற்காக நிரந்தர வேளாண்மைத் தொழிற் கண்காட்சியை மாஸ்கோ நகரில் நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதைக் காணவேண்டிப் புறப்பட்டோம். ஐந்நூறு ஏக்கர் நிலப்பரப்பளவில் இக்கண்காட்சியைச் சோவியத் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. கண்காட்சியின் முகப்பில் உழைப்பின் உயர்வைக் குறிக்க ஒரு தொழிலாளி, சுத்தியை ஒரு கையில் பிடித்துக் கொண்டும், ஒரு வேளாண்மைத் தொழிலாளி ஒரு கையில் அரிவாளுடன் மறு கையை உயர்த்தியும் காட்சியளிக்கும் சிலைகளைக் கண்டு உள்ளே சென்றோம்.

பதினறு குடியரசுகளின் தனித்தனி முன்னேற்றங்களைக் காண்பிக்கப் பெருங்கூடங்களைப் பெருஞ் செலவில் கட்டி யிருக்கிறார்கள். குறிப்பாக, விவசாயம், கூட்டுப்பண்ணையின் மூலமாக எந்த அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைக் காண்பிக்கும் புள்ளி விவர அட்டவணையை வைத்திருக்கிறார்கள். வேளாண்மைக்குத் தேவையான ஏர் உழும் இயந்திரம், விதை விதைக்கும் இயந்திரம் தண்ணீர் இறைக்கும் இயந்திரம், அறுவடை செய்து போர் அடிக்கும்

இயந்திரம் என்று வேளாண்மைக்குத் தேவையான இன்ன பிறஇயந்திரங்களையும் கண்டோம். குறிப்பாக ஜார்ஜியா, அர்மேனியா, அசர்பெய்ஜன், உக்ரெய்ன், உஸ்பெக்கிஸ் தான், கஜகஸ்தான், இடாஜ்கிஸ்தான், ருஷியா, இன்னபிற குடியரசு நாடுகள் முதலியவற்றின் கண்காட்சிகளைப் பார்த்தோம்.

தொழில்துறை, முதலாளித்துவ நாடுகளோடு போட்டி போட்டுக் கொண்டு விரைந்து வளர்ந்து வருகிறது. கண் காட்சியின் மையத்தில் நெற்கதிர்த் தோற்றத்தில் சிறு சிறு மின் விளக்குகள் கண்ணைக் கவர்ந்து கொண்டிருந்தன. கண்காட்சி முழுவதும் காணவேண்டுமெனின், நாட்கணக்கில் ஆகுமென்றும் கண்காட்சியின் செம்மண் பாதையில் ஓடும் பேருந்தில் சில கோபக் நாணயம் கொடுத்துப் பயணம் செய்தால் முழுதும் பார்க்கலாம் என்றும் எங்களுடன் வந்த திருமதி லூசி கூறினர். ஆனல் நாங்கள் நடந்தே சென்று பார்க்க விரும்புவதாகக் கூறி நடந்தே சென்ருேம். சிலவற்றையே பார்க்க முடிந்தது.

ருஷியக் குடியரசின் கண்காட்சிக்குச் சென்றபோது ஆங்காங்கே ஆப்பிள் பழங்கள் குலுங்கி நிற்கும் மரங்களைப் பார்த்தோம். பழங்களைப் பறித்துத் தின்ன எண்ணம் வந்தது. ஆனாலும் பறிப்பது நாகரிகமாகாதே என்பதற் காக, நாக்கில் நீர்சொட்ட மேலும் மேலும் நடந்தோம். செக்கச் சிவந்த தக்காளிப் பழங்களைத் தாங்கிய செடிகளை கண்டு மேலே சென்ருேம். பச்சையும் வெண்மையும் கலந்த 'கேபேஜ்' காய்கறிச் செடிகளைக் கண்டோம். படிக்கணக்கில் பால் கறக்கும் பசுமாடுகளும், கொழுத்த செம்மறி ஆடுகளும் கண்களுக்கு விருந்தளித்தன.

அந்தக் கண்காட்சியில் சோவியத் நாட்டின் ஐரோப்பியப்பகுதி, தொழில்கள் நிறைந்து காணப்படுவதும், ஆசியப் பகுதியில் சோவியத் நாட்டின் மற்றப் பகுதிகள் தொழில் பின் தங்கியிருப்பதும், வேளாண்மை மட்டும் மிகுதியாகக் காணப்படுவதும் அறிந்தோம். இந்தப் பகுதியிலேயும் தொழில்கள் வளம்பெற வேண்டியதற்கான

திட்டங்களைத் தீட்டிச் செயல்முறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பனிப்பாறையில் கப்பல் போக்குவரத்து

அறிவியல் வளர்ச்சி பற்றிய கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அணுசக்தியை வேளாண்மை முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தி வருவதை அறிய முடிந்தது. மேலும், போரில் மனித சக்தியைப் பயன்படுத்தாமல், பனி உறைந்த பகுதியாகிய பால்டிக் நிலத்தில் கப்பல் போக்குவரவு உண்டாக்கவும், பனிக்கட்டியை வெட்டிப் பாதை உண்டாக்கவும் அணுசக்தியைப் பயன்படுத்தும் முயற்சி பாராட்டுதற்குரியதாகும். எல்லாக் குடியரசு நாடுகளையும் மேம்படுத்துவதற்கான திட்டம் தீட்டிச் செயல்படும் சோவியத் அரசைப் பார்த்த எங்களுக்கு இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டம் மூலம் தொழில் துறையில் பின் தங்கியுள்ள தமிழகம் முன்னேற்றம் அடைய வேண்டியதைப் பற்றி எண்ணினோம்.

வீட்டுத் தேவைப் பொருள்களிலிருந்து விமானம் செய்யும் தொழிற்சாலை வரை அங்குப் பார்த்தோம். வியப்பு முகத்தில் தவழக் கண்காட்சியை விட்டு வெளிவந்தோம்.

படகு மிதக்கும் குளமும் மலர்ப் படுக்கைப் பரப்பும்

''மனோரமா'' (சர்க்கராமா) காண வாய்ப்புக் கிடைத்தது. படம் காட்டப்படும் திரையரங்கு, வட்ட வடிவில் அமைக்கப்பட்டு இருக்கிறது. படம் பார்ப்போர் அரங்கின்மையத்தில் நின்று கொண்டு எல்லாப் பக்கத்திலும் சுற்றி அமைக்கப்பட்டுள்ள திரையில் ஓடுகின்ற நிழற் படத்தைப் பார்த்தோம். பதினைந்து நிமிடங்கள் படம் ஓடிக் கொண்டிருந்தது. நண்பர் விஜயகமூர்த்தி அவர்கள், இதுபோன்ற சர்க்கராமாவை அமெரிக்கா நாட்டில் தாம் பார்த்தது நினைவுக்கு வருவதாகக் கூறினார். திரைப்படம்

நாட்டு முன்னேற்றம் பற்றியதாக இருந்தது. மார்க்சிம் கார்க்கி பெயரால் அமைந்துள்ள பொழுதுபோக்குப் பண்பாட்டு மையப்பூங்காவிற்கு வந்தோம். அங்கே உலகமே ஒருங்கு திரண்டது போன்று காட்சியளித்தது. ஒரு பக்கத்தில் பொது நூலகமும், மறுபக்கத்தில் திரையரங்கும் வேருெரு பக்கத்தில் செஸ் விளையாடுமிடமும் இன்னொரு மூலையில் சிற்றுண்டி விடுதியும் தங்கி ஒய்வு எடுக்கும் அறையும் கண்டோம். அழகான குளமும், நீண்ட பசும் புற்றரையும், பூக்கள் உதிர்ந்து படுக்கை போன்று பரந்து விரிந்து கிடந்த காட்சியும், எழில் மிகுந்த சிலைகளும் படகு மிதந்து செல்லும் குளமும் கண்டு களித்தோம்.

பேரறிஞர் டால்ஸ்டாய் இல்லத்தில்

மாஸ்கோ மாநகரில் காணவேண்டிய இடங்களில் ஒன்று பேரறிஞர் லியோ டால்ஸ்டாய் வாழ்ந்த வீடாகும். பத்தொன்பதாவது நூற்ருண்டில் கட்டப்பட்ட அவ்வீடு ஐந்து ஏக்கர் நிலப்பரப்பளவுள்ள பூங்காவின் மையத்தில் இருக்கிறது. அவருடைய மூதாதையர் வாழ்ந்த இயாஸ்நயா போலியாஞ கிராமத்தில் கட்டப்பட்ட எளிமையான வீட்டைப் போல் இருக்கிறது. டால்ஸ்டாய் அணிந்திருந்த நீண்ட சட்டையும் தாமே செய்தணிந்து கொண்ட காலணியும் அங்கே காட்சிப் பொருள்களாக விளங்குகின்றன. அவர் பயன்படுத்திய மேசையும் தாழ்ந்திருக்கும் நாற்காலியும், அவர் வாழ்ந்த வாழ்க்கையை நினைவுபடுத்து கின்றன. திருமதி லூசி, ''டால்ஸ்டாயைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அவர் எழுதிய நூல்களைப் படித்திருக்கிறீர்களா?'' என்று எங்களைக் கேட்டார். ஊரும் உலகமும் அறிந்த பெரும் பேராசிரியரும் இலக்கிய வேந்தரு மான லியோ டால்ஸ்டாயைப் பற்றி நாங்கள் நன்ருக அறிவோம் என்று கூறினேம். திருமதி லூசி டால்ஸ்டாயைப் பற்றி மேலும் விளக்கினுர்:

1828ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் தென் ருஷ்யாவில் பிறந்து வளர்ந்து பதினன்காவது வயதில்

''விவிலிய நூல்'' ''புஷ்கின் கவிதைகள்'' ''அராபியக் கதைகள்'' ஆகிய எல்லாம் படித்து முடித்தார். மாஸ்கோ பள்ளியில் படித்த பின்னர் காசான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பன்மொழிகளைப் பயின்றார். பீட்டர்ஸ்பர்க் சட்டக் கல்லூரியில் படித்து அதற்குப் பிறகு காகஸஸ் பிராந்திய சேனையில் சேர்ந்தார். ''குழந்தைப் பருவம்'' என்ற முதல் நூலை எழுதி முடித்துப் பெரும் நூலாசிரியர் துர்கனீவ், ஜார் மன்னர் ஆகியோரின் பாராட்டுதலைப் பெற்றார்.

சிறு வயதிலிருந்தே கிறித்தவ மதத்தில் பற்றுக் கொண்டிருந்த டால்ஸ்டாயால் அதிக நாட்களாகப் போர் முனையில் இருக்க முடியவில்லை. ''விரோதியை விரும்பு'' ''ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு'' ''உன்னால் உண்டாக்கப்படாத உயிரை அழிக்காதே'' என்ற தத்துவங்களை ஏற்றுக் கொண்ட டால்ஸ்டாயால் இராணுவத்தில் இருக்க முடியாமல் வெளியேறிய பின்னர் உலகம் வியந்து பாராட்டும் நூலான ''போரும் அமைதியும்'' என்ற நூலை எழுதி முடித்தார்.

ருஷிய இலக்கியத்தின் சிறப்பே காதலை மையமாகக் கொண்டு விளங்குவதாகும். அந்தக் குறையை நீக்கும் பொருட்டு ''அன்னா கரினா'' என்ற காவியத்தைத் தீட்டினார். விவிலிய நூலை ஆழ்ந்து படித்த காரணத்தால்தான் ''என் மதம்'' என்ற நூலை எழுதத் தொடங்கினார். அடுத்து, மதத் துறையிலே தம்மைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்ட டால்ஸ்டாய் 'மறுபிறப்பு', 'இவான் இலியச்', 'க்ரூஸர்ஸனேடா' ஆகிய மூன்று நூல்களை எழுதி வெளியிட்டார்.

டால்ஸ்டாயின் மனைவி எழுதிய கடிதம்

உலக இலக்கிய சாம்ராஜ்யத்தில் அவரோடு ஒப்பிடத்தக்க அளவுக்கு அவருடைய கடைசி இருபதாண்டுகளில் யாரும் வாழவில்லை. டால்ஸ்டா

யின் நூல் எதுவாயினும் உலகத்தில் அதிகமாக விற்கும் புத்தகங்களில் ஒன்ருக விளங்கி வருவதாகக் கூறிய திருமதி லூசி, ஏறக்குறைய உலகத்திலுள்ள நாற்பத்தைந்து மொழிகளில் அவருடைய நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன என்றும் எடுத்துச் சொன்னர்.

லியோ டால்ஸ்டாய் தமது எண்பதாவது வயதில் கிறித்தவ மதக் கொள்கையில் ஈடுபட்டு நினைப்பையும் நேரத்தையும் போக்கியதை அவருடைய துணைவியார் கண்டு வருந்தி, அவருடைய கணவருக்கு எழுதிய கடிதமாவது: ''நேற்று உங்கள் கடிதம் கிடைத்தது. படித்தவுடன் மிகவும் வருத்தமுற்றேன். காரணம், தாங்கள் கிராமத்திலேயே தங்கி இலக்கியம் படைக்கப் போவதாக எண்ணினேன். ஆனல் தாங்கள் மதத் துறையில் ஈடுபட்டு நேரத்தை வீணக்கி விட்டீர்கள். அதுமட்டுமல்ல; உடனிருந்த சமையற்காரனையும் நீக்கி விட்டுத் தாங்களே உணவு சமைத்துக் கொள்வதும், வீட்டு வேலைகளைத் தாங்களே செய்து கொள்வதும் அறிந்தேன். மேலும் தாங்களே உங்களுடைய செருப்பு களையும் தைத்துக் கொள்வதாகவும் அறிந்தேன். உங்கள் தேவைகளை நீங்களே உற்பத்தி செய்து கொள்ளும் முறை உங்களுக்கு வேண்டுமானல் பிடித்திருக்கலாம். ஆனல் ஒன்றை நினைக்க என் வருத்தம் எல்லை மீறி வருகிறது. இவ்வளவு பெரிய மூளை இலக்கிய உலகிற்கு மேலும் பயன்படாமல் விறகு உடைப்பதிலும், சமைப்பதிலும், செருப்புத் தைப்பதிலும் வீணகிறதே என்பது தான்'' என்று அந்தக் கடிதத்தில் அவர் எழுதியிருந்தாராம்.

பேரங்காடியில் பொருள்கள் வாங்கினேம்.

அன்று ருஷிய மண்ணை விட்டுப் பிரிவதற்கு முந்திய நாள்; அதாவது ஜூலைத் திங்கள் மூன்ரும் நாளாகும். தோழர் பொலியகோவ் புகழ்மிக்க போலந்து நாட்டிற்கு நாங்கள்

செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். காலை எட்டு மணி இருக்கும். நாங்கள் தங்கி இருந்த விடுதிக்கு திருமதி லூசி அவர்களுடன் வந்து சேர்ந்தார்கள். சிற்றுண்டி முடிந்ததும் கடைத் தெருவிற்குப் புறப்பட்டோம். மாஸ்கோ நகரில் முதலில் சென்று இறங்கிய போது சிற்றுண்டி உண்ட மாபெரும் ''உக்ரைன்'' விடுதிக்கே வந்தோம். அந்த விடுதியில் இரண்டாவது மாடியில் உள்ள ''பிரியோஸ்கா'' கடையில் அவரவர் விழைகின்ற பொருள்களை வாங்க ஆரம்பித்தனர்.

எங்களில் சிலர் கடிகாரம் வாங்கும் நோக்கோடு பல வகையான கடியாரங்களை கடையில் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். எங்கள் அருகில் நின்றிருந்தவர் எங்களைப் பார்த்ததும் புன்கை தவழ்ந்தமுகத்தோடு, ''நீங்களெல்லாம் இந்தியர்களல்லவா?'' என்று கேட்டார்''ஆமாம் என்று ஆங்கிலத்தில் பதில் கூறிக் கொண்டே ''தாங்கள்... என்று ஆரம்பித்தவுடன் ''நானும் இந்தியன்தான். ஆனல் இன்று பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவன்; விமான ஓட்டி' என்று அவர் கூறினர். இதற்கிடையில் எங்களில் ஒருவர், ''தரமான கடிகாரந்தானு?'' என்று தம் கையில் எடுத்துப் பார்த்த கடிகாரத்தைக் காண்பித்துக் கேட்கலானுர். அந்த விமான ஓட்டி, வாரத்திற்கு ஒருமுறை தாம் மாஸ்கோ வருவதாகவும் இங்கு செய்யப்படுகின்ற கடிகாரம் உலகிலேயே தரமானது மட்டுமல்லாமல் விலையுங்கூடக் குறைவானது என்றும் சிறப்பித்துக் கூறினர். இந்தக் கருத்து எங்களுக்கு மேலும் ஊக்கம் ஊட்டுவதாக அமைந்தது. கைக்கடிகாரங்களும் ''டைம்பீஸ்'' கடிகாரங்களும் வாங்கி முடிந்ததும் நேராக பேரங்காடிக்குச் சென்ருேம். நான் கைந்து அடுக்குகள் கொண்ட மாளிகையில் எல்லா வகையான பொருள்களும் விற்பனையாகிக் கொண்டிருந்தன. அந்த அங்காடியைக் கண்டதும் சென்னை மவுண்ட்ரோடு தேனும்பேட்டைக்கு அருகிலுள்ள ''காமதேனு'' என் நினைவுக்கு வந்தது. எங்களில் சிலர் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொம்மைகளும், பிளாஸ்டிக் விமானம்

போன்ற பொருள்களும் வாங்கி முடித்தார்கள். உடன் நேராக விடுதிக்குத் திரும்பினோம்.

தமிழகத்து மாணவர்களுடன்

அன்று பகல் உணவிற்குப் புதிய விருந்தினர்கள் வருகை தந்திருந்தார்கள். அவர்கள் வேறு யாருமல்லர்; தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு மாஸ்கோ பல்கழகக் கழக மாணவர்களே ஆவார்கள். ஒருவர் பெயர் திரு. பெ. சுப்பையா; மற்றவரின் பெயர் திரு. பி. எஸ். சுப்பிரமணியம்; ஒருவா மருத்துவமும் மற்றவர் பொறியியலும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகின் வட துருவத்தில் உயிருக்கு நேரான இன்பத் தமிழோசையை அவர்கள் வாயிலாகக் கேட்டதில் மட்டிலா மகிழ்ச்சியில் யடைந்தோம்.

தாயகத்துத் தமிழர்களைக் காண்பதிலே அவர்கட்கும் இயற்கையாகப் பெருமகிழ்வு ஏற்படுமல்லவா? உணவுக்கு அழைத்தோம், வற்புறுத்தி; அவர்களும் இசைந்து உடன் அமர்ந்து உரையாடிக் கொண்டே உண்டனர். இடையிடையே தமிழகத்து நிலைமைகளைக் கேட்டு அறிந்து கொள்வதிலே அவர்கள் காட்டிய ஆர்வமும் சொல்லி முடியாது.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவத் தோழர் சோவியத் நாடு பற்றிப் பொதுவாகவும், மக்களின் பண்பு பற்றிச் சிறப்பாகவும், எடுத்துக் கூறினர். தமிழகத்தைச் சேர்ந்த பதினைந்து மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பயின்று வருவதாகவும், சிறப்பான கல்வியைப் பெற்று வருவதாகவும் கூறினர். முதல் ஓராண்டு இரஷிய மொழி பயின்று அதன் பின்னர் அம்மொழியிலேயே எடுத்துக் கொண்ட பாடங்களை படித்து வருவதாகச் சொன்ன அவர், விடுதியில் தங்கி உண்டு வாழ உதவித் தொகையும் சோவியத் நாட்டு அரசு அளித்து வருவதாகக் கூறினர். அங்கு பயிலும் மாணவர்கள் ஐந்து ஆண்டுகள் தங்கிப் படித்துப் பட்டம் பெற வேண்டியவர்கள் ஆவர்.

ஐஸ்கிரீம் விரும்பிகள்!

பகலுணவு முடிந்து சிறிது ஓய்வுக்குப் பின்னர் மாணவ நண்பர்களோடு கடை வீதியைச் சுற்றிப் பார்க்கச் சென்ருேம். பெரும்பாலான மக்கள் எல்லா வயதினரும் ''ஐஸ்கிரீம்'' சாப்பிடுவதைப் பார்த்தோம். இரஷிய மக்களுக்கு ''ஐஸ்கிரீம்'' மிகவும் பிடித்தமான ஒன்ருகுமென்றும் அதிகமாக உண்கிருர்கள் என்றும் கூற அறிந்தோம். உண்மையிலேயே அங்கு தயாரிக்கும் ஐஸ்கிரீம் சுவை மிக்கது என்பதில் ஐயமில்லே. நாங்கள் அங்கு தங்கியிருந்த நாட்களில் நாள் தவருமல் ஐஸ்கிரீம் உண்டோம் என்பதே அதற்குச் சான்ருகும். மாஸ்கோ நகரத்தில் மட்டும் ஒரு நாளேக்கு இருநூறு டன் ஐஸ்கிரீம் செலவு ஆவதாகக் கூறினர்கள். இந்தச் செய்தி எங்களுக்கு பெரும் வியப்பாக இருந்தது.

மாணவ நண்பர்களோடு விடுதிக்குத் திரும்பினேம். மாஸ்கோ மாநகராட்சி உறுப்பினர் ஒருவர் எங்களேக் காண வந்திருந்தார். அப்போது நகர வளர்ச்சி பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அவர் வைத்திருந்த ஒன்றைச் ''சுட்டிக் காட்டி அது என்ன?'' என்று கேட்க ''அடையாளச் சிட்டு'' என்று கூறினர். ''எதற்காக இதை வைத்துக் கொண்டிருக்கின்றீர்'' என்று கேட்க இதில்தான் மாஸ்கோ நகரின் சீரான வளர்ச்சியின் இரகசியம் அடங்கியிருக்கிறது என்று பதில் உரைத்தார். அதைப் பற்றிய விளக்கத்தை அறியும் பொருட்டு மேலும் பல வினக்களேத் தொடுத்தோம். பதில் சொல்லச் சளேக்காத அந்த நண்பர் அடையாளச் சிட்டின் அவசியத்தையும் அதில் அடங்கிக் கிடக்கும் இரகசியத்தையும் கூறலானுர். மாஸ்கோ நகரம் எழில்பெறப் ''பதினேந்தாண்டுத் திட்டம்'' ஒன்றை மாநகராட்சி வகுத்திருக்கிறதென்றும் அதன்படி மேற்கொண்டு நகர எல்லேக்குள் புதிய தொழிற்சாலேகளே அமைக்கக் கூடாது என்றும், வேறு நகரங்களிலிருந்தோ அல்லது கிராமங்களிலிருந்தோ மக்கள் வந்து குடியேறக் கூடாது என்றும் கண்டிப்பான சட்டத்தை நிறைவேற்றி இருக்கிருர்

கள் என்றும் நகருக்குப் புதிதாக வேலே தேடி வருகிறவருக்கு வேலே கிடைத்தவுடன் அவர்களுடைய பிரச்சினே தீர்ந்து விடுவதில்லே என்றும் மாருக வேலே அளிக்கும் தொழிற் கூடத்து பொறுப்பாளர்கள் வேலே அளிப்பதற்கு முன்ன தாகக் குடியிருக்க வீட்டு வசதி செய்து கொடுத்தால்தான் புதியவர்கள் நகரிலேயே வசிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கூறினர். இந்தச் செய்தியை அறிந்த எனக்கு மாஸ்கோ எப்படி எழிலாகவும் தூய்மையாகவும் இருக்க முடிகிறது என்பதற்கான காரணத்தை அறிய முடிந்தது. இதை எண்ணிப் பார்த்த நேரத்தில் தமிழகத்தின் தலேநகரம் என மனக் கண்முன் நின்றது.

சிங்காரச் சென்னே நகரம் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக ஒரு பக்கம் அதன் தேவைகள் அதிகரிக்கவும், கிராமங்களிலிருந்து நாள்தோறும் வேலே தேடி வருகின்ற பெருங்கூட்டம் நகரை மொய்த்துக் கொள்ளவும் அதன் காரணமாக சுகாதாரக் கேடு சூழவுமான நிலேமைகளே எண்ணினேன். அதுமட்டுமின்றி, எழிலார் நகரம் என்று எல்லோராலும் போற்றப்படுகிற சென்னேயை நோக்கி வருகின்ற ஏழை மக்கள் நினேத்த இடங்களில் குடிசை போட்டுக் கொள்வதும் அதில் அளவுக்கு மிகுந்த மக்கள் வாழ முயல்வதும் அதனுல் நகரின் எழில் சிதைவதும், தூய்மை கெடுவதுமான நிலேயை எண்ணி மனம் நொந்தேன். மேலும் கோடைக் காலத்தில் குடிசை தீப்பற்றி எரிவதும், மாரிக் காலத்தில் குடிசைகள் வெள்ளத்தில் மூழ்குவதும் அதனுல் ஆண்டுதோறும் தொடர்ந்து பாதிப்பு நிகழ்ந்து வருவதும் வேதனே நிகழ்ச்சியல்லவா? இதற்குப் பரிகாரம் எப்போது தோன்றுமோ என்று எண்ணிப் பெருமூச்சு விட்டேன்.

மாஸ்கோ நகரிலும் சென்னேயைப் பற்றி ஆழ்ந்த சிந்தனேயிலிருந்த போது திடீரென்று வண்டி நின்றது. வெளியே தலேயை நீட்டிப் பார்த்தபோது விடுதிக்கு வந்தடைந்ததைக் கண்டேன். எல்லோருடனும் நானும் இறங்கி விடுதிக்குள் சென்றேன்.

அவர்களின் உணவு முறை

சோவியத் நாட்டு மக்களின் உணவு முறையே அலாதியானது. காலையில் சிற்றுண்டி உண்பது நம் நாட்டில்தான் வழக்கத்தில் உள்ளது. சிற்றுண்டி என்ற சொல்லுக்கே குறைந்த அளவு உண்டி என்றுதான் பொருள்படும். நம்முடைய நாட்டின் நடைமுறையும் அதுவே. ஆனால் அங்கு சிற்றுண்டி உண்ணும் வழக்கமே இல்லை. பேருண்டிதான் உட்கொள்வார்கள். காலையில் உணவறையில் உட்கார்ந்ததும் முதல் தட்டு வருகிறது. அதில் ''சூப்'' இருக்கும். அது காய்கறி சூப்பாகவும் இருக்கும்; இல்லையெனில் மாட்டு வால் அல்லது ஆட்டுக்காலின் சூப்பாகவும் இருக்கும். அடுத்து கோதுமை ரவைக் கஞ்சி தட்டு நிறைய வைக்கிறார்கள். இனிப்பாக்கி உண்ணவிழைவோர் சர்க்கரை கலந்து பாலிட்டு உண்கிறார்கள். சிலர் கஞ்சியில் தயிர் போட்டு உப்புச் சேர்த்து உண்பதும் உண்டு. பின்னர் தட்டு முழுக்கப் பச்சைக் காய்கறிகளை நறுக்கி வைக்கிறார்கள். இது முடிந்ததும் ரொட்டித் துண்டுகளும், வெண்ணெயும் ''ஜாமும்'' சேர்த்து அளிக்கிறார்கள். இவற்றை உண்டு முடித்ததும் சூடான பாலோ, காபியோ வரும். ஆனால் பெரும்பாலும் அதை அருந்துவதில்லை. அதற்குப் பதிலாக தேசிய பானமான ''வோட்கா''வை சர்வசாதாரணமாக அருந்துகிறார்கள். இவை யாவற்றையும் உண்டு முடிக்கக் குறைந்தது ஒரு மணி நேரமாகி விடும். இதுதான் சோவியத் மக்கள் காலையில் உண்ணும் சிற்றுண்டி! இதை முடித்து விட்டால் பகலுணவு வரை காபி உட்பட எதையும் உட்கொள்ள விரும்புவதில்லை. மேலும் குடலுக்குத் தொல்லை கொடுப்பதை நிறுத்தி விட்டு, உடலுக்கும், மூளைக்கும் வேலை கொடுப்பதில் முனைகிறார்கள்.

பகல் உணவு என்றால் சோவியத் நேரப்படி மூன்று மணிக்கு மேல்தான் துவங்குகிறது. உணவு சூப்பிலிருந்து ஆரம்பமாகிறது. வழக்கம் போல் பச்சைத் காய்கறிகளை நறுக்கித் துண்டுகளாகத் தட்டு நிறைய வைப்பார்கள். உண்டபின் முட்டைகளை நிறைவேக்காடோ அரை

வேக்காடோ ஆக்கிக் கொண்டு வந்ததும் சிறிது நேரத்தில் மறைந்து விடுகிறது. ரொட்டித் துண்டுகளுடன், வெண்ணெய், ''ஜாம்'' ஆகியவற்றைக் கொண்டு வந்து வைப்பார்கள். இடையிடையே வாயைத் துடைத்துக் கொள்ள மேசையின் மேல் வைக்கப்பட்டிருக்கும் வெண்மையானதும் மெல்லியதுமான காகிதத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாட்டிறைச்சியைத் துண்டுகளாக்கிப் பதப் படுத்தி ரொட்டித் துண்டுகளோடு உட்கொள்ளுகிறார்கள். சமைக்கப்பட்ட மீனையோ கோழிக்கறியையோ மாட்டிறைச் சியையோ வேகவைத்துப் பதப்படுத்தித் தட்டு நிறையப் பரிமாறுகிறார்கள். இயற்கைக் கையோடு செயற்கைக் கைகளான ஸ்பூனும் போர்க்கும் துணைக்கு வரும். சிறிது இடையிடையே தேசிய பானமான ''வோட்கா'' அருந்திக் கொண்டேயிருப்பார்கள். பழச்சாறும் குடிப்பார்கள். கடைசியாக சுவை மிகுந்த ''ஐஸ்கிரீம்'' உண்பார்கள். இவையெல்லாம் உண்டு முடிக்கக் குறைந்தது ஒன்றரை மணி நேரம் பிடிக்கிறது. ''உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு'' என்ற தமிழகப் பழமொழி அங்கே பொய்த்துப் போகவில்லை. உண்டபின் ஓய்வு எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

நம்முடைய நாட்டில் மாலையில் சிற்றுண்டி என்று சிலர் வயிறு புடைக்க உண்பதும் சிலர் அளவோடு உண்பதும் மிகச் சிலர் காபியோ தேநீரோ மட்டும் அருந்துவதும் வழக்க மாக வைத்துக் கொண்டிருக்கிறோமல்லவா? அங்கே மாலை வந்தவுடன் சிற்றுண்டியைப்பற்றிய நினைப்பே எழுவது இல்லை.

பசித்தால்தான் புசிப்பது என்ற பழக்கத்தை கடை பிடித்து வருகிறார்கள். சத்து நிறைந்த உணவை உண்கிறார் கள். உழைத்தால்தான் ஊதியம் என்பதுபோல நன்கு உண்டால்தான் உடலுரத்தோடு உழைக்க முடியும் என்ற உண்மையை அவர்களிடம் கண்டேன். அதனால்தான் அவர்கள் அனைவருமே உடற்கட்டோடும் பொலிவோடும் விளங்குகிறார்கள்.

கடமையைக் கண்ணாகவும் காலத்தைப் பொன்னாகவும் கருதுகின்ற சோவியத் மக்கள் உண்ணுவதற்கு மட்டும் ஒன்றரை மணி நேரம் எடுத்துக் கொள்கிறார்களே என்று

எண்ணியபோது அவர்கள் உணவை நன்ருக மென்று சுவைத்து உண்கிருர்கள் என்று நானே உணர்ந்து கொண்டேன். நம் நாட்டு மக்களோ, அமெரிக்க நாட்டு மக்களோ உண்ணும் நேரத்தைவிட அவர்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்வதன் இரகசியம் இதுதான்.

திருமதி ஹூசி அணிந்திருந்த தி. மு. க. சின்னம்!

ஒருநாள் காலே திருமதி ஹூசி விடுதிக்கு வந்தபோது என்று மில்லாதவாறு உற்றுப் பார்த்தேன். அன்று அணிந்திருந்த உடை புதிதாக இருந்தது என்பதற்காக அல்ல. போட்டிருந்த மேலங்கியில் கண்ணைக் கவருகின்றவாறு ''பூவும், ''இலேயும்'' இணைந்த நூல் பின்னல் வேலேப் பாட்டினேக் கண்டேன். சிவப்பும் , கருப்பும் கீழும் மேலு மாகப் பூவில் திகழ்ந்தன. பூ வேலேப்பாட்டினேக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த என்னேக்கண்டு நண்பர்கள் நகைத் தனர். ''பார்க்கின்ற பார்வை திருமதி ஹூசியை விழுங்கி விடுவாய் போல் தெரிகிறதே'' என்ருர் நண்பர் கோதண்ட பாணி. ''நான் விழுங்க வில்லே; என்னேத்தான் ஹூசி விழுங்கி விட்டார்'' என்றேன். நான் கூறியது நண்பர் கோதண்ட பாணிக்குப் புரியவில்லே. என் கருத்தை அவருக்கு விளக்க முயன்றேன். ''திருமதி ஹூசியின் மேலங்கியைச் சற்று உற்றுப்பாருங்கள்; நூல் பின்னல் வேலேப்பாடான பூவிலும் இலேயிலும் நீங்கள் சிவப்பு வண்ணமும், கருப்பு வண்ணமும் காணவில்லேயா? எங்கள் கழகத்தின் வீரஞ் செறிந்து, தியாகம் மிளிரும் கொடியை நினேவு படுத்து கிறதே'' என்றேன். எப்போது பார்த்தாலும் கட்சியும் அரசியலுந்தாளு? என்று வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டு திரு. விநாயகமூர்த்தி என்னேப்பார்த்துக் கூறினுர்.

விடை பெற்ருேம்

ஜூலேத் திங்கள் நான்காம் நாள் காலே நாங்கள் தங்கி யிருந்த சோவியத் ஸ்கயாவிற்குத் தமிழக மாணவர்கள்

வெ. சுப்பையா, சுப்பிரமணியம் ஆகியோர் வந்தார்கள். நீண்ட நாட்கள் பழகிய நண்பர்கள்போல் எங்களிடம் நடந்து கொண்டார்கள். அறிஞர் அண்ணு எழுதிய 'ரங்கோன் ராதா' என்ற தொடர் கதை நூலேயும் கலேஞர் கருணுநிதி எழுதிய 'தேனலேகள்' என்ற சிறுகதை நூல் ஒன்றையும் நண்பர்களிடம் அன்பளிப்பாக அளித்தேன். அவர்களும் தங்களின் நினைவாக ஆங்கில-ருஷிய அகராதி ஒன்றையும் ருஷிய நாவல் நூல் ஒன்றும் பரிசளித்தார்கள். சோவியத்திலிருந்து புறப்படுவதற்கு நாங்கள் எல்லோரும் ஆயத்தம் செய்து கொண்டிருந்தோம். எதிர்பார்த்தவாறே தோழர் பொலியகோவ் நாங்கள் ஏறிச் செல்ல வேண்டிய விமானத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளேயும் செய்து விட்டு வந்து சேர்ந்தார்.

காலேச் சிற்றுண்டிக்கு அறைக்குச் சென்ருேம். இதற்குள் தாய்மைக் குணம் கொண்ட லூசியும் வந்து சேர்ந்தார். சிற்றுண்டி முடித்தோம். தோழர் பொலியகோவ் அவர்களுக்கு எங்கள் குழுவின் சார்பில் மேயர் சம்பந்தம் சந்தனக் கட்டையினுலான யானே ஒன்றும் விசிறி ஒன்றும் அளித்தார். அதுபோலவே திருமதி லூசிக்கு காஷ்மீர் பட்டுத் துண்டு ஒன்றும் சந்தனக் கட்டையினுலான விசிறி ஒன்றும், நினேவுப் பரிசாகஅளித்தார். இருவரும் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டு தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

சோவியத் ஸ்கயாவை விட்டு எங்கள் கார்கள் விர்ரென்று விமான நிலேயம் நோக்கி விரைந்தோடியது. அங்கே எங்களே வழியனுப்ப மாஸ்கோ மாநகராட்சி மன்ற உறுப்பினர் சிலர் காத்திருந்தனர். நகர சோவியத் சார்பாக சில புத்தகங்களேயும், புகைப்படங்களேயும் தந்தனர். விமானம் புறப்பட இன்னும் பத்து நிமிடங்களே இருப்பதாகவும் பயணம் செய்வோர் விமானத்திற்கு வருகை தர வேண்டியும் ஒலி பெருக்கியில் அறிவிக்கப்பட்டது. அன்பைச் சொரிந்த எல்லோரிடமும் ''தஸ்விதானியா'' என்று கூறி பிரியா விடைபெற்று விமானத்தில் ஏறினேம். சோவியத் மண்ணேவிட்டுப் பிரியும்போது சேயைப் பிரிந்து செல்லும்

தாயை ஒத்த நிலையில் எங்கள் மனம் துடித்தது. ஏனெனில் கோடிக் கணக்கான மக்களுக்கு வாழ்வளித்த மனித தெய்வம் மாவீரன் லெனின் பிறந்த பூமியைவிட்டுப் புறப் பட்டது விமானம். எங்கள் பயணம் தொடர்ந்தது. நாங்கள் ஏறிய ''ஏரோ பிளாட்'' விமானம் பொலிவு மிக்க போலந்து நாட்டை நோக்கிப் பறந்தது.